டாக்டர். பாலசுப்பிரமணியன்

# சமயந்தோறும் நின்ற தையலாள்



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சமயந்தொறும் நின்ற தையலாள்

முனைவர் சி. பாலசுப்பிரமணியன்
தமிழ்ப் பேராசிரியர்

நறுமலர்ப் பதிப்பகம்
சென்னை-600029.

முதற் பதிப்பு : டிசம்பர், 1991

விலை : ரூ. 15-00
(ரூபாய் பதினைந்து)

விற்பனை உரிமை :
பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை-108.

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை 600 014.

# முன்னுரை

ஞால மொழிகளுக்கெல்லாம் முன் தோன்றிய மூத்த தமிழ். காலந்தொறும் வளர்ந்துவரும் நீர்மைத்தாகும். தமிழின் பழந்தமிழ் சங்கத்தமிழ் எனவழங்கும் இடைக்காலத் தமிழ் தேவார மூவராலும், ஆழ்வார்கள் பன்னிருவராலும், மாணிக்கவாசகராலும் வளம் பெற்றது. 'ஞாலம் அளந்த மேன்மை தெய்வத் தமிழ்' என்பர் சேக்கிழார் பெருமான். 'பக்தி மொழி' என்று தமிழ்மொழி மேனாட்டு அறிஞர்களால் பாராட்டப் பெறும்.

'முன்னியது முடிக்கும் முருகன்' என்னும் முதற்கட்டுரையும், 'குன்று தோறாடல்' என்னும் இரண்டாவது கட்டுரையும் தமிழ்க் கடவுள் முருகப்பெருமானைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துத் தருகின்றது. 'முத்தித் தலங்கள்' என்னும் மூன்றாவது கட்டுரை திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, காசி ஆகிய தலங்களின் சிறப்பினைப் புலப்படுத்தி நிற்கின்றது. 'மூவர் தேவாரத்தில் சில புராண மரபுச் செய்திகள்' என்னும் கட்டுரை தலைப்புக்கேற்பச் செய்திகளைத் தந்து நிற்கிறது.

'சுந்தரரின் திருத்தலப் பயணம்', 'சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பட்ட முறை' ஆகிய ஐந்தாவது ஆறாவது கட்டுரைகள் நம்பியாரூரரைப் பற்றிய வரலாற்றினை ஒருவாறு விளக்கி நிற்கின்றது. ஏழாவது கட்டுரை 'மாணிக்கவாசகர்' பற்றியதாகும். 'திருவாசகத்தில் ஒரு வாசகம்' என்னும் எட்டாவது கட்டுரை மணிவாசகரின் பாட்டு நுட்பத்தினைப் பறைசாற்றி நிற்கின்றது! 'மேன்மைகொள் சைவ நீதி' எனும் ஒன்பதாவது கட்டுரை சைவ சமயச் சிறப்பினைப் புலப்படுத்தி நிற்கிறது. 'மக்களை நோக்கிய கொள்கையே சைவ சித்தாந்தம்' எனும் பத்தாவது கட்டுரை கருத்துத் திட்ப நுட்பமுறையில் அமைந்திருக்கக் காணலாம். 'அபிராமி அந்தாதி' 'அம்பிகையின் அருள்' ஆகிய இரு கட்டுரைகளும் அன்னையின் அருளை விளக்கி நிற்கின்றன. உமறுப் புலவரும் ஒண்டமிழும், 'அருட்பா—சீறாப்புராணம்—ஓர் ஒப்புநோக்கு' ஆகிய கட்டுரைகள் இரண்டும் இசுலாம் இலக்கியச் செவ்வியை உணர்த்தும். இந் நூல் தமிழ்த்தாயைச் 'சமயந் தொறும் நின்றதையலாள்' என்று காட்டுவதாக அமைந்துள்ளது.

—சி.பா.

# உள்ளுறை


| எண் | தலைப்பு | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னியது முடிக்கும் முருகன் | ... | 5 |
| 2. | குன்று தோறாடல் | ... | 12 |
| 3. | முத்தித் தலங்கள் | ... | 20 |
| 4. | மூவர் தேவாரத்தில் சில புராண மரபுச் செய்திகள் | ... | 29 |
| 5. | சுந்தரரின் திருத்தலப் பயணம் | ... | 39 |
| 6. | சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பட்டமுறை | ... | 55 |
| 7. | மாணிக்கவாசகர் | ... | 62 |
| 8. | திருவாசகத்தில் ஒரு வாசகம் | ... | 73 |
| 9. | மேன்மைகொள் சைவ நீதி | ... | 77 |
| 10. | மக்களை நோக்கிய கொள்கையே சைவசித்தாந்தம் | ... | 88 |
| 11. | அபிராமி அந்தாதி | ... | 92 |
| 12. | அம்பிகையின் அருள் | ... | 98 |
| 13. | உமறுப்புலவரும் ஒண்டமிழும் | ... | 104 |
| 14. | அருட்பா—சீறாப்புராணம் ஒப்புமை நோக்கு | ... | 114 |

# 1. முன்னியது முடிக்கும் முருகன்

பண்டைத் தமிழர் தாம் வாழ்ந்த நாட்டினை நானிலம் என்று வழங்கினர். மலையும் மலையைச் சார்ந்த இடம் குறிஞ்சி என்றும், காடும் காட்டைச் சார்ந்த இடம் முல்லை என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடம் மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடம் நெய்தல் என்றும் வழங்கப்பட்டன. மழை வளங் குறைந்து, முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தாம் இருக்க வேண்டிய வளமான நிலைமையில் இருந்து திரிந்த நிலையில் அந்நிலம் பாலை எனக் கூறப்பட்டது. ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த தமிழ்ப் பெருமக்கள் தாம் வழிபடுங் கடவுளாக ஒவ்வொரு தெய்வத்தைக் கொண்டனர். குறிஞ்சி நிலத்தார் முருகனையும், முல்லை நிலத்தார் மாயோனையும், மருத நிலத்தார் இந்திரனையும், நெய்தல் நிலத்தார் வருணனையும், பாலை நிலத்தார் காளியையும் தாம் வழிபடு கடவுளர் களாகக் கொண்டனர்,

முதன் முதலில் தோற்றங் கொண்ட நிலம் 'குறிஞ்சி' என்பர். பழந்தமிழ் மக்கள் மலையில் வாழ்ந்து, மலை நிலக் கடவுளாம் முருகனை வழிபட்டு, இயற்கையோடு இயைந்த இன்ப அன்பு வாழ்வு நடத்தினர், மலையில் சலசலத்து ஓடும் அருவி நீரில் குளித்து, காலை ஞாயிற்றின் கதிரொளியில் மூழ்கி, தண்ணிய இனிய நறுங்காற்றில் படிந்து, கனிமரந் தந்த சுவையுறு கனிகளையுண்டு, மானும் மயிலும் மகிழ்ந்தோடும்—ஆடும் ஆட்டத்திணைக் கண்டு. குயில் கூவும்

இசையினைச் செவிமடுத்து, தன் காதல் மனைவியொடும், கவிஞர் இளஞ்சிறாரொடும் ஒருவன் வாழும் வாழ்வு பல்லாற்றானும் சிறப்புடைத்தேயாகும் என்பது பொருள்மொழியன்றோ!

'முருகு' எனுஞ் சொல்லிற்குப் பல பொருள் காண்பர் அறிஞர். தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் மணம், இளமை, கடவுட்டன்மை, அழகு முதலியன நிறைந்ததொரு பொருளே முருகு எனக் குறிப்பர். இயற்கை மணமும், மாறா இளமையும், எல்லாப் பொருளையும் கடந்தொளிரும் தன்மையும் அழியா அழகும் இறைவனிடத்தில் இலங்குவது கண்டு, அப்பொருள்கள் முறையே உறைதற்கிடம் பெற்றுள்ள முருகன் என்னுஞ் சொல்லை அவ்விறைவனுக்குப் பழந்தமிழ் மக்கள் சூட்டியதன் திறமையை நோக்குழி அவர்களது கூர்த்தமதி புலனாகிறது என்று திரு. வி. க. அவர்கள் மேலும் கூறுவர்.

பழந்தமிழ்ப் பாட்டுக்களின் தொகுதி எட்டுத் தொகையாகும். 'எட்டுத் தொகை நூல்களுள் புறத்தைப் பற்றிப் பேசும் நூல் புறநானூறு ஆகும். புறநானூற்றில் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் 'பூவை நிலை'த் துறையமையப் பாடிய பாடலில், அம் மன்னனை முருகனோடு உவமித்துப் பேசியுள்ளார்.

'முருகொத் தீயே முன்னியது முடித்தலின்'

—புறம் ; 56 ; 14

இதன் பொருள், 'கருதியது முடித்தலான் முருகனை ஒப்பை' என்பதாகும். இதனால் முருகப்பெருமான் நினைத்ததை முடிப்பவர் என்பது பெறப்படும். பிறிதொரு புறப்பாடலில் முருகப் பெருமான்,

'முருகன் சீற்றத் துருகெழு குருசில்'

—புறம் : 16 : 12

என்று கூறப்பெற்றுள்ளார். 'முருகனது வெகுட்சி போலும் வெகுட்சியினையுடைய உட்குப் பொருந்திய தலைவ' என்று சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, புலவர் பாண்டரங்கனாரால் பாராட்டப் பெற்றுள்ளான்.

இவ்விரு தொடர்களையுங் கொண்டு நாம் ஆராயும் பொழுது, முருகன் போரில் அஞ்சாத திறன் உடையவன் என்பதும், தான் கருதிய வண்ணமே செயல்களை முடித்துச் சிறப்பவன் என்பதும் தெளிவாகின்றது. எனவேதான் முருகப் பெருமானுடைய தாளினையும் தோளினையும் சிந்தித்தால் தொல்லை கொடுக்கும் நம் தொல்லை வினைகள் மறைந்துபோம் என்று குறிப்பிடுகின்றது திருவிஞ்சைப் புராணம் :

அந்திப்போது அழகுறவே நடித்தருளும்
விழித்துணைவர் அருளும் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
அயிலெடுத்து வரும்செவ் வேளைச்
சிந்திப்போம் புகழ்ந்திடுவோம் மலரணிவேலர்
அவர்கமலத் தாளும் தோளும்
சிந்திப்போம் ஆதலினால் நமதுபழ
வினைகளெல்லாம் சிந்திப் போமே.

அதுமட்டுமன்று; பிரமன் எழுதிய எழுத்து; அதை மாற்ற முடியாது என்று அறியாமையால் அநேக மக்கள் கூறித் தங்கள் தலைவிதியை நொந்து கொண்டிருப்பர். அத் தலைவிதியையும் மாற்றும் திறன் முருகனுக்கு உண்டு என்பதனை அருணகிரிநாதர் அழகுறப் பின்வரும் பாடலில் புலப்படுத்துகின்றார்.

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்
பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி
யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும்
வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை
மேலயன் கையெழுத்தே.

உலகிற் சிலர் நாளும் கோளும் நமக்கேற்றனவாக இல்லை; எனவே என் செய்வது எனத் தயங்கி நிற்பர். அத்தகையோரையும் கந்தரலங்காரத்தில் இடித்துரைத்து, முருகன் தாளினை நம்பிக்கையோடு நலமுற வணங்கினால் நாளும் கோளும் ஒன்றும் செய்யா; தீவினை செயலற்று நிற்கும்; எனவே முன்னியது முடிக்கும் முருகன் முன்வரப் பரவி நிற்பீராக என்கிறார் அருணகிரியார்.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை
நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து
தோன்றிடினே.

முருகப் பெருமானை மறவாது மனத்தில் இருத்துவோர் என்றென்றும் தாழ்வின்றித் தகவுடன் வாழ்வர் என்று கந்தரலங்காரம் கவினுறக் கழறும்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்
தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்தனைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

தமிழ் நூல்களிலே மட்டுமன்றி வடமொழி நூல்களிலும் முருகப்பெருமானைப் பரவி நின்றால் பல பேறுகளையும் பெறலாம் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

'எவராயிருப்பினும் கார்த்திகேயனிடத்தில் பக்தி செய்பவர் புதல்வன் முதலிய பல பேறுகளைப் பெறுவர்,'

என்று வால்மீகி இராமாயணத்தின் பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் வாக்காக வியாசர் குறிப்பிடுகின்றார்.

விழியாக முன்னின்று தண்ணவி சுரந்தவர்கள்
வேண்டிய வரங் கொடுப்பான்
மெய்கண்ட தெய்வரித் தெய்வமல் லாற்புவியில்
வேறில்லை

உலகம் உய்யவே முருகப்பெருமான் திருவவதாரஞ் செய்ததாகக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் கூறுவர்.

அருவமு முருவு மாகி
  அநாதியாய்ப் பலவா யொன்றாப்
பிரமமாய் நின்ற சோதிப்
  பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
  கரங்கள் பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
  குதித்தனன் உலக முய்ய.

இவ்வாறு உலகம் உய்வதற்குத் திருவவதாரமெடுத்த திறலுடை முருகப்பெருமானின் 'இதமொழி பகரினும் மதமொழி பகரினும் ஏழைக்கிரங்கும் பெருமா'ளாக விளங்குகின்றார். எனவேதான், தமிழ்க் கடவுளாக விளங்குகின்ற முருகப்பெருமானை அவருவக்கும் முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் பெருவிருப்பு உடையவன் என்று அனுபவ முறையில் அறிந்த பெரியோர் பேசுவர் :

'மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்•போன்'

எனவே, அடியார்கள் 'சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு', திருமுருகப்பெருமானை உன்னிச் சென்றால் 'இன்னே பெறுக நீ முன்னியவினையே" என்றபடி நினைத்தவெல்லாம் நிச்சயம் பெறலாம். எனவே எண்ணுவன நல்லவே எண்ணவேண்டும்; அவ்வாறு எண்ணியனவற்றைத் திண்ணமாய்ப் பெற வேண்டும்; அவ்வாறு திண்ணமாய்ப் பெறுவதற்கு வேண்டுவன இவை யிவையென்று அருணகிரிப் பெருமான் தாமியற்றிய கந்தரலங்காரக்கவினார் பாடலொன்றில் கிளத்தக் காணலாம்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத்துணைமுரு காவெனு
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவர் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

—கந்தரலங்காரம் : 70

இதுகாறும் கூறியவற்றால், பண்டுதொட்டு இன்று வரை நம் தமிழ் மக்கள் வணங்கிவரும் முருகப் பெருமான் முன்னியது முடித்து வைக்கும் திறனுடையவன் என்பதும், அவரை நினைந்து நிற்பவர் நாளாலும், கோளாலும், வினையாலும் நலைபட்டு நிற்க மாட்டார் என்பதும், வள்ளியின் 'தேனூறு கிளவிக்கு வாயூறி' நின்ற கலியுக வரதனாம், கார்த்திகேயனாகிய முருகப்பெருமான் முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் பெருமனங் கொண்ட பெருந்தகை என்பதும், அவர் தாளும், திருப்பெயரும், தோளும், வடிவேலும், மயிலும் விழிக்கும், மொழிக்கும், பழிக்கும், தனி வழிக்கும் முறையே துணையாக அமைவன என்பதும் பெறப்படும். எனவே தீராத வினை தீர்த்தருளும் மாலோன் மருகனை, வள்ளி மணாளனை, புள்ளி மயில் வேலனை நாள் தோறும் வணங்கி நற்பேறு பெற்று உய்வோமாக.

# 2. குன்றுதோறாடல்

**குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்**
**புன்றலைய பூதம் பொருபடையாய்"—என்றும்**
**இளையாய் அழகியாய் ஏறூ ர்ந்தான் ஏறே**
**உளையாயென் னுள்ளத் துறை.**

அமிழ்தினுமினிய நம் செந்தமிழ் மொழி முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பொலிந்து நிற்பதாகும். தொன்மைச் சிறப்புடன் தனிப்போக்கினையும் தகைசால் இலக்கியங் களையும் தன்னகத்தே கொண்டிலங்குவது குன்றாத வாழ்வுடைய நம் தமிழ் மொழியேயாகும். 'அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல் பிற இலக்கியங்களில் இல்லை' என்பது அறிஞர் கூற்றாகும்.

சங்க இலக்கியங்களால், பழந்தமிழர் இயற்கையோ டியைந்த இன்ப, அன்பு வாழ்வு வாழ்ந்து வந்ததை அறிய முடிகின்றது. இவை இயற்கையின் பின்னணியில் மக்கள் வாழ்க்கையினைக் கிளத்திக் கூறுகின்றன. தொல் காப்பியனார் கூறும் முதற்பொருளும் கருப்பொருளும் இயற்கையின இனிய பெற்றியினை எடுத்தியம்ப, அவர் கூறும் உரிப்பொருள் மக்கள் வாழ்வினை வகையுறப் புனைந்து நிற்கின்றது. எனவே இயற்கையில் இலங்கும் அழகினைப் போற்றி மகிழ்ந்தனர் பழந்தமிழர் எனலாம். இயற்கையை இனிது போற்றியதோடு, இயற்கையில் இறைவன் கொலு வீற்றிருப்பதாக எண்ணி, அவ் வெண்ணத்தின் அடிப்படையில் இறைவனை வழிபடவும்

செய்தனர் நம்மவர்கள். அவ்விறைவனை முருகன் என்றனர். அழகு உறையும் குன்றுகளிளெல்லாம் கோலக்குமரன் கொலுவீற்றிருப்பதாகக் கொண்டு, ஆங்காங்கு அவனை விழாவெடுத்து வழிபட்டனர்.

அழகுக் கடவுளாக உறையும் முருகனைத் தமிழ்க் கடவுளாகவும் கொண்டனர் நந்தமிழர், 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன் முருகன்' என்பது அருணகிரிநாதர் அருள்மொழி.

## அறுபடைவீடுகள்

ஆறு படை வீடுகள் முருகனுக்குரியனவாகத் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகின்றன. முதலாவதாகக் கூறப்படும் படைவீடு திருப்பரங்குன்றமாகும். சூரனை வென்று தேவருலகினைக் காத்த முருகனுக்கு இந்திரன் தான் வளர்த்த தேவசேனை என்னும் நங்கைநல்லாளைத் திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்வித்துக் கொடுத்த தாகக் கந்தபுராணம் கூறும். பழந்தமிழ் நூல்களான பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, மதுரைக்காஞ்சி முதலான நூல்களும் திருப்பரங்குன்றத்தினை முருகவேள் உறையும் தலமாகக் குறிப்பிடுகின்றன.

இரண்டாவது படைவீடான திருச்சீரலைவாய் எனப் படும் திருச்செந்தூர் மிகப் பழமையான தலமாகும். பாண்டியன் இலவந்திகைத்துஞ்சிய நன்மாறனை வாழ்த்த விரும்பிய மருதவிளநாகனார் என்னும் புறநானூற்றுப் புலவர் திருச்செந்தூரில் கடலின் அலைகளால் மோதப் படுவதும் முருகவேள் எழுந்தருளியிருப்பதுமாகிய திருக்கோயிலின் முன்னுள்ள கடற்துறையில் கடுங் காற்றால் திரட்டித் தொகுக்கப்பெற்ற மணலை விடப் பல்லாண்டு காலம் நீ வாழ்வாயாக என்று வாழ்த்தியருளி

யிருப்பதைப் புறநானூற்றின் 55 ஆம் பாடலால் அறிய முடிகிறது.

மூன்றாவது படைவீடு திருவாவினன்குடி என்றும், சித்தன் வாழ் மூதூர் என்றும் சொல்லப்படும் பழநித் திருத்தலமாகும். இத்தல மகிமையினைக் கந்தரலங்காரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது;

படிக்கின் றிலைபழ னித்திரு நாமம் படித்தவர்தான்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுகி யாமலிட்டு
படிக்கின் றிலைபர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே
—கந்தரலங்காரம் : 75

நான்காவது படைவீடு திருவேரகமாகும். திருவேரகத்தை மலைநாட்டிலுள்ளதொரு திருப்பதி என்று கூறுவர். நச்சினார்க்கினியர். ஆனால் அருணகிரிநாதர் சோழ நாட்டிலுள்ள சுவாமிமலையே திருப்பதி என்று கருதியமை,

காவிரி யாற்றுக்கு ளேவரு
வளமைச் சோழநன் னாட்டுக்குள் ஏரக
நகரிற் சீர்பெறும் மோட்சத்தை யேதரு பெருமாளே

எனவும்,

யாவு மலைகொண்டு னகத்த காவிரி புறம்பு சுற்றும்
ஏக கமமர்ந்த பச்சை மயில்வீரா

எனவும் வரும் திருப்புகழ்ப் பாடற்பகுதிகளை நோக்கின் அவர் கருத்துப்புலனாகும்.

ஐந்தாவது படைவீடு குன்றுதோறாடல் என்பதாகும். குன்றுதொறும் குமரன் உறைகின்றான் என்பது

பழந்தமிழர் கொண்ட நம்பிக்கை, முருகனைக் குன்று, தொறும் ஆடிவரும் குமரவடிவேலன்' எனக் கூறுவர். இது குறித்தே தொல்காப்பியனார் 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்றார். குறிஞ்சி நிலக் கோமானாகக் குமரனைக் கோலங்கொண்ட நாடு இது. குன்றுகளில் எல்லாம் அவன் அருட்டிருப் பாதங்கள் பதிகின்றன என்பது பெரியோர் முடிபு. பதினெட்டாம் நூற்றாண்டின் மிகப் பெரிய புலவரும் 'கற்பனைக் களஞ்சியம்' என்று போற்றப்பெறுபவரும் ஆகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் இளவல் கருணைப் பிரகாச சுவாமிகளின் அருமையானதொரு கருத்தினைத் தம் சீகாளத்திப் - புராணத்தில் வெளியிடுகிறார். 'கல்' என்பதற்கு 'மலை' என்ற பொருள் தமிழில் உள்ளதை நாம் அறிவோம். இதனை வைத்துக் கொண்டு ஓர் விழுமிய நயந்தோன்றும் வியத்தகுகருத்தினை வெளியிடுகின்றார் அவர். "முருகப் பெருமான் என் மனத்தைவிட்டு நீங்காமல் எஞ்ஞான்றும் நீக்கமற நிறைந்திருக்கும் காரணத்தை யான் கண்டு கொண்டேன். அது என்னவெனில், முருகன் தன் மன முவந்து வாழும்கற்களில் (மலைகளில்) உன் நெஞ்சம் ஒரு கல்லே என்று மயங்கித் துணிந்து என் நெஞ்சக் கனகல் லில் கொலு வீற்றிருக்கின்றான்போலும்'' என்று பாடிப் பரவுகின்றார்.

இச்சீரிய கருத்தினையே தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களும் 'முருகன் அல்லது அழகு' என்னும் தம் அரிய நூலில் விளக்கமுறப் புலப்படுத்திக்காட்டியுள்ளார். எங்கெங்கெல்லாம் அழகு கொலு வீற்றிருக்கின்றதோ— களிநடம் புரிகின்றதோ, அங்கங்கெல்லாம் அழகுக் கடவுளாம் அணிமுருகன் நெஞ்சமர்ந்து உறைகின்றான். கண்ணைக் கொள்ளை கொள்ளும் கவினார் அழகு

துலங்கும் இடம் மலையிடங்களே. தமிழ்நாட்டின் மலைகளிலெல்லாம்—குன்றுகளிலெல்லாம் கொலுவீற்றிருக்கின்றான் வேலாயுதம் தரித்த கோலாகலனாம் குன்றெறிந்த குமரப்பெருமான்.

ஐந்தாவது படைவீடாகத் திருத்தணி என்பதையும் குறிக்கும் வழக்கம் உண்டு. செரு தணி—என்பது திருத்தணியாயிற்றென்பர். குன்றவரை வென்று குறமகளாம் வள்ளியொடும் வாழும் மலை என்னும் பொருளில் வழங்குகின்றது என்பர். செரு என்பது கோபத்தையும், தணி என்பது தணிந்து தன்னிலையடைந்ததையும் குறிக்கும். எனினும் எல்லாத் திருமலைகளையும்—முருகன் கோயில்களையும் ஐந்தாம் படை வீடாகக் கொள்ளலாம். அருணகிரியாரும் 'வடிவ தாமலை யாவையுமேனிய தம்பிரானே', என்றும், 'பலகுன்றிலுமமர்ந்த பெருமாளே என்றும், 'குன்றுதோறாடல் மேவு பெருமாளே' என்றும் தம் திருப்புகழில் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத் தக்கது.

ஆறாவது படை வீடு பழமுதிர் சோலையாகும். இவ்வாறு படை வீடுகளையும் திருமுருகாற்றுப்படை கூறிய வரிசை முறையிலேயே கந்தபுராணக் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களும், கந்தரந்தாதியின் முதற் செய்யுளும் குறிப்பிடுகின்றன.

முருக வழிபாடு ஆரவாரத்தோடு நிகழும். குழல் அகவும்; யாழ் முரலும்; முழவு அதிரும்; முரசு இயம்பும் என்று பட்டினப்பாலையில் கடியலூரார் உருத்திரங்கண்ணனார் குறிப்பிட்டுள்ளார். இம்முறையில் பழந்தமிழர் பண்பாட்டோடு—நம்பிக்கையோடு முருகனுக்கு விழா வெடுத்தனர்.

தேவேந்திரன் தரத் தேவசேனையைக் கற்பு மணம் புரிந்த முருகன் தினைப்புனமாது வள்ளியையும் தாமே விரும்பிக் களவு மணங்கொண்டு கற்பில் தலைப் படுகின்றார். 'யான் எனது அற்ற அடியவரிடம் இறைவன் தானே வந்து நல்குவான்' என்ற உயரிய தத்துவத்தை வள்ளித் திருமணம் விளக்குகின்றது என்பர் பெரியோர். எனவே தேவசேனையைக் 'கிரியா சக்தி' என்றும், வள்ளியை 'இச்சா சக்தி' என்றும், வேலினை 'ஞான சக்தி' என்றும் கூறுவர். இது போன்றே மயிலினை ஆணவம் என்றும், கோழியினைச் சிவஞானம் என்றும், மயிலாகிய ஆணவத்தினை அடக்கித் தான் அமரும் வாகனமாக்கிக் கோழியாகிய சிவஞானத்தைக் கொடியாக உயர்த்தித் தன் கையில் பிடித்துள்ளார் முருகப்பெருமான் என்பர் அறிஞர். முருகனுக்குச் சிறந்த படையாக விளங்குவது வேலாயுத மாகும். எனவே பெரியார் விழிக்குத் துணையாக முருகனின் மலர்ப்பாதங்களையும், மொழிக்குத் துணையாக 'முருகா' என்னும் திருப்பெயரினையும், பழிக்குத் துணையாக அவன் தன் பன்னிரு தோளினையும், வழிக்குத் துணையாக வேலினையும் மயிலினையும் முறையே கொள்வர். அருணகிரியார் பாடும் அவ்வழகிய பாடல் வருமாறு:

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும்
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவர் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

—கந்தரலங்காரம்-70

மேலும் காதிர்காமத் திருப்புகழில் அருணகிரியார் 'இதமொழி பகரினும் மதமொழி பகரினும் ஏழைக்கிரங்கும் பெருமாளே' என்று ஏழைக்கிரங்கும் ஏந்தலின் இதயத் தினைப் புகழ்ந்துரைத்துள்ளார்.

ஊமையாகப் பிறந்து செந்தில் முருகன் அருளால் பேசும் திறம் பெற்ற குமரகுருபரர், முருகன் வள்ளியின் 'தேனூறு கிளவிக்கு வாயூறி' நின்றதைக் குறிப்பிட்டு,

**வழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்**
**வேண்டிய வரங்கொடுப்பான்**
**மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவியில்**
**வேறில்லை**

என்று முருகனே முழுமுதற்பொருள் என்று மனமாரப் பாராட்டி வணங்குகின்றார்.

முருகனுக்குரிய விரதங்கள் வெள்ளிக்கிழமை, கார்த்திகை, சஷ்டி முதலியனவாகும். கச்சியப்பர், அருணகிரியார், குமரகுருபரர், முதலிய புலவர் பெரு மக்களை ஆட்கொண்ட அண்ணல் அவர். 'குமாராய நம', 'சரவணபவ' என்ற ஆறெழுத்து—சடாட்சரம் முருகப் பெருமானுக்குரிய மந்திரமாகும். எனவே தமிழ்த்தெய்வ மாம் முருகன் திருப்பெயரினை உள்ளம் உருகி ஓதுவோரை நாளும் கோளும் ஒன்றும் செய்யா. அஞ்சுமுகந் தோன்றினால் முருகனின் ஆறுமுகந்தோன்றும். நெஞ்சில் ஒருமுறை எண்ணினால் இருமுறை தோன்றி 'அஞ்சாதே' என்று கூறி, தெய்வ இளநலம் காட்டி அடியவர்க்கு அருள் பொழிவான் திருமுருகன் என்பது திண்ணம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

—கந்தபுராணம்

நாளென் செயும்வினை தானென் செயும்எனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

# 3. முக்தித்தலங்கள்

உலகில் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் வீட்டிற்கும் சுற்றத்திற்கும் நாட்டிற்கும் ஆற்றவேண்டிய கடமைகளைச் செவ்வனே ஆற்றி, அறநெறி போற்றும் அருளாளர் துணையுடன் இறையருளுள் கலத்தல் இன்றியமையாத வாழ்வுப் பயனாகப் போற்றப் பெறுகின்றது. இவ்வுலகச் சமயங்கள் யாவும் இக்கருத்தை வலியுறுத்தக் காணலாம். அவற்றுள் சைவ சமயம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் வாழ்வியல் நெறியைச் சிறப்புறச் சித்திரிக்கின்றது.

ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு

என்னும் பழம்பாடல் இதற்குச் சான்றாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இந்நான்கும் 'உறுதிப் பொருள்கள்' என உரைக்கப் பெறுகின்றன. வடமொழி அறிஞர்கள் இவற்றைப் 'புருஷார்த்தம்' என்று கூறுவர். உறுதிப் பொருள் நான்கனுள் வீடு என்பது உலகக்கட்டு களிலிருந்து விடுதலை பெற்று முத்தியடைதலாம். முத்தி யடைதலையும், முத்தியளிக்கும் கடவுள் ஆற்றலையும் முத்தியடையத்தக்க தலங்களையும் நம்முடைய முன்னோர் கள் நம்பி வந்தனர். அவர்கள் தம் நம்பிக்கையை நூல் களின்வழி வெளிப்படுத்தியும் உள்ளனர். அச்சான்றோரின்

நம்பிக்கைகளுள் ஒன்றாகிய முத்தியளிக்கும் தலங்கள் குறித்து இவண் நோக்கலாம்.

## முத்தித் தலங்கள்

தமிழ்ச் சான்றோர் முத்தியளிக்கும் தலங்களாக நான்கு ஊரைக் குறிப்பிடுவர். திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, காசி என்பன அவ்வூர்கள். இவற்றுள் திருவாரூர் பிறக்க முத்தி தருவது; சிதம்பரம் தரிசிக்க முத்தி தருவது; திருவண்ணாமலை நினைக்க முத்தி தருவது; காசி இறக்க முத்தி தருவது. இக்கருத்துகளை,

தெரிசனம் செயத் தில்லையிற் கமலையிற் செனிக்க
மரணமாய்விடக் கங்கைசூழ் வாரணாசியிலே
அருணை மாநகர் நினைத்திட முத்தியஞ் செழுத்தும்
பிரணவத் தொடெப் பேர்களு முரைக்கிலும் பெறலாம்

என்னும் அழகிய பாடலில் காணமுடிகின்றது நல்ல எண்ணம், நல்ல செயல், நல்ல பண்பு முதலியவற்றால் நற்கதி பெற்றோர் வாழும் திருத்தலங்களாக இவை போற்றிக் கூறப்பெறுகின்றன. கட்டறுத்து வீடுபெற எண்ணும் ஒவ்வோர் உயிரும் இத்தலங்களை நாடுதல் இயல்புதானே! இனி இத்தலங்களின் சிறப்புகளை நுணுகி நோக்குதல் நல்லது.

## திருவாரூர்

இன்றைய தஞ்சை மாவட்டத்தில் உள்ள சைவத் திருப்பதி திருவாரூர். தேவார மும்மூர்த்திகளாகிய ஆளுடைய பிள்ளை, அப்பர், ஆரூரர் ஆகிய மூவரின் பாடல் பெற்ற தலமாக இவ்வூர்த்திகழ்கின்றது. வன்மீகநாதர் என்னும் திருப்பெயருடன் இக்கோயிலின்

மூர்த்தி எழுந்தருளியுள்ளார். அவர் இருக்கும் இடத்தைத் திருமூலட்டானம் என்றும் பூங்கோயில் என்றும் வழங்குவர். வன்மீகநாதர் என்பதைப் புற்றிடங்கொண்டார் என அழகுத் தமிழில் உரைப்பர். இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் உற்சவமூர்த்தி தியாகராசர். இவருக்கென்று தனிச்சந்நிதி உள்ளது. அதனைத் தேவசபை என்பர். அல்லியங்கோதை, கமலாம்பிகை என்னும் இருஅம்பிகைகள் இக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ளனர்.

திருவிழாக்காலங்களில் தியாகராச பெருமானுடைய நடனம் சிறப்புடையதாகப் போற்றப்பட்டு, பக்தர்கள் பலராலும் கண்டு களிக்கப் பெறுகின்றது ஆடல்வல்லாரின் அந்நடனத்தை 'அசபா நடனம்' எனக் குறிப்பர். அழகும், பொலிவும், தூய்மையும், அருளும் நிறைந்த இடமாக இக்கோயில் விளங்குகின்றது. இக்கோயிலுக்கென்றுள்ள தடாகம் கமலாயம் என்னும் பெயருடையது. இதனடிப்படையில் இவ்வூருக்குக் 'கமலை' என்ற பெயரும் உள்ளது. இத்தடாகம் 18 ஏக்கர் பரப்புடையது. 'திருவாரூர்த் தேரழகு' என்பது இவ்வூர்த் தேரின் சிறப்பு நோக்கித் தோன்றிய பழமொழியாகும். வழிபாட்டு ஒலியும், வேத மந்திரங்களின் ஒலியும், பல்லியப் பாடல்களின் ஒலியும் இவ்வூரில் ஒலித்தவண்ணம் இருந்தமையை,

**வேத ஓசையும் வீணையின் ஓசையும்**
**சோதி வானவர் தோத்திர ஓசையும்**
**மாதர் ஆடல் மணிமுழ வோசையும்**
**கீழ ஓசையு மாய்க்கிளர் வுற்றவே**

என்னும் சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணப் பாடல் சுட்டுகின்றது. அறியாமல் பசுவின் கன்றைக் கொன்ற தன் ஓரே மகனைத் தேர்க்காலில்

இட்டுக்கொன்று பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழன் இவ்வூரில் செங்கோலோச்சியதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

இத்தகு சிறப்புகள் வாய்ந்த இவ்வூரில்தான் நபிநந்தியடிகள் நாயனார் பூசை செய்து வழிபட்டார்; மேலை ஞானப்பிரகாசர் இங்கே வழிபாடு செய்தார்; விறன்மீண்ட நாயனார் இத்தலத்தில் நெடுங்காலம் தங்கியிருந்தார். சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வூருக்கு வந்து பரவை நாச்சியாரை மணந்துகொண்டு வாழ்ந்தார்; இவ்வூரிலே தான் திருத்தொண்டத் தொகையைப் பாடினார். சுந்தரர் பரவையார் இருவரும் எழுந்தருளியுள்ள பரவை நாச்சியார் கோயில் இவ்வூரில் உள்ளது. சங்கீத மும்மூர்த்திகள் என அழைக்கப்பெறும் முத்துசாமி தீட்சிதர், தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரும் இவ்வூரில் தோன்றியவர்கள்.

இத் தலத்தைப் பற்றிக் கூறும் இலக்கியங்கள் பல எழுந்துள்ளன. கமலாலய சிறப்பு, திருவாரூர்ப் புராணம், தேரூர்ந்த சோழபுராணம், தியாகராச லீலை, திருவாரூர் நான்மணிமாலை, தியாகராசர் பள்ளு, குறவஞ்சி, திருவாரூர்ப் பன்மணிமாலை, கமலாம்பிகை பிள்ளைத் தமிழ், திருவாரூர்மாலை, கமலாம்பிகை மாலை, திருவாரூர் ஒருதுறைக்கோவை, தியாகராசர் கழிநெடில், திருவாரூர் உலா, திருவாரூர்கோவை என்னும் நூல்கள் அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். இத்தகைய சிறப்புகள் பல வாய்ந்த ஊரில் பிறப்பது முத்தி அளிக்கும் என்னும் மரபு ஏற்புடைத்தே.

## சிதம்பரம்

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிப்பதாக உரைப்பர். வேடன் பிள்ளையார் கோயில், செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில், சேக்கிழார் கோயில், கமலீசுரன் கோயில், தேரடிப் பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில், காளியம்மன் கோயில், வீரபத்திரசாமி கோயில், செல்லியம்மன் கோயில், நந்தனார் கோயில், கூத்தாடும் பிள்ளையார் கோயில், இளமையாக்கினார் கோயில், அனந்தீசுவரர் கோயில், தில்லைக் காளியம்மன் கோயில், நரமுகப் பிள்ளையார் கோயில், மத்தியந்தவேசுவரர் கோயில் என்னும் கோயில்கள் இவ்வூரின் கண் அமைந்துள்ளன. இவ்வாறு கோயில்கள் நிறைந்த ஊர் என்பதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். சிற்றம்பலம், புலியூர், தில்லை, சித்திர கூடம் என்பன இவ்வூருக்கு வழங்கப் பெறும் வேறு பெயர்கள். ஐம்பூதத் தலங்களும் இஃது ஆகாயத்தலம். இங்குள்ள இலிங்கம் ‘ஆகாயலிங்கம்’ எனக் குறிக்கப் பெறுகின்றது. தேவார மும்மூர்த்திகளின் பாடல் பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்று. சேக்கிழார் பெருமான் தம்முடைய திருத்தொண்டர் புராணத்தை இத்தில்லையம்பலத்தேதான் அரங்கேற்றம் செய்தார். பொன்னம்பலத்தே நடராசப் பெருமான் திருவடி தூக்கி ஆடுகின்ற நடனக்காட்சி கண்ணாரக் கண்டுகளிக்கத் தக்கது. அந்நடனத்தை ‘நாதாந்த நடனம்’ எனக் குறிப்பர்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், கல்லாடர், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கண்டராதித்தர், கருவூர்த் தேவர், பூந்துருந்தி நம்பிகாடநம்பி, பட்டினத்தார், அருணகிரியார், சேரமான் பெருமாள் உமாபதிசிவம் முதலிய பலர் சிதம்பரத்தைப் பாடியுள்ளனர். இவ்வூரில் 63 நாயன்மார்

களின் சிலைகளும் வழிபாட்டுக்குரிய வகையில் கோயிலின் உள்ளே அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகு சிறப்புகள் நிறைந்த இவ்வூரில் மாணிக்க வாசகர், திருநீலகண்டர், திருநாளைப்போவார், கூற்றுவ நாயனார் கோச்செங்கட்சோழ நாயனார், கணம்புல்ல நாயனார், மறைஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் முதலிய பெருமக்கள் முத்தியடைந்தனர். இதன் காரணமாகவும் இத்தலத்தின் மாட்சிமை புலனாகும்.

சிதம்பரத்தின் பெருமைகளைப் பெரியபுராணம், கோயிற்புராணம், சிதம்பர புராணம், புலியூர்ப் புராணம், தில்லைக் கலம்பகம், சிதம்பரச் செய்யுட்கோவை, சிதம்பரநாதர் பதிகம், புலியூர் வெண்பா, சோழமண்டல சதகம், கந்தபுராணம் போன்ற நூல்கள் விதந்தோதியுள்ளன. கண்ணுதற் கடவுளின் தன்னருள் வேண்டுவோர் இத்தலம் நாடி வந்து ஆடுகின்ற அவ் அண்ணலைத் தரிசித்துப் பிறவிப் பயன் பெறுகின்றனர்.

## திருவண்ணாமலை

ஐம்பூதத் தலங்களுள் அக்கினித் தலமாகக் கருதப் பெறுவது திருவண்ணாமலை என்னும் திருப்பதி. இங்குள்ள மலை இறைவன் உருவமாக—சோதி வடிவமாகப் புகழ்ப் பெறுகின்றது. இம்மலையை வலம்வர வேண்டுமெனில் $8\frac{1}{2}$ மைல் தூரம் நடக்க வேண்டும். அந்த அளவிற்கு பெரிய மலையாக இஃது உள்ளது. இத்தலத்தை நினைத்தாலே முத்திகிட்டும் என்னும் நம்பிக்கை காலங்காலமாகத் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

இயற்கையழகும், சீரான தட்பவெட்ப நிலையும் இவ்வூரில் இயல்பாக அமைந்திருத்தல் காணலாம். இங்கேயுள்ள கோயில் அண்ணாமலையார் கோயில் என வழங்கப் பெறுகின்றது இங்குள்ள அம்மன் உண்ணாமுலையம்மை என்னும் பெயரினள். அப்தகுசாம்பாள் எனவும் அம்மனைக் குறிப்பர். நான்கு பெரிய மதில் வாய்களிலும் உயரிய கோபுரங்கள், கோயிலின் உள்ளே ஐந்து நடுந்தரக் கோபுரங்கள் பெற்று அமைதியான அழகுடன் இக்கோயில் திகழ்கின்றது. இவ்வூரில் பல குளங்கள், ஆயிரக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம் ஆகியன அமைந்து அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

தேவார மூர்த்திகளின் பாடல் பெற்ற தலமாகவும், திருப்புகழ் பாடல்பெற்ற தலமாகவும் விளங்குதல் இவ்வூரின் சிறப்புகளுள் குறிப்பிடத்தக்கது. இங்கு நடைபெறும் திருவிழாக்களில் கார்த்திகை தீபவிழா தலைசிறந்த விழாவாகும். இவ்விழா அடிமுடி தேடிய ஐதிகத்தைப் பின்பற்றியது. அரியும் அயனும் தம்மில் யார் உயர்ந்தவர்கள் எனப் போட்டி கொண்டனர். இறைவன் அவர்களுக்குத் தம் உண்மையான ஆற்றலை உணர்த்த திருவிளையாடல் ஒன்றை மேற்கொண்டார். அதன்படி தம்மைச் சோதிமலையாக நிறுத்திக்கொண்டார். அரியும் அயனும் முறையே வராக அவதாரமும் அன்னப்பறவை அவதாரமும் எடுத்து இறைவனின் அடிமுடியைத் தேடினர். இறைவனின் திருவிளையாடலை உணராத அவ்விருவரும் பெருமுயற்சி மேற்கொண்டு இறுதியில் அடிமுடி காணாது அமர்ந்தனர். அந்தக் கதையை நினைவூட்டுவது போன்று இம்மலையில் கார்த்திகைத் திருவிழா நடைபெற்று வருகினறது.

## காசி

கங்கையைச் சார்ந்த திருப்பதிகளில் காசியே முதன்மை பெற்றது; பாரத நாட்டின் கணக்கற்ற திருப்பதி களிலும் தலைசிறந்தது. இதற்கு அவிமுக்த க்ஷேத்திரம், ஆனந்தவனம், பெருமயானம் என்று பெயர். இங்கே வந்து வசித்தாலே நற்கதி அடையலாம்; இங்கு உடலை நீத்தலே முத்திக்கு வழியாகும். சிவபிரான் இங்கே தெருத் தெருவாக அலைந்து கொண்டு மடியும் மக்கள் காதில் தாரக மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருக்கிறார் என்பர்.

காசி இந்து சமயங்களின் வளர்ச்சிக்கு நிலைக்களனான இடமாகும். வியாசமுனிவர், மகாவீரர், புத்தர், சங்கரர், துளசிதாசர் முதலிய சமய ஆசாரியர்கள் இப்புண்ணியத் தலத்தில் வாழ்ந்தனர். இங்கே நூற்றுக்கணக்கான கோயில் கள் உள்ளன. அவற்றுள் விசுவநாதர், அன்னபூரணி, விசாலாட்சி, துர்க்கை, பிந்துமாதவர், கேதாரேசுவரர் கோயில்கள் முக்கியமானவை.

தென்னாட்டு மக்கள் காசிக்கும், வடநாட்டு மக்கள் இராமேசுவரத்திற்கும் சென்று வருதல் இன்றும் நாம் காணக்கூடிய நிகழ்ச்சியாகும். காசியிலிருந்து கொண்டு வந்த கங்கைநீரைக் கொண்டு இராமேசுவரக் கோயிலில் அபிசேகம் செய்தலை யாவரும் அறிவர். அவ்வகையில் இத்தலங்கள் இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும்—வடக்கிலிருந்து தெற்குவரை யாவரும் உடன்பிறந்தவர்களே என்னும் கருத்து வலுப்பெறுதற்கும் மிக அடிப்படையான தொண்டினை ஆற்றிவருதல் கண்கூடு. ஆகவே, காசி முத்தியளிக்கும் தலமாக இருப்பதுடன் ஒருமையுணர்வை ஊட்டும் தலமாக இருப்பதையும் உணரலாம்.

பாரதத் திருநாட்டில் இடம்பெற்றுள்ள மேற்சுட்டிய திருத்தலங்கள் மக்களுக்கு முத்தியளிக்கக் கூடிய தலங் களாக இருப்பதுடன், மக்களிடையே நேய உணர்வை வளர்க்கவும், அதன் வாயிலாக ஒருவரை ஒருவர் மதித்துப் போற்றி வாழவும், குறுகிய மனபபான்மையிலிருந்து விடுபட்டு உலகந்தழுவிய மனித நேய உணர்வைப் போற்று மாறு விரிந்து பரந்த விசாலமான உளப்பாங்கைப் பெறவும் பெரும் பங்களிக்கின்றன. இவை நம் நாட்டின் அருள்நலத்தை உலகோர்க்கு எடுத்துக்காட்டும் வளம் கெழுமிய திருத்தலங்கள். இத்தலங்களைப் போற்றுதல் நம் தலையாய கடமையாகும்.

# 4. மூவர் தேவாரத்தில் சில புராண மரபுச் செய்திகள்

## தோற்றுவாய்

முருகப் பெருமானின் பன்னிரண்டு திருக்கரங்கள் போல சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் காட்சியளிக்கின்றன. அவற்றுள் மூவர் பாடியவற்றிற்குத் தேவாரத் திருமுறைகள் என்று பெயர். மூவர் என்னும் தொகைக் குறிப்பு மொழி இங்கே திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் குறிக்கும். இம்மூவரும் இறைவன்மேல் பாடிய இசைப் பாடல்களுக்குத்தான் தேவாரம் என்று பெயர் வழங்குகிறது. பெரும்பாலும் பத்துப் பத்தாகப் பாடப்படும் பாடல் தொகுதிகளைப் பதிகம் என்று வழங்குவர். மேற்கண்ட மூவரும் தலங்கள்தோறும் சென்று அங்குள்ள சிவபெருமானைப் பதிகம் பாடி வணங்கி வந்தனர். அப் பதிகங்களில் கிடைத்தவைகளை ஏழு திருமுறையாக நம்பியாண்டார் நம்பி என்பவர் தொகுத்துள்ளார். திருஞானசம்பந்தர் பாடியவை ஒன்றாவது இரண்டாவது மூன்றாவது திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் பாடியவை நான்காவது ஐந்தாவது ஆறாவது திருமுறைகளாகவும் சுந்தரமூர்த்தி சுவாமி பாடியவை ஏழாவது திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் மரபாய் வழங்குகின்ற புராணச் செய்திகள் எத்தனையோ வந்துள்ளன. அவற்றுள் மூவர் தேவாரத்தில் முதல் ஐந்து பதிகங்களில் வந்துள்ள புராணச் செய்திகள் என்னும் தலைப்பில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

'புராணம் என்னும் வடசொல்லிற்குப் பழமை என்று பொருள் கூறுவர். பழைய கதைகளின் தொகுப்புக்குப் புராணம் என்று பெயர் கூறுவர். தொல்காப்பியரும் பழமை என்ற பொருளுடைய 'தொன்மை' என்னும் பெயரால் பாடப்படும் பாட்டு வகைக்குத் தொன்மை என்றே பெயர் கூறுவர்.

**"தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே..."**

என்பது அந்நூற்பாவாகும். பழமையான பொருள் பற்றிப் பாடப்படுவது தொன்மை என்னும் பெயரால் தமிழில் வழங்கப்படுவதுபோல பழமையான கதைகளைப் பற்றி எழுதிய வடமொழி இலக்கியத்தை வடமொழியார் புராணம் என்பர். வடமொழிப் புராணக் கதைகள் எல்லாம் சமய உண்மைகளை விளக்குவதற்காக எழுதப் பட்டுள்ளன. புராணக் கதைகளையெல்லாம் உலக நடைமுறைக்குப் பொருந்த நடந்ததாகக் கருதப்படுமா என்று நாம் ஆராய வேண்டுவதில்லை. சில கதை நடந்த தாக இருக்கலாம். சில கற்பனையாகவுமிருக்கலாம். ஆனால், சமய உலகத்தில் எந்த உண்மையைக் கூறுவதற்கு இப்புராணக் கதை எழுதப்பட்டுள்ளது என்று ஆராய்ந் துணருவதே ஆராய்ச்சி செய்பவரின் கடமையாகும்.

## மூவர் திருமுறையுள் முதல் ஐந்து பதிகங்கள்

திருஞானசம்பந்தர் தேவாரத்துள் முதல் ஐந்து பதிகங்கள் திருப்பிரமபுரம். திருப்புகலூர், திருவலிதாயம் திருப்புகலியும் திருவீழிமிழலையும். சீழைத் திருக்காட்டுப் பள்ளி என்னும் இத்தலங்கள் பற்றியனவாகும். திருநாவுக் கரசர் தேவாரத்துள் முதல் ஐந்து பதிகங்கள், திருவதிகை வீரட்டானம், திருவதிகை வீரட்டானம், திருவையாறு, திருவாரூர், திருவாரூர் பழமொழி என்னும்

இத்தலங்கள் பற்றியனவாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்துள் முதல் ஐந்து பதிகங்கள் திருவெண்ணெய் நல்லூர், திருப்பரங்குன்றம், திருநெல்வாயில் அரத்துறை, திருவஞ்சைக்களம், திருவோணகாந்தன் தளி என்னும் இத்தலங்கள் பற்றியனவாகும். இவர்கள் பாட்டில் முதலாக உள்ள தோடுடைய செவியன் என்பதும் கூற்றாயினவாறு விலக்ககிலீர் என்பதும், பித்தா என்பதும் முதல் தொடக்கமாய் அமைந்த பாடல்கள். இவர்தம் திருமுறைக்கு முதலாய் அமைந்த இப்பாடல்கள் இவர் தம் வாழ்க்கை வரலாற்று முதல் நிகழ்ச்சியிற் பாடப்பட்டதாய் அமைந்து உள்ளன. அப்பாடல்கள் வருமாறு.

"தோடுடையசெவி யன்விடை யேறியோர்
தூ வெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென்
உள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்
தேத்த வருள்செய்த
பீடுடையபிர மாபுர மேவிய
பெம்மா னிவனன்றே"

—திருஞானசம்பந்தர் (1-1)

"கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே"

திருநாவுக்கரசர் (4-1)

"பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூ ரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே"
சுந்தரமூர்த்தி சுவாமிகள் (7-1)

திருஞானசம்பந்தர் தம் முதற் பாட்டினைப் புராண மரபுச் செய்திகளோடே தொடங்குகின்றார். "உலகத்தைப் படைப்பவனைப் பிரமதேவன் என்று புராணங்கள் புகலும். அவன் தாமரை மலரில் வீற்றிருப்பவன். ஆதலால் அவனை ஏடுடைய மலரான் என்று குறிப்பிட்டு, அவன் முற்காலத்தே வணங்கி ஏத்த அவனுக்கு அருள்செய்த பிரமாபுரம் மேவிய பெருமான் ஆகிய இவன் தோடுடைய செவியனாய் விடை ஏறி தூ வெண்மதி சூடி காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வனாய் உள்ளான்" என்று கூறுகின்றார். வடமொழியில் யசுர் வேதத்தின் பிரிவாக உள்ளது ஸ்ரீ ருத்திரம் என்பது. இது இறைவனைப் பலவாறாகக் கூறிப் போற்றுகின்றது. அது ஓரிடத்தில் "தஸ்கராய நம : தஸ்கராணாம் பதயே நம :" என்று கூறுகின்றது. (தஸ்கரம்—திருட்டு) "கள்வனாக விளங்குகின்ற இறைவனே! உனக்கு வணக்கம்; கள்வர்கட்கெல்லாம் தலைவனாக விளங்குபவனே! உனக்கு வணக்கம்" என்பது அச்சுலோகத்தின் பொருளாகும். இவற்றைப் படிக்கும்பொழுது ஸ்ரீ—ருத்திரம் இறைவனை ஏன் கள்வனாகவும் கள்வர்கட்கெல்லாம் தலைவனாகவும் கூறிற்று என்ற வினா எழுகின்றது. அதற்கு விடையாக "இறைவன் என் உள்ளத்தைக் கவர்ந்துகொள்ளும் கள்வனாக உள்ளான்" என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். 'கவர் கள்வன்' என்பது இங்கே வினைத்தொகை. கவர்ந்த கள்வன், கவருகின்ற கள்வன், கவரும் கள்வன் என்று

மூன்று காலத்திற்குரியதாய்க் கொள்ளவேண்டும். "தன்னை உண்மை அன்பால் வணங்குகின்ற அன்பரின் உள்ளம் உலகப் பொருள்களைக் கருதி ஓடாதவாறு, தன்னிடத்திலேயே அமைந் தொழுகுமாறு அவர் தம் உள்ளத்தை இறைவன் கவர்ந்து கொள்ளு கின்றான்'' என்ற சைவ சமயத் தொல்கருத்து திருஞானசம்பந்தப் பெருமானின் முதற்பாட்டிலேயே அமைந்திருப்பதை ஊன்றி ஊன்றி நோக்கி இப்பாட்டை நாவாரப் பாட வேண்டும்.

மேலும் அவர் ''என் பாட்டைக் கேட்பதற்குத் திருவருட்சக்தியின் கூறாகிய தோடுடைய செவி தயாராக உள்ளது. என்னை நோக்கி வருவதற்கு அறத்தின் வடிவாகிய விடை தக்கதாய் அமைந்துள்ளது. அவ்விடையில் ஏறி வெண்டிங்களைச் சூடி வெண்பொடியை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு வருகின்ற காட்சி என் உள்ளத்தையே கவர்கின்றது. வெண்மதி தானும் தக்கன் இட்ட சாபத்தினால் ஒளிகுறைந்து நின்று, இறைவனைப் பூசித்து அவ்வொளி வளரப் பெறுவதற்காக முடியில் சூடிக் கொள்ளப்பட்டதல்லவா! பொடி தானும் மகாசங்கார காலத்திலே இறைவன் தீவிழியால் எல்லாப் பொருளையும் சுட்டெரிக்கத் தோன்றிய பொடியல்லவா! இவ்விரண்டும் அவனுடைய பெருமையை உணர்த்துகிறது. தோடுடைய செவியனாய் விடையேறி என் முன் வந்து தோன்றியது அவனுடைய எளிமையை உணர்த்துகின்றது. இவற்றால் என் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டான் என்று திருஞான சம்பந்தர் இறைவன் இறைவியுடன் தன் முன் தோன்றி, ஞானப்பால் தர, அதனை உண்டு உவந்த அறிவுத் தெளிவால் பாடியுள்ளார். இப்பாட்டு எண்வகை மெய்ப் பாட்டில் புலன் காரணமாகத் தோன்றிய உவப்பு என்னும் மெய்ப் பாட்டிற்குரியது.

அடுத்து திருநாவுக்கரசர் பாடிய முதற்பாட்டைப் பார்ப்போம். திருநாவுக்கரசர் முன்னே சமண சமயத்திற் சேர்ந்து தருமசேனர் என்னும் பெயருடன் அங்கே உள்ளதை அறிந்த தமக்கைத் திலகவதியார் இறைவனிடம் வேண்டிக்கொள்ள இறைவன் சூலை நோயை ஏவி அதனால் அவரைத் துன்புறுத்த வேண்ட, திலகவதியார் அறிவுறுத்தியபடியே திருவதிகைத் திருவீரட்டானேசுரரைத் தொழுது "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்று பாடத் தொடங்கினார். இப்பாட்டால் திருநாவுக்கரசர் பெரிதும் சூலை என்னும் பிணியால் தாம் அடைந்துள்ள துன்பநிலையினைக் கூறி அதனைத் தீர்த்தருள வேண்டுமென்றும் தீர்த்தருளினால் உன் திருவடியை இரவும் பகலும் பிரியாது வணங்குவன் என்றும் கூறுகின்ற பொருளே உள்ளன இப்பாட்டு பிணியால் வந்த இளிவரல் என்னும் மெய்ப்பாட்டிற் குரியது.

## திருஞானசம்பந்தர் பாட்டை முதலில் வைத்ததேன்?

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருந்தனர். சம்பந்தரைவிட அரசர் சிறிது காலத்தால் முற்படப் பிறந்தவராகவும் இருக்கலாம். மேலும் திருஞானசம்பந்தரால் அப்பர் என்று அழைக்கத் தக்க சிறப்பும், ஆண்டின் முதிர்ச்சியும் உடையவர். திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பிகள் திருநாவுக்கரசர் பாட்டை முதலில் வைக்காமல் திருஞான சம்பந்தர் பாட்டை முதலில் வைத்தது ஏன் என்று வினா எழுகின்றது. அதற்கு விடையாக ஆராயாதார் நம்பியும் அந்தணர் சம்பந்தரும் அந்தணர் அதனால் சம்பந்தர் பாட்டை முன்வைத்துவிட்டார் என்று கூறிவிடுகின்றனர். ஆராய்ந்தவர் ஞானசம்பந்தர் முருகன் அவதாரம்: மேலும்

ஞானப்பால் உண்டவர்; அதனால் அவர் பாட்டை முன் வைத்துவிட்டார் என்பர்.

சம்பந்தர் பாட்டை முன் வைத்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. திருநாவுக்கரசரின் முதற்பாட்டு எடுத்த எடுப்பில் "கூற்றுவன் போலிருக்கிற நோயை விலக்காமலிருக்கிறீரே நான் பிறர்க்குக் கொடுமை செய்ததே இல்லையே! இன்ன காரணம் என்று அறிய முடியாதபடி வந்த இந்நோய் குடருடன் கூடி முடக்கி வருத்த ஆற்றேனே! அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே! இந்நோயை விலக்கியருளுக. விலக்கினால் உம் திருவடியை இரவும் பகலும் பிரியாது எப்பொழுதும் வணங்கி வருவேன் என்று பிணியும் வருத்தமும் பற்றித் தோன்றிய இளிவரல் என்னும் மெய்ப்பாட்டிற்குரியதாகக் கூறுகின்றார். கூற்று என்னும் அமங்கலச் சொல்லுடன் இளிவரல் என்னும் மெய்ப்பாடும் தோன்றப் பாடிய இப்பாட்டை முதலிலே வைக்க நம்பியார் துணியவில்லை. திருநாவுக்கரசர் பாடல்களில் பின்னுள்ள பாடல்களெல்லாம் மிகமிகச் சிறந்திருக்கவும் முதற்பாட்டு சிறவாமையினால் நம்பியால் முதலிலே வைக்க இயலவில்லை என்று கருதுகிறேன். மேலும், ஞானசம்பந்தர் என்றதில் ஞானம் உள்ளத்தைப்பற்றியது; நாவுக்கரசர் என்றதில் நாவு சொல்லைப் பற்றியது; சுந்தரமூர்த்தி என்பதில் சுந்தரம் (அழகு) உடம்பைப் பற்றியது. அதனால் மனம், வாக்கு, காயம் என்ற முறைப்படி மூவர் தேவாரமும் முறையாக வைக்கப்பட்டது என்றும் அறிஞர் கூறுகின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடல்களில் முதற்பாட்டு பித்தா என்பது. தன்னைப் பித்தா என்று கூறியதால் அச்சொல்லையே முன்வைத்து எம்மைப் பாடுக என்று கட்டளையிட்டவாறு சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்

பட்டது. பித்தனே! பிறைசூடியவனே! பெருமானே! அருளை ஆள்பவனே! என்ன காரணத்தாலே உன்னை நான் மறவாது நினைக்கின்றேன்? நான், உலகப் பொருள்களையெல்லாம்விட்டு உன்னையே நினைக்குமாறு (நினைப்பதற்குக் காரணம் ஆமாறு) என் மனத்திலே உன்னையே வைத்தாய். திருநல்லூர் திருவருட்டுறையுள் எழுந்தருளியிருக்கும் அத்தனே! என்று நீ, அன்று நான் உன்னடிமை என்னும் முறை அமைத்திருக்கவும் நான் மறந்திருந்தாலும் நீ என் அடிமைதான் என்று வழக்குத் தொடுத்ததற்கு (இனியும்) மேலும் உனக்கு ஆளல்லேன் என்று கூறமுடியுமா? முடியாதே என்னும் பாட்டும்புணர்வு பற்றித் தோன்றிய (ஆண்டவனுக்கு அடியவனாய்க் கூடப் பெற்றதைப் பற்றிய) உவகை என்னும் மெய்ப் பாட்டினை உடையது.

முறையே இம்மூவரின் முதற்பாட்டுக்கள் இறைவன் என் உள்ளங்கவர் கள்வனாயுள்ளான். இறைவனே! கூற்றுவன் போன்ற பிணி முதலாயினவற்றை விலக்கியருளுக. இறைவனே! உன்னையே நினைக்குமாறு உன்னை என் மனத்தில் வைத்துள்ளாய், உனக்கு ஆளாய் அல்லேன் எனல் ஆமே? என்கின்ற பொருளை உணர்த்துவனவாய் மூவர் திருமுறையில் முன்னே நிற்கின்றன.

வைணவ சமயத்தவர் நாராயணனே மேலான கடவுள் என்பதற்குக் கதைபல கூறி வருகின்றனர். நாராயணன் தன் திருநாபிக் கமலத்தில் பிரமதேவனை உண்டாக்கி அவனைக்கொண்டு உலகத்தைப் படைப்பித்தும் அரனை உண்டாக்கி உலகை அழிக்குமாறு செய்வித்தும் தான் உலகத்தைக் காக்கும் தொழிலை மேற்கொண்டு காத்தும் எல்லோர்க்கும் மேலான கடவுளாக விளங்குகின்றான் என்பர். அதுவுமன்றி மற்றொரு படைப்பில் நாராயணன்

ஐந்து முகம் உடையவனாகப் பிரமனைப் படைத்தான். பிரமனும் தன் முகம்போல் சங்கரனைப் படைத்தான் என்றும் கூறுவர்.

சைவரும் சைவ சமயத்தை உயர்த்துவதற்காக சிவபெருமான் திருமால் நான்முகனைப் படைத்து காத்தல் படைத்தல் முதலிய தொழில்களைப் புரியுமாறு செய்து தான் அழித்தற்றொழிலோடு எல்லாத் தொழிலையும் புரியவல்லவனாகவும் உள்ளான் என்றும், திருமாலும் நான்முகனும் பல தலங்களில் சிவபெருமானைப் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர் என்றும், பிரமன் படைத்தற்றொழில் செய்வதால்தானே தலைவனென்று செருக்கியிருத்தலைத் தெரிந்து சிவபெருமான் அவனது ஐந்து தலையிலொன்றை கிள்ளிப் போக்கிப் படைக்கவல்லையேல் இழந்த தலையிலொன்றைப் படைத்துக்கொள் என அது மாட்டாது செருக்கொழிந்தானென்றும், திருப்பாற்கடல் கடைந்த காலத்திலே மத்தாகப் பயன்படுத்திய பெருமலை சாய்ந்து கடைய முடியாமற்போகத் திருமால் ஆமை வடிவமெடுத்து முதுகில் அம்மலை பிறழாமலிருக்கும்படிச் சுமந்து உதவிப் பின்னர் செருக்குக்கொண்டு உலகத்திற்கு இடர் செய்யப்புக அதனை உணர்ந்த சிவபெருமான் அந்த ஆமையைக் கொன்று அதன் ஓட்டினைக் கண்டோர் செருக்கொழியுமாறு அணிகலனாகப் பூண்டுகொண்டான் என்றும், இதுபோல் திருமால் எடுத்த வராகம் மச்சம் நரசிங்கம் என்னும் அவதாரங்களை எல்லாம் அழித்து வராகத்தின் எயிற்றினையும் மச்சத்தின் விழியினையும் நரசிங்கத்தின் வண்ணத்தோலினையும் அணிந்து கொண்டான் என்றும் சர்வ சம்கார காலத்திலே எல்லாப் பொருள்களையும் நுதல் விழித்தீயால் சுட்டெரித்து அங்கு தோன்றிய வெண்பொடியை திருமேனியிற் பூசிக்கொண்டு

நடனம் செய்வான் என்றும் புராணக் கதைகள் கூறு கின்றன.

யாகம் முதலிய வினையே செய்யத்தக்கது. அவ்வினையே சுவர்க்கம் முதலிய பயனைத் தரும். இவ்வினைக்கு மேல் கடவுள் என்கின்ற ஒரு பொருளில்லை என்னும் கொள்கையை உடைய தாருகா வனத்து இருடி களின் போக்கை மாற்றுவதற்காக திருமாலை மோகனப் பெண் வடிவில் முனிவர்களிடம் போகும்படி செய்துவிட்டுச் சிவபெருமான் அழகிய பிட்சாடன வடிவத்துடன் அம்முனிவரின் மங்கையர் இருக்குமிடத்திற்குச் செல்ல இதனால் முனிவர் மங்கையர் என்னும் இருவர்தம் ஒழுக்க நிலை கெட்டுப் போக இவற்றிற்குக் காரணம் சிவபெருமான் தான் என்பதை உணர்ந்த முனிவர்கள் அபிசார ஓமம் செய்ய அதிற்றோன்றிய முயல், புலி, மான், பாம்பு முதலானவற்றையெல்லாம் சிவபெருமானைக் கொல்லுமாறு ஏவ, சிவபெருமான் முயலகனைக் காலின் கீழே மிதித்துக் கொண்டும், புலியை உரித்துத் தோலை உடையாக உடுத்திக்கொண்டும், மானைக் கையிலே பிடித்துக் கொண்டும், பாம்பினை பலவகை அணிகளாக அணிந்து கொண்டும் ஊறுபாடில்லாமல் காட்சியளித்தார் என்று புராண கதை கூறும். இக்கதைகளையும் இதுபோன்ற கதைகளையும் வைத்துக்கொண்டு தேவாரப் பதிகங்களை படிக்க வேண்டும்.

# 5. சுந்தரரின் திருத்தலப் பயணம்

## தோற்றுவாய்

"கொத்தார் மலர்க்குழலாள் ஒரு கூறாய் அடியவர் பால் மெய்த்தாயினும் இனியான்" ஆணைக்கிணங்கி, வியன்நாவலர் பெருமானாய சுந்தரர், இறையான் மகிழிசை பாடுகின்றார். பாட எல்லை நிகரில்லாதவனாய சிவ பெருமான் 'சொல்லார் தமிழிசை பாடிய தொண்டனை' இன்னும் பல வகைகளில் உலகில் தம் புகழைப் பாடவேண்டுமாறு அருள்செய்ய, சுந்தரரும் உலகுய்யப் புரம் எய்தவனின் புகழினைப் பல திருத்தலங் கள்தோறும் சென்று பாடுகின்றார். இவ்வாறு இறைவன் புகழ்பாடச் சுந்தரர் மேற்கொண்ட திருத்தலப் பயணத்தைச் சுருக்கி வரைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## திருநாவலூர் புகல்

'பித்தா பிறைசூடி' என்ற திருப்பதிகம் பாடி இறைவனின் புகழைப்பாடிய நற்றமிழ் நாவலர் கோனாகிய சுந்தரர் தம்மை திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட் டுறை அமர்ந்த வேதியர் ஆட்கொண்டதன்பின்,

> பூவலருந் தடம்பொய்கைத் திருநாவலூர் புகுந்து
> தேவர்பிரான் தனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார்
>
> —பெரியபுராணம்; தடுத்தாட்கொண்ட படலம் 78

எனச் சுந்தரர் திருநாவலூர் புகுந்து தேவாரத் திருமழை யால் இறைவனைப் போற்றியமையை உணர்த்துகின்றார் சேக்கிழார்.

## திருத்துறையூர் சென்றணைதல்

திருவெண்ணெய் நல்லூரில் தேவாரத் திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றியவர் அடுத்து பெண்ணை யாற்றிற்கு வடகரையில் உள்ளதும், நடுநாட்டுத் தலங்களில் பதினைந்தாவது தலமும், தற்போது திருத் தனூர் என வழங்கப்படுவதுமாய திருத்துறையூர்த் தலம் சென்றணைகின்றார். சிவனுறையும் அத்தலத்தைச் சார்ந்து தம்பிரான் முன்னின்றும் தீவினைப்பயனால் அவ நெறியில் செல்லாமல் தன்னைத் தடுத்து ஆளாகக்கொண்ட அடியவனாய தனக்கு புலன்வழிச் செல்லாது மனத்தை ஒன்றுவித்துச் சிவபெருமானை இடைவிடாது நினைத் தலும் பூசித்தலுமாய தவநெறியினைத் தந்தருள வேண்டும் என வேண்டிப் பிற உயிர்களையும் பல நெறி யினின்றும் விளக்கியாளக்கூடிய திருப்பதிகத்தினைப் பாடுகின்றார். இதனை,

> சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து தீவினையால்
> அவநெறியிற் செல்லாமே தடுத்தாண்டாய் அடியேற்குத்
> தவநெறிதந் தருளென்று தம்பிரான் முன்னின்று
> பவநெறிக்கு விலக்காருந் திருப்பதிகம் பாடினார் (78)

என்ற பாடலால் தெளியலாம்.

தவநெறி தந்தருள் என்று பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகத்தைச் சுந்தரர் பாடிய அளவில் 'புலனொன்றும் படி தவத்திற் புரிந்த நெறி கொடுத்தருள' சுந்தரர்

அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர்
அமர்ந்துன்னருளும்
நிலவுந்தண் புனலுமொளிர் நீள்சடையோன்

ஆய சிவனின் திருப்பாத மலர்களை உள்ளத்தே சூடி, வாக்கினாற் போற்றிக் கைகளால் ஆர வந்தனை செய்து சிவபூசை செய்கின்றார்.

## புலியூர்ப்புறப்பாடு

திருத்துறையூர்ப் பெம்மானைப் பணிந்து பின் சிவபெருமான் அமர்ந்தருளும் இடம் பலவும் புக்கு இறைஞ்சிப் பின்

பொற்புலியூர், நிருத்தனார் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று வருத்தமிகு காதலினால் புறப்பட்டுச் செல்ல விழைகின்றார்.

## திருவதிகைப் புறம் சார்தல்

பொற்புலியூர் நிருத்தனாரைக் கண்களால் கண்டு மகிழ எண்ணி வழிக் கொள்ள மனங்கொண்ட சுந்தரர் புறப்பட்டுப் பெண்ணையாற்றைக்கடந்து கரையேறிய பின் மாலைப் பொழுதிலே திருவதிகை வீரட்டானத்தின் புற எல்லையை அணைந்தார். இதனை,

மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதன் புனற்பெண்ணை மாறுகடந் தேறியஎன்
நிலவுபசும் புரவிநெடுந் தேரிரசி மேல்கடலிற்
செலவணையும் பொழுதணையத் திருவதிகைப்
புறத்தணைந்தார்

—பெரியபுராணம்; தடுத்தாட்கொண்ட படலம் :82

என்ற பாடல்வழித் தெளியலாம்.

திருவதிகைப் புறத்தைச் சென்றணைந்தவர், ஆளுடைய அரசாய், உலகேத்தும் உழவாரப் படையினை உடைய திருநாவுக்கரசர் விடையவனாய சிவனுக்குக் கைத்தொண்டு விரும்பிச் செய்த இப்பதியைக் காலால் மிதித்து நடப்பதற்கு அஞ்சுகின்றதாகக் கூறி அந் நகரினுட் செல்லாமல் மடைவளர்தண் புறம்பணையிற் சித்தவட மடத்திலே புகுகின்றார்.

புகுந்தவர் வரிவளர்பூஞ்சோலைசூழ் மடத்தின்கண் விரிதிரை நீர்க் கெடில வீரட்டானத்து இறைவனது திருப்பாதங்களையே எண்ணிய மனத்தினராய்த் தம் பரிசனஞ் சூழ பள்ளியமர்ந்தருளுகின்றார்.

இவ்வாறு சுந்தரர் துயில்கொள்ள, வீரட்டானத் தமர்ந்தருளுகின்ற அங்கணராய சிவபெருமான் முதுவடி வின் மறையவராய் ஒருவரும் தம்மை அறிய முடியாது வகையில் வேடம் பூண்டு பூந்தாரானாய சுந்தரரின் திருவடியின்மீது தம் பதும மலர்த்தாள் வைத்துப்பள்ளி கொள்வாரைப் பயில்கின்றார். இந்நிலையில் சுந்தரர்,

**.........அருமறையோ யுன்னடியென்**
**சென்னியில் வைத் தனை யென்ன**

சிவபெருமானும் "திசையறியா வகைசெய்தது என்னு டைய மூப்புகாண்" என விடையிறுக்கத் தன் முடியை அப்பால் வைத்து உறங்குகின்றார் சுந்தரர். மீண்டும் மீண்டும் தன் சென்னியில் இறைவன் தம் தாள்களை நீட்ட

**செங்க யில்பாய் தடம்புடை சூழ் திருநாவலூராளி**
**யிங்கென்னப் பலகாலும் மிதித்தனை நீ யாரென**

வினவி நிற்க, 'கங்கைசடை கரந்த பிரானாய' சிவபெருமான் 'அறிந்திலையோ' எனக் கூறிக்கொண்டே மறைந்து விடுகின்றார்.

'அறிந்திலையோ?' எனக் கூறிக் கரந்த இறைவனை அறிந்தவுடன் சுந்தரர்,

**செம்மாந்திங் கியானறியா தென்செய்தேன் எனத் தெரிந்து**
**தம்மானை யறியாத சாதி யுளரோ**

என வருந்தித்,

**தம்மானை திருவதிகை வீரட்டானத் தமர்ந்த**
**கைம்மாவின் உரியானைக் கழல் பணிந்து**

பாடுகின்றார்.

## கெடிலம் கடத்தல்

திருவதிகையில் இறைவன் கழல்பணிந்து பாடியவர், பொன்திரளையும், மணித்திரளையும், யானையின் வெண்கோடுகளையும், ஒளி மிக்க வெண்முத்துக்களையும், மணமிக்க மலர்களையும், நறிய சந்தனத்தையும் தன் வலிய திரைகளாற் கொணர்ந்து திருவதிகையை வழிபடும் கங்கையென்னும் திருக்கெடில நதியிலே திளைத்தாடி மேற்செல்கின்றார்.

## திருமாணிக்குழி அணைதல்

திருக்கெடிலம் திளைத்தாழப் பெருமான் தன் அடிபோற்றி அங்கிருந்தும் புறப்பட்டு நடுநாட்டுத் தலங்களில் 17-வது தலமாய திருமாணிக் குழியினைச் சென்று சேர்கின்றார். இத்திருமாணிக் குழி திருமால் வழிபட்ட சிறப்பினை உடையது என்பதை,

.........போர்வலித் தோன்மாவலிதன்
மங்கல வேள் வியிற்பண்டு வாமனனாய் மண்ணிரந்த
செங்கணவின் வழிபட்ட திரு மாணிக் குழி (90)

என்ற அடிகளில் புலப்படுத்துகின்றார்.

## தினைநகர் சார்தல்

திருமாணிக்குழியில் பரம்பொருளைப்பணிந்து தாள் பரவிய பின்னர் பணிந்தவர்க்கும் வரம் தருகின்ற இறைவன் மேவி இருக்கின்ற தினைநகரை வணங்கிக் கொண்டு செல்கின்றார். சென்றவர் நரம்புடை யாழொலி, நாத வொலி, வேத ஒலி, அரம்பையர்தம் கீதவொலி அறாத் தில்லையைச் சென்று சேர்கின்றார்

## தில்லை சென்றணைதல்

திருத்தினை நகரை வணங்கிப் பின் தில்லையைச் சென்றணைந்தவர் செந்தாமரைப் பூக்கள் அசையும்படி அழகிய கயல்மீன்கள் எதிர்ப்பாய அதனாலே வண்டுகளும் நீர்ப்பறவைகளும் ஒலிக்கும் வாவியினின்றும் அலை களினால் வெள்ளிய சங்குகளும், அசையும் மலங்கு மீன் களும் பரந்த வயல்களிற் சூழ்தற்கிடமாகிய தனது மருங்கிலே போந்து வணங்குபவர்களுடைய மூன்று மலங் களையும் போக்கி வீட்டினை அருள்கின்றதில்லை என்னும் செழும்பதியினது எல்லையை வணங்கிக்கொண்டு நாவல், மா முதலிய மரங்கள் எவ்விடத்தும் செறிந்து மேல்மண்டலம் வரை ஓங்கி வளர்ந்த சோலைகளாகி அவற்றில் குயில்கள் கூவ, தேவலோகத்தினும் மிக்க பொலிவுடன் விளங்கும் அழகிய புறம்பணையையும் கடந்து உட்செல்கின்றார்.

உட்சென்றவர் கொன்றை முதலிய மரங்கள் ஓங்கியும் சாதி முதலிய பூங்கொடிகள் நிரம்பியும் நந்தியாவட்டம் முதலிய பூச்செடிகள் நெருங்கியும் உள்ள தூய நந்தவனங் களைப் பணிந்து கொண்டு செல்கின்றார்.

செல்கின்றவர் நான்மறைகளும் துதிக்கும் இத்தலத்தை நாமும் நாளும் வணங்குவோம் என்ற எண்ணத்துடன் கடலானது சூழ்ந்து வளைந்தது போன்ற காட்சி மிக்கதாய் சேட்செலவோங்கும் மஞ்சு இவர் இஞ்சிப் புறத்துள்ள குளிர்ந்த அகழியைக் கண்டுகளிப்பெய்துகின்றார்.

அதன் பின்னர் திருவம்பலத்தின் உள்ளே வண்டுகள் அரற்றவும், அதன் வெளிப்பக்கத்தே அகழியில் மலர்ந்த தாமரையிலிருந்த வண்டுகள் தாழை மலரிற் செறிந்த மகரந்தத்திலே படிந்த மேனியுடையனவாகி அதனாலே புனிதமாய திருநீறு பூசிய சிவனடியார்களைப் போன்ற தோற்றத்தோடு போய்ப் போய் முரல்கின்ற அழகியகாட்சி யினைக் கண்டு மேற்செல்கின்றார். சென்றவர் பிரம தேவரது முகம் என்று சொல்லத்தக்க நிலையில் உள்ள தில்லைத் திருப்பதியின் விளக்கம் மிக்க திருவாயில்கள் நான்கிலே வடக்குத் திருவாயில்முன் சேர்ந்து, அதன் பின்னர் பொன் பிறங்கு மணிமாளிகை நீடும் பொருவிறந்த திருவீதி புகுகின்றார்.

அங்கண் மாமறை முழங்கு மருங்கே
யாட ரம்பையர் அரங்கு முழங்கு
மங்குல் வானின்மிசை யைந்து முழங்கும்
வாச மாலைகளின் வண்டு முழங்கும்
பொங்கு மன்பருவி கண்பொழிந் தெங்கும்
போற்றிசைக்கு மொழி யெங்கு முழங்குத்
திங்கள் தங்கு சடைகங்கை முழங்குந்
தேவ தேவர்புரியுந் திருவீதி

என அத் திருவீதியின் சிறப்பைப் புகழ்ந்தேத்துகின்றார் சேக்கிழார் பெருமான்.

இத்தகு சிறப்பு வாய்ந்த, 'அண்ணலாடும் திருவம்பலம் சூழ்ந்த' அம்பொன் வீதியினை வணங்கிக்கொண்டு அதன் பின்னர் தேவர்களும் அன்பர்களும் தடையின்றி உள்ளே செல்லும் அழகிய திருவாயில் வணங்கி உச்சிமேற் குவித்த கைகளோடும் உள்ளே புகுந்தார்.

புகுந்தவர் பெரிய மதில்சூழ்ந்த செம்பொன் மாளிகையையும், பேரம்பல மேருவையும் விதிப்படி வலஞ்செய்து வணங்கிய பின்பு மகிழ்ச்சியோடும் மேலும் சென்று வணங்குதற் பொருட்டு திருவளரொளிசூழ் திருச்சிற்றம்பல முன் திருவணுக்கண் திருவாயில் சென்று சேர்கின்றார்.

திருவணுக்கண் திருவாயிலை அடைந்தவர் பின் மாலயன் காணாத தன்மைமிக்க இறைவனை உள்ளத்தே நினைந்து அன்பினாலே உந்தப்பட்டுத் திருக்களிற்றுப் படியின் அருகிலே சென்று தாழ்ந்து எழுகின்றார். திருக்களிற்றுப்படியின் மருங்கில், வணங்கி எழுந்தவர்,

இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லை யில் தனிப்பெருங் கூத்தின்
இந்த பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின்

மலர்ந்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிய தம் கைகள் இரண்டையும் தலைமேற் கூப்பி,

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடங்
கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு அரியதா மின்பமா

என்று பண்ணினால் நீடி அறிதற்கரிய தேவாரத் திருப்பதிகம் பாடிப் பரவிப் பணிந்து களிக்கின்றார். அப்போது நிருத்தனார் தம் அருளின் காரணமாக, 'தரளம் எறிபுனல் மறிதிரைப் பொன்னி மடுத்த நீள்வண்ணப் பண்ணையாரூரில் வருக நம்பால்' என்ற நாதம் கேட்ட வுடன் அதனை உணர்ந்து அப்பணியைச் சென்னி மேற் கொண்டு தமது கைகளால் தொழுது வணங்கிக்கொண்டு பேரொளியின் வளரும் அம்பலத்தை வலங்கொண்டு வணங்கிப் புறம்போந்து நீடுவான் பணிய உயர்ந்த பொன் வரைபோல் நிலையெழு கோர்புரத்தைக் கடந்து வணங்கி பின் நீண்ட அகண்ட வீதியை வணங்கிக்கொண்டு. அதன் பின்னர் அத் திருத்தலத்தின் தென்திசை வாயிலைக் கடந்து, தெற்குத் திருவெல்லியை வணங்கிப் பின்னர் கொன்றைவார் சடையான் தன் அருளையே நினைந்த வராய்க் கொள்ளிடத்திருநதியினைக் கடந்து செல் கின்றார்.

## கழுமலம் சார்தல்

கொள்ளிடத் திருநதியினைக் கடந்து அறம்பயந்தான் திருமுலைப் பாலுண்டு வளர்ந்தவராய திருஞானசம்பந்தர் பிறந்தருளும் பெரும்பேறுபெற்ற சிறந்த புகழ்க்கழுமலமாந் திருப்பதியைச் சென்று அணைகின்றார்.

அணைந்தவர், 'பிள்ளையார் திருவவதாரஞ் செய்த திருப்புகலிருள்ளும் மிதியேன்' என்று கூறிக்கொண்டு ஊர் எல்லைப்புறம் வணங்கி வலமாக வருகின்ற போழ்தில் மங்கையிடங் கொள்ளுமால் விடையவனும் அவருக்குக் காட்சி கொடுக்கின்றான். இறைவன் தமக்குக் காட்சி நல்கியதனால் பேருவகை கொண்ட சுந்தரர்,

தெண்டிரை வேலையின்மிதந்த திருத்தோணி புரத்தாசைக்
கண்டு கொண்டேன் கயிலையினில் வீற்றிருந்தபடி

என்று கூறிக் கொண்டு பண்ணிரம்பிய இன்னிசை உடைய திருப்பதிகம் பாடியருள்கின்றார்.

## திருக்கோலக்கா திருப்புன்கூர்ப் பயணம்

இருக்கு ஓலமிடும் பெருமான் எதிர்நின்று எழுந்தருள வெருக்கோனுற்றுப் பின்னது நீங்க திருவாரூர் மேற்செல விரும்பிப் பெருக்கோதம்சூழ்`சீகாழிப் பதியை வணங்கிச் செந்தமிழ் மாலைகள்பாடி, தேனார்க்கும் `திருப்புன்கூர் நம்பர்பால் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடிச்சென்று இவ்வாறே இறைவன் எழுந்தருளிய பதிகள் பலவும் வணங்கிச் சென்றுமலர்த்தடம்சூழ காவிரியின் கரையைச் சென்று அணைகின்றார்.

## அம்பர்மாகாளத்தி அடைதல்

வம்புலா மலரலைய மணிகொழித்து வந்தழியும் பைம்பொன்வார் கரைப்பொன்னிப் பயில்தீர்த்தம் படிந்தாடிப் பின் மயிலாடு துறை மன்னவனை வணங்கிக் கொண்டு சென்று தாவில்சீர் அம்பர்மாகாளத்தி அமர்ந்த பிரான் அடியிறைஞ்சிச் செல்கின்றார்.

## திருவாரூர் புகழ்

அம்பர்மாகாளத்தின் அமர்ந்தபிரான் அடிவணங்கிச் செல்பவர் பின்னர் செஞ்சடை யண்ணல் விரும்பு திருப்புகலூரை முன்னாகப் பணிந்தேத்திப் பின் முதல்வனாய இறைவன்தன் அருள்நினைந்து திருவாரூர் புகுகின்றார். அவ்வாறு புகுந்தவரை, 'ஆராத காதலன்

நம் ஆரூரன் நாம் அழைக்க வாரா நின்ற அவனை மகிழ்ந்து எதிர்கொள்வீர்' என்ற இறைவனின் அருட் செயலுக்கு ஏற்ப 'எம்பிரானார் அருள்தானிருந்த பரிசு இதுவானால் நம்பிரானாவார் அவரென்ற' கருத்தை உட்கொண்டு திருத்தொண்டர்கள் திருநாவலூராளியை எதிர்கொண்டழைக்க எழுகின்றனர்.

எழுந்தவர்கள் மாளிகைகள், மண்டபங்களின் மருங்குகளில் பெருங்கொடிகளை நெருங்க அமைத்தும், நீண்ட தோரணங்களை நாட்டியும், இலைகளடர்ந்த கமுகு வகைகளையும், தழைகளாற் செருக்கப்பட்ட மாலைகளையும் நீளிலையுடைய வாழை மரங்களையும், நீர் நிறைந்த பசும் பொற் கலசங்களையும் வரிசைப்பட வைத்த மணிகளாய விளக்குகளையும் ஓங்கிய வாயில்கள் எங்கும் வைத்து அமைத்தனர்.

வாயில்களுக்கு அடுத்து உள்ள திண்ணைகளில் சந்தனத்தால் மெழுகிப் பொற்சுண்ண முதலியவற்றாற் கோலம் பரப்பிப் புதுப்புதுப் பந்தர் இட்டு வீதிகளிற் பனிநீர் தெளித்தார்கள்.

பின்னர் பாடுவோரைக் கீதம்படச் செய்தும், முழக்குவோரைத் தூரியம் முழக்கச் செய்தும், ஆடற்பெண்களை நடம்பயிலச் செய்தும் ஆரூர் வாழ்வார் நகரின் மதிற்புற வாயிலில் நம்பிகளை எதிர்கொண்டழைக்கின்றனர்.

அவ்வாறு தம்மை எதிர்கொண்டு வணங்குபவரை அஞ்சலி செய்து வணங்கிப் பின்,

> எந்தை யிருப்பது மாருர வர்
> எம்மையும் ஆள்வரோ கேளீர்

என்னும் சந்த இசைத் திருப்பதிகங்கள் பாடித் தம் பெருமான் திருவாயில் சார்கின்றார். சார்ந்தவர்

திருவாயிலை நோக்கிக் கீழ்வீழ்ந்து வணங்கித் தொழு திறைஞ்சிப் பின் இறைவன் எழுந்தருளிய திருமூலட் டானஞ் சூழ்ந்த திருமாளிகை வாயிலினுட் புக்கு,

புற்றிடங் கொண்ட புராதனனைப்
பூங்கோயின் மேய பிரானை யார்க்கும்
பற்றிட மாய பரம்பொருளைப்
பார்ப்பதி பாகனைப் பங்க யத்தாள்
அர்ச்சனை செய்ய அருள்புரிந்த
அண்ணலை

மண்மிசை வீழ்ந்திறைஞ்சி நற்றமிழ் நாவலர் கோனாய சுந்தரர் உடம்பு எடுத்ததனால் ஆய உண்மைப் பயனை அடைந்தார்.

இவ்வாறு நாயகன் சேவடியெய்தப் பெற்ற இன்ப வெள்ளத்திடை மூழ்கி நின்று இனிய பண்ணிரம்பியதும் வண்மை பொருந்தியதுமான தேவாரத் திருப்பதிகத்தைத் தமிழ்நாதனாம் சுந்தரன் பாடியபோது இறைவனது திருவருளினால்

தோழமையாக வுனக்கு நம்மைத்
தந்தனம் நாமுன்பு தொண்டு கொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்டகோலம்
என்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழி மண்மேல் விளையாடுவாய்

என்ற குரல் ஆரூரர் கேட்க எழுந்தது. கேட்டலும் வன்றொண்டர் என்னும் கேடிலாதானை இறைஞ்சி நின்று 'ஆட்கொள வந்த மறையவனே! ஆரூரமர்ந்த அருமணியே; வாட்கயல் கொண்ட கண் மங்கை பங்கா!' என்றெல்லாம் கூவி அழைத்து, நாய் போன்ற தம்மையும் ஒரு பொருளாக

மதித்து தாள்கமலப் பதி தந்தது இறைவனின் கருணை யின் விளைவே என்று போற்றித் துதிக்கின்றார் இவ்வாறு பலமுறையாலும் வணங்கி உள்ளக் களிப்பினோடும் திருமூலட்டானநாதர் சந்நிதியினின்று நடந்து சென்று வீதி விடங்கராய தியாகேசர் சந்நிதியிற் போய் வணங்கியும் துதித்தும் பின் திருமாளிகையை வலம்செய்து வெளியே வருகின்றார். அது முதல் அடியவர்கள் அவரைத் தம்பிரான் தோழர் என அழைக்கின்றார். சுந்தரரும் இறைவன் தம் தாள்களையே நினைப்பவராய் புற்றிடங் கொண்டாரை நாள்தோறும் வணங்கிப் பாடித் துதித்து அதனாலுண்டாய இன்பத்தில் மூழ்கி வாழ்ந்து வருகின்றார்.

## முடிவுரை

இவ்வாறாகத் திருநாவலூர் கோனாய சுந்தரர் திருவெண்ணெய் நல்லூரினின்றும் புறப்பட்டுத் திருநாவலூர், திருத்துறையூர், திருத்தில்லை, திருவதிகை, திருமாணிச்குழி, திருத்தினைநகர், சீகாழி, திருக் கோலக்கா, திருப்புன்கூர், திருஅம்பர் மாகாளம், திருப் புகலூர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு திருவாரூர்த் திருத்தலத்தை அடைகின்றார் எனச் சேக்கிழார் சுந்தரரின் திருத்தலப் பயணத்தை விரித்துரைக் கின்றார்.

## சுந்தரரைக் குறிக்கும் அடைகள்

உயர் நாவலர் தனிநாதன் - 77
நாவலர் கோன் ஆரூரன் - 78
வன்றொண்டர் - 80, 147
பூந்தாரான் - 85
தமிழ்நாதன் - 86
திருநாவலூரரான் - 87
மணங்கமழ் தாரான் - 94
நாவணகர் பெருமான் - 98
செய்தவம் பெரியோன் - 105
தென்னாவலூரராளி - 117
நற்றமிழ் நாவலர் கோன் - 124
தம்பிரான் தோழர் - 129
வண்டமிழ் நாவலர் - 130
ஆளுடைய நம்பி - 139
நாவலர் காவலர் - 141
கிளர் ஒளிப்பூண் உரவோன் - 142

## சிவனைக் குறிக்கும் அடைகள்

உறுபரிவின் நல்லார் - 76
வெண்ணெய் நல்லூரருட் டுறை மேவிய நம்பன் - 76
எல்லா உலகுய்யப் புரமெய்தான் - 76
வெண்ணெய் நல்லூரின் மேவுமருட் டுறை
வேதியன் - 17
தேவர்பிரான் - 78
தம்பிரான் - 79, 116, 119
திருத்துறையூர் அமர்ந்தருளு, நிலவுந் தண்புனலு
மொளிர் நீள்சடையோன் - 80
பொற்புலியூர் நிருத்தனார் - 81

வீரட்டானத் தமர்ந்தருள் அக்கணர் - 85
அருமறையோய் - 86
கங்கை சடைகரந்த பிரான் - 87
தம்மான், அம்மான் - 88
திருவதிகை வீரட்டானத் தமர்ந்த கைம்மாவின் உரியான் - 89
அங்கணர் - 90
பரம்பொருள் - 91
திங்கள் தங்கு சடைகங்கை முழங்குந் தேவதேவர் - 99
வையகம் பொலிய மறைச்சிலம் பரற்ற மன்றுளே மாலயன் தேட
ஐயர் தாம் வெளியே யாடுகின்றார் - 105
இந்து வாழ் சடையான் - 106
தெண்ணிலா மலர்ந்த வேணியாய் - 1?7
ஆடுகின்றவர் - 109
கொன்றைவார் சடையான் - 110
மங்கை யிடங் கொள்ளு மால் விடையர்ன் - 112
தெண்டிரை வேலையின் மிதந்த திருத்தோணி புரத்தார் - 113
இருக்கு ஒலமிடும் பெருமான் - 114
மானார்க்கும் காதலத் தார் - 115
மின்னார் செஞ்சடை யண்ணல் - 117
நீராருஞ் சடைமுடிமேல் நிலவணிந்தார் - 118
தூ நறுங் கொன்றையன் - 124
புற்றிடங் கொண்ட புராதனன் - 125
பூங்கோயில் மேய பிரான் - 125
யார்க்கும் பற்றிடமாய பரம்பொருள் - 125
பார்ப்பதி பாகன் - 125
பங்கயத்தாள் அர்ச்சனை செய்ய அருள்புரிந்த அண்ணல் - 125

வாழிய மாமறைப் புற்றிடங் கொன் மன்னவன் - 127
ஆரூரமர்ந்த அருமணி - 123
வாட்கயல்கொண்டகண் மங்கை பங்கா - 128
மைவளர் கண்டர் - 130
தெய்வமணிப் புற்றுளார் - 130
பூங்கோயில் உள்ளார் 137
புற்றிடம் விருப்பினார் - 284
கண்ணுதல் - 145
பூங்கோயில் அமர்ந்த பிரான் - 146
அரவன் ஆரம் புனைந்தார் - 150

# 6. சுந்தரர் தடுத்தாட்கொள்ளப்பட்ட முறை

## தோற்றுவாய்

அளப்பரும் ஆண்டவன் நேர்நின்று ஆடும் ஆட்டத்தைவிட அவன் அடியவர்களின் உள்ளத்தில் நின்று ஆடும் ஆட்டங்கள் இன்பம் நல்குவனவாக அமைகின்றன இறைவனின் திருவிளையாடல்களை விளக்கும் நூலாக அமைந்திருப்பது பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட பெரியபுராணமே இப் பெரியபுராணத்தில் இறைவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட திருவிளையாடலைப்பற்றிக் காண்பதே இக் கட்டுரை.

## இறைவன் தோற்றம்

அருங்கடி எழுந்த போழ்தின் ஆர்த்த வெள்வளைகளாலும், இருங்குழை மகரத்தாலும் இலங்கொளி மணிகளாலும் நெருக்க பீலிச் சோலை நீலநீர்த் தரங்கத்தாலும் கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த திருமணப் பந்தரின்முன் மாலும் அயனுக்கும் அரியராகிய சிவபெருமான் சாலுமொழியால் தடுத்து அடிமை கொள்வதற்காகத் தோன்றுகின்றார்.

## சிவபெருமான் வழக்குரைத்தல்

பொய்த்து வளர் பேரழகு மூத்த வடிவு என்று கூறும்படியும், அத்தகைய மூப்பெனும் வடிவம் என்று கூறும்படியும்

மைய்த்தநெறி வைதிகம் விளைந்த முதலேயோ என்று கூறும்படியும் வேடமுற்று வந்த திங்கள் சடைக் கரந்த பிரானாய சிவபெருமான் பந்தர் முன் அடைகின்றார். மாமறை விதிவழாமல் நடைபெறும் அத் திருமணத்திற்கு வருகை தந்த பெரியவர்களின் முன் சென்று

இந்த மொழி கேண்மின் எதிர் யாவர்களும்

என்று கூறுகின்றார். உடனே சபையில் இருந்த மறையவர்களும் மன்றல் மடங்கலனையானாய சுந்தரரும்

நின்ற திவணீர் மொழிமின் னீர் மொழிவது

எனக் கேட்கின்றனர். கேட்ட அளவில் கண்ணுதற் கடவுளாய சிவபெருமான்

என்னிடையும் நின்னிடையும் நின்ற இசைவால் யான்
முன்னுடைய தோர் பெருவழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீ முயல்தி

எனக் கூறுகின்றார். சிவபெருமான் இவ்வாறு கூறக்கேட்ட அளவில் சுந்தரரும் அவ்வழக்கினை முடித்தல்லது வதுவை செய்யேன் எனக் கூறித் தங்கள் இருவருக்கும் உள்ள வழக்கு என்ன என்று சுந்தரர் கேட்கின்றார்.

## வழக்கு இன்னதென்று உரைத்தல்

சுந்தரர் மறையவன் வேடமிட்டு வந்த சிவபெருமானிடம் வழக்கு இன்னதென்பதை முற்றச் சொல்லுக என்று கேட்ட அளவில் 'தேவரையும் மாலயன் முதல் திருவின் மிக்கோர் யாவரையும் வேறடியாக உடைய "சிவபெருமான்' சபையோர்களை நோக்கி,

............என் அடியான்இந்
நாவல்நகர் ஊரன் இது நான் மொழிவது

எனக் கூறுகின்றார்.

## சுந்தரரின் மெய்ப்பாடு

சிவன் தனக்குச் சுந்தரர் அடிமை என்று கூறக் கேட்ட அளவில் அங்கிருந்தவர்களும், நாவலூராரும் அடைந்த நிலையை,

நின்றார் இருந்தார் இவன் என்னினைந் தான் கொல்லென்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார் திருநாவலூரான்
நன்றால் மறையோன் மொழியென் றெதிர்நோக்கி நக்கான்

எனக் காட்டுகின்றார்,

## சிவபெருமான் ஆளோலை காட்டல்

தனக்கு நாவல் நகர் ஆரூரன் அடிமை என்று கூறக் கேட்ட அளவில் நகை முகம் காட்டிய சுந்தரரை நோக்கிச் சிவபெருமான்,

அக்காலம் உன்தந்தை தன் தந்தை ஆள் ஓலை ஈதால்
இக் காரியத்தை நீ இன்று சிரித்ததென் ஏட

எனத் தன் சாட்சிப் பத்திரத்தை அவைமுன் காட்டு கின்றார் சிவபெருமான்.

## சிவன்—சுந்தரர் சொற்போர்

சுந்தரர் தன் தந்தையின் தந்தை தன் ஆளோலைக் கண்ட அளவிலே தன் நகைமுகம் வேறுபட்டு ஆசில் அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமை என்று

பேசுகின்ற இப்பேச்சை நாங்கள் முதலில் இப்போதுதான் கேட்கின்றோம். நீரென்ன பித்தனோ? என வினவு கின்றார். உடனே இறையவனாய சிவபெருமான்,

> பித்தனுமாகப் பின்னும் பேயனுமாக நீயின்
> றெத்தனை தீங்கு சொன்னால் யாதுமற் றவற்றால் நாணேன்
> அத்தனைக் கென்னை யொன்று மறந்திலை யாகில் நின்று
> வித்தகம் பேசா வேண்டாம் பணிசெய்ய வேண்டும்

எனக் கூறுகின்றார். இதைக் கேட்ட அளவில் சினமுற்ற சுந்தரர் மறையவனாய சிவபெருமானை நோக்கி ஓலை காட்டுமாறு வேண்டுகின்றார்.

## சுந்தரர் ஓலையைக் கிழித்தெறிதல்

ஓலை காட்டென்று நம்பியுரைக்க, சிவன் அவ்வோலையை அவைமுன் காட்டி, நிற்கின்ற வேளையில் இறைவனைத் தொடர்ந்து சென்று ஆளோலை வாங்கி அந்தணரை அடிமையாக்குதல் என்ன முறை? என்று கூறி அவ்வோலையைக் கிழித்து எறிந்து விடுகின்றார்.

## மறையவர் முறையிடல்

தன்னிடமிருந்த ஓலையை வாங்கிக் கிழித்தெறிந்த அளவினில் அவர் செய்த காரியம் முறையோ என்று முறையிட்ட அளவில் இச்சபையின்கண்ணிருந்த மறையவர்கள் மறையவன் வேடத்திலிருந்த சிவபெருமானை வாழுமிடம் குறித்து வினவுகின்றனர். வினவிய நிலையில் தான் வாழுமிடம் வெண்ணெய் நல்லூர் என்று கூறி,

> ...... அறத்தாறின்றி
> வன்றிறல் செய்தென் கையிலாவணம் வலியவாங்கி
> நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை

என்று முறையிடுகின்றார். உடனே அம்மறையவர்கள் இவ்வழக்கினை வெண்ணெய் நல்லூரில் பேசலாம் என வழக்கினைத் தள்ளி வைக்கின்றனர். உடனே சிவபெருமானும் வெண்ணெய்நல்லூரில் மூல ஓலை காட்டி சுந்தரர் தனக்கு அடிமை என்பதைச் சாதிப்பன் என்று கூறி வெண்ணெய்நல்லூர் நோக்கிச் செல்கின்றார்.

## வெண்ணெய்நல்லூரில் வழக்காடுதல்

வெண்ணெய் நல்லூர் சென்று தன் வழக்கினைக் கூறிய அளவில் அங்கிருந்தவர்கள் அந்தணர் அடிமையாதல் இந்த மாநிலத்தில் இல்லை எனக் கூறியவுடன் சுந்தரர் ஓலையைக் கிழித்தது ஒன்றே அவர் தனக்கு அடிமைஎன்பதை உறுதிப்படுத்துகிறது என்று கூறி மேலும் அந்த ஓலை சுந்தரரின் பாட்டனார் தனக்கு எழுதிக் கொடுத்த ஓலை எனக் கூறுகின்றார்.

உடனே சுந்தரர் ஆதி சைவர் என்று இந்தச் சபையில் உள்ள அனைவரும் அறிவர் என்று கூறி,

> தனக்கு வேறடிமையென்றி வந்தணன் சாதித்தானேல்
> மனத்தினால் உணர்தற்கு எட்டா மாயையென்சொல்லு
> கேன்யான்
> எனக்கிது தெளிய வொண்ணாதென்று

கூறுகின்றார். உடனே சபையில் இருந்தவர்கள் மறையவனாய சிவபெருமானை நோக்கி 'இவ்வுலகின்கண் நீயின்றி வரை யுன்னடிமையென்ற வெவ்வுரை யெம்முன்பு ஏற்ற வேண்டும்'' என்று கூறி மீண்டும்,

> ஆட்சியில் ஆவணத்தி லன்றி மற்றயலார் தங்கள்
> காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்

என்று கூறுகின்றனர். உடனே இருண்மறை மிடற்றோன் தன் கையில் இருந்த ஆளோலையை அவையோர் முன் காட்ட அருள்பெறு கரணத்தான் அதை வாங்கிப் பார்க்கின்றான். பார்த்தவன் அதிலிருந்த வாசகத்தை,

அருமறை நாவலாதி சைவனா ரூரன்செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூரிப் பித்தனுக் கியானு
மென்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செயதற்கோலை
யிருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை யென்னெழுத்து

என்று வாசிக்கின்றான். வாசகங்கேட்ட பின்னர் அவ்வோலையில் சாட்சிகளின் எழுத்தையும் நோக்கினர். பின்னர் மாசிலா மறையோர் அவர் பாட்டனார் எழுத்துத்தானா என்பதை அறியுமாறு கூறினர். உடனே சுந்தரர் கொடுத்த அவர் பாட்டனாரின் ஓலையை வாங்கி ஒப்பிட்டுப் பார்க்க, இரண்டும் ஒத்திருந்த நிலையில் சுந்தரருக்கு எதிராக மறையவருக்குச் சார்பாகத் தன் தீர்ப்பினை வழங்குகின்றனர். இதனை,

நான்மறை முனிவனார்க்கு நம்பியாரூரர் தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்

என்ற பகுதியில் தெளியலாம்.

இவ்வாறு தீர்ப்பு வழங்கிய பின்னர் மறையவர் செழுமறை முனியை நோக்கி,

அருமுனி நீமுன் காட்டு மாவண மதனி லெங்கள்
பெருமைசேர் பதியே யாகப் பேசியது மக்கிவ்வூரில்
வருமுறை மனையும் நீடுவாழ்க்கையும் காட்டும்

என்று கூறுகின்றார். உடனே பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவரும் பெருமறையவர் குழாமும் நம்பியும் பின்பு செல்லத் திருவருட்டுறை புக்கு மறைகின்றார். அனைவரும் திகைத்து நிற்கின்றனர். பின்னர் நம்பி தனக்கு மாதோடும்பரின் விடைமேற்றோன்றி தம்மை அவர்க்கு உணர்த்துகின்றார்.

## முடிவுரை

இவ்வாறாகத் திருநாவலூர் நம்பியாம் சுந்தரர் அவர் திருமண நாளன்று திருவெண்ணெய் நல்லூர் உறை அண்ணலால் தடுத்தாட்கொள்ளப்படுகின்றார்.

# 7. மாணிக்கவாசகர்

உலகிடைத் தோன்றி வளர்ந்து செழித்து வாழ்ந்த மொழிகள் பல; இன்றளவும் வாழ்ந்துவரும் மொழிகள் சில; அவற்றிலும் இலக்கிய இலக்கணச் செல்வங்களை இடையறாது பெற்று, அதனால் வளம்பெற்று இன்றளவும் உயர்தனிச் செம்மொழியாய் விளங்கும்மொழி தமிழாகும். ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும் கிரேக்கம் இசையின் மொழி என்றும் ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியன் காதலின் மொழி என்றும் அறிஞர் பெருமக்களால் கூறப்படுவதுபோன்று தமிழ் இரக்கத்தின் மொழி என்றும் பக்தியின் மொழி என்றும் பாராட்டப் பெறுகின்றது. அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல் பிற இலக்கியத்தில் இல்லை என்பர் ஆராய்ச்சியாளர்.

'தமிழோடு இசை பாடல் மறந்தறியாதவர்'களான சமயக் குரவர்கள் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'ப் பாடிய பாடல்கள் கல்நெஞ்சினையும் கனிவிப்பனவாகும். ஒருவாத புகழுடைய திருவாதவூரில் பிறந்து, அரிமர்த்தன பாண்டியனிடம் 'தென்னவன் பிரமராயன்' என்ற விருதுப் பெயர் பெற்று அமைச்சராக விளங்கி, மன்னன் பொருட்டுக் குதிரை வாங்கச் சென்ற பொழுது, திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குரு வடிவில் இருந்த சிவபிரானைக் கண்டு சித்தம் பறிகொடுத்து, ஏற்ற பணியினை மறந்து இறைவன் திருத்தொண்டு

செய்து, அதனால் அரசனின் ஒறுப்பிற்கு ஆளாகி, இறுதியில் இறைவனின் திருவடிநீழலை அடைந்தவர் மாணிக்க வாசகர் ஆவர்.

இறைத்தொண்டிலே திளைத்து உயர்வாழ்வு வாழ்ந்து ஒளிநெறி காட்டிய பெருமக்களாகத் தேவார மூவரையும், திருவாசகம் தந்த மாணிக்கவாசகரையும் குறிப்பர். இந் நால்வரினும் சம்பந்தர் தலையாயவர் என்றும், ஆயினும் அவர் இறையருளை இளமையிலேயே பெற்றவர் என்றும், சம்பந்தர் சுந்தரரினும் சிறந்தவர் என்றும், ஆயினும் அவர் உலகியல் வாழ்க்கையிற் பெரிதும் உழன்றவர் என்றும், ஆதலின் அவரினும் விழுமியர் திருநாவுக்கரசர் என்றும், அவரும் தாம் வாழ்ந்த எண்பத்தோரு ஆண்டுகளில் பெரும்பகுதியினை அறிவுநெறியிலும், எஞ்சிய சில ஆண்டுகளைப் பக்திநெறியிலும் செலுத்தியவர் என்றும், எனவே மாணிக்கவாசகரே உலக அனுபவம் நிரம்பப் பெற்று, மக்கள் மனம் உருகவைக்கும் திருப்பாடல்களை நிரம்பப் பாடியவர் என்றும் அறிஞர் ஆராய்ச்சிக்கண் கொண்டு உரைப்பர்.

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது தொன்றுதொட்டுத் தமிழகத்தே நிலவிவரும் பழமொழியாகும். "திருவாசகத்தை ஒருமுறை ஓதினால் போதும். கருங்கல் மனமுடையவராயிருந்தாலும் அவர் மனம் கரையும். நீர்க் கேணியில் ஊறும் ஊற்றைப் போல ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கி நிற்பர்" என்கிறார் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

**திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்**
**கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்ணீர்**

தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.
—நால்வர் நான்மணிமாலை

என்பது அவர்தம் திருவாக்காகும்.

ஏழாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து கிறித்தவ சமயத்தைப் பரப்ப வேண்டுமென்று தமிழகம் வந்தவர் ஜி.யு. போப் என்னும் பாதிரியார் ஆவர். கிறித்தவ சமயம் பரப்ப வந்த அந்த அருளாளரின் நெஞ்சை நன்கு பிணித்தது திருவாசகம். விரும்பி விரும்பிப் படித்தார்; உருகி உருகி நின்றார். பின் தம் மொழியில் இத்தகு சீரிய நூலை—உயர்ந்த பனுவலை—பத்தித்திறம் பேசும் பாக்களை மொழிபெயர்க்க வேண்டும் என்று எண்ணினார். திண்ணிய எண்ணமுடையார் எண்ணினால், எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் அன்றோ! திருவாசகம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. 'எலும்புருக்கும் பாட்டு' (Bone melting Song) என்று கசிந்து கசிந்து உருகி உருகித் திருவாசகத்தினைக் கண்ணீர் மலர்களைச் சிந்திப் பாராட்டினார் ஜி.யு. போப் அவர்கள்.

தித்திக்கும் திருவாசகத்தின் இனிமையைப் பாமணக்க பாடினார் வடலூர் வள்ளற் பெருமான் அவர்கள்.

வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

என்று வள்ளலார் வாயாரப் பாடினார்.

இவ்வாறு பெரியோர் பலரால் பாராட்டப்பெறும் மாணிக்கவாசகர் இறைவன் ஒருவனே என்று உளமார எண்ணியவர். அவ்விறைவன் சிவபெருமானே என்று தெளிந்தவர். அச் சிவனார் ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவர் என்று எண்ணியவர். அப்படிப்பட்ட தன்மை வாய்ந்த இறைவனை ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்ட எண்ணி அனைவரையும் அழைத்தவர். 'அருவாய் உருவமுமாய் ஆயபிரான்' என்றும் எண்ணி எண்ணி நைந்தவர் அவ்விறைவனை 'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி' என்றும்' 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள் என்றும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியன்' என்றும் பாடிக் களிக்கின்றார். ஞானக்கரும் பின் சாறாகவும், வெல்லப் பாகாகவும், நாடற்கரிய நலமாகவும், நந்தாத தேனாகவும், பழச்சுவையாகவும், சிந்தம் புகுந்து தித்திக்க வல்ல கோனாகவும், பிறப்பு அறுத்து ஆட்கொண்ட கூத்தனாகவும் எல்லாம் வல்ல இறைவனை உள்ளம் மகிழ்ச்சியில் அள்ளூறித் ததும்ப நினைக்கின்றார்.

'நமச்சிவாய' என்ற இறைவனின் 'தாரக மந்திரத்தை அறிந்து தம் நூலின் முதற் பகுதியாம் சிவபுராணத்தை "நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்று தொடங்குகின்றார். அவ்விறைவனை "இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்று பரவிப் போற்றுகின்றார். இறைவன் 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்' என்றும், 'ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்' என்றும், 'தாயிற் சிறந்த தயாவான தத்துவன்' என்றும், 'பேராது நின்ற பெருங்கருணைப் பேராறு' என்றும், 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்' என்றும்,

'தில்லையுட் கூத்தன்' என்றும், தென்பாண்டி நாட்டான்' என்றும், அல்லற் பிறவி யறுக்கும் சொல்லற்கரியான்' என்றும் அகங்குழைந்து நெக்குருகித் துதிக்கின்றார்.

மாணிக்கவாசகர் அன்பு வேறு; ஆண்டவன் வேறு என்று எண்ணியவர் அல்லர். இறைவன் அருளே இடையறாத இன்பத்தைத் தருவது எனக் கருதியவர். ஆதலால் இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் மணிவாசகப் பெருந்தகையார் எண்ணிக் கொண்டு பல பாடல்களைப் பாடியுள்ளார். நானூறு கட்டளைக் கலித்துறையான் இயன்ற திருக்கோவையார் இம்முறையில் அமைந்ததாகும். மேலும், நாயகன் நாயகி பாவத்தில் திரு அம்மானைப் பாடல்கள் துலக்கமுறக் காணலாம். அப்பாட்டில் மாணிக்கவாசகர் தம்மைத் தலைவியாக எண்ணி இறைவனைத் தலைவனாக எண்ணி உளம் உருகிப் பாடியுள்ளார் :

''அழகிய கொன்றை மாலையைத் தலையில் அணிவேன். அணிந்து, சிவபெருமானது எழுச்சிமிக்க தோள்களைச் சேர்வேன்; சேர்ந்து, அவனைக் கூடி, அதனாற் பிறந்த களிப்பால் அறிவு மயங்கிப் புலவி யெய்துவேன். பின்னர், புலவி நீங்கி, அவனது சிவந்த இதழைப் பெற உளமுருகி நிற்பேன். நெஞ்சம் நிறை யழிந்து நெக்குருக அவனைத் தேடுவேன். தேடி, அவன் திருவடியையே எஞ்ஞான்றும் நினைந்திருப்பேன். அவன் திருவருளைப் பெறாது மெலிவேன். அதனைப் பெற்று மீண்டும் மகிழ்வு கொள்வேன். எனவே நெருப்பைக் கையிலேந்தி ஆடுகின்ற கூத்தனின் சிவந்த திருவடிகளையே நாம் பாடுவோமாக.''

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன்; கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன்; செவ்வாய்க் குருகுவேன்; உள்ளுருகித்
தேடுவேன்; தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்.

—திருஅம்மானை : 17

இறைவனைத் தொழும்பொழுது ஏற்படும் உருக்கமே சிவன் கழல் சேர்க்கும் நீர்மைத்து என உளமார எண்ணினார் மணிவாசகப் பெருந்தகையார். கசிந்து கசிந்து உருகி உருகி நிற்கும் நிலையினை அவர்தம் திருப் பாடல்களில் காணலாம். 'பக்திவலையிற் படும் ஈசனின் திறத்தினைப் பின்வருமாறு கூறுவர்:

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன் விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி, உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப்
போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்;
உடையாய் என்னைக் கண்டுகொள்ளே.

—திருச்சதகம் : 1.

"என்னை அடைக்கலமாக ஏற்றருள் செய்தவனே! நின்பெருங் கருணைத் திறத்தை நினைந்து உடம்பு தானே மயிர்க்கூச்செறிந்து நடுநடுங்க, உனது வாசனை பொருந்திய திருவடிகளை வணங்குவதற்கு எனது கைகள் தாமே தலைமேற்கூம்பப் பெற்றுக் கண்களினின்று ஆனந்த வெள்ளம் நிரம்ப, மனமானது ஆர்வத்தால் வெப்பமுடைத்

தாக நிலையற்றவற்றின் பற்றுத் தானே நீங்கியொழிய உனக்கு வணக்கம், வெற்றி வெற்றி வணக்கம் என்றியம்பும் ஒழுக்கத்தையே நழுவ விடாது மேற்கொண்டு நிற்பேன். அடியேனைக் கண்பாரித்து ஏற்றுக் கொள்ளுக."

இவ்வாறு உடலும் உள்ளமும் உருகி நிற்கும் தனது அன்பு நிலையை மணிவாசகப் பெருந்தகையார் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

உற்றாரையும் ஊரையும் பேரையும் கற்றாரையும் வேண்டாது, குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தபிரானின் குரைகழற்கே கன்றை ஈன்ற தாய்ப்பசுவின் மனம்போலக் கனிந்து உருகுவதையே வேண்டி நிற்கிறார் திருவாசகம் என்னும் தித்திக்கும் திருமறையைத் தந்த திருவாதவூரராம் மாணிக்கவாசகர்.

**உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.**

—திருப்புலம்பல்: 3.

"இவ்வாறு பக்திநெறியில் நிற்கும்பொழுது பேரின்பம் பெருகுகின்றது. தொன்றுதொட்டுச் சூழ்ந்துவந்த இருள் எங்கோ ஓடி மறைந்தது. அதனால் இடையீடின்றித் தொடர்ந்து வந்த துன்பம் அறவே அகன்றது. இருட்டறையாக இருந்த இதயம் அன்பு மலிந்த பேரூராக மாறி விட்டது. இவையாவும் குருந்த மரத்தின் கீழமர்ந்த திருப்பெருந்துறைப் பெருமானின் திருவருளால் விளைந்தவே ஆகும்" என்கிறார் மணிவாசகர்.

இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வு அறுத்துச் சோதியாய் அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

—திருவெண்பா : 11.

மாணிக்கவாசகர் இம்மண்ணுலகில் உயிர்கள் எடுக்கும் பல்வேறு பிறப்புக்களைக் கழிவிரக்கத்தோடு, உயிர்களின் பரிணாம வளர்ச்சியின் பக்குவ நிலையோடு குறிப்பிடுகின்றார்:

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்; எம்பெருமான்

—சிவபுராணம் : 26—31

என்று பிறவிப் பிணியின் புன்மையினைக் கூறி, அப்பிணி போக்கும் மாமருந்து சிவனின் திருவடிகளே என்பதைத் தெரிவிக்கும் வகையில்,

மெய்யே உன்பொன் அடிகள்
கண்டுஇன்று வீடு உற்றேன்

எனப் புகல்கின்றார். 'புறத்தார்க்குச் சேயோ'னாய், 'நேயத்தே நின்ற நிமல'னாய், 'மாயப் பிறப்பு அறுக்கும் மன்னவ'னாய், 'ஆராத இன்பம் அருளும் மலை'யாய்' 'மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுட'ராய், 'அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறி'வாய் விளங்கும் சிவபெருமானே இவ்வுலகின் உண்மைத்

தெய்வம் என்கின்றார். "இப்பூவுலகத்தில் உள்ளவர்கள் உண்மைத் தெய்வத்தை உள்ளபடியே உணர்ந்ததாகத் தெரியவில்லை. 'அந்தத் தேவர்தான் சிறந்த தேவர்; அவர்தான் எல்லாம் வல்ல தேவர்' என்று இவ்வாறு பொய்த்தெய்வங்களைப்பற்றிப் பேசிப் புலம்புகின்றனர். இவ்வுலகிலே நான் உண்மைத் தெய்வத்தை உணர்ந்தேன். வேறு ஒரு பற்றும் எனக்கில்லை. என் பற்று முழுவதும் அழிந்து போக வேண்டும். அந்த உண்மையான தெய்வத்திடம் நான் ஆராத அன்பு கொண்டுள்ளேன். ஏ! வண்டே! நீ அந்தத் தேவதேவனிடம் தூதாகச் செல்ல வேண்டும்; என் ஆவலை எடுத்து மொழிய வேண்டும். இதுவே நீ எனக்குச் செய்யத்தக்க உதவி" என்று வண்டை நோக்கி மணிவாசகப் பெருந்தகையார் உரைக்கின்றார்.

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ

— திருக்கோத்தும்பி : 5

எங்கள் மனவிருள் கடந்த முதல்வனே! அரசனே! இந்திரன், பிரமன், திருமால் என்போர் பதவிகளை ஒரு பொருட்டாக மதியேன். என் வாழ்விற்கு முடிவு ஏற்பட்டாலும், உன்னுடைய அடியாரோடன்றிப் பிறரோடு நட்புக்கொள்ள மாட்டேன். நரகம் புகுந்தாலும், அங்கே உனது திருவருளுணர்ச்சியோடு இருக்கப் பெற்றால், அதனை இகழமாட்டேன். உன்னையொழிந்த வேறு தெய்வங்களை மனத்தாலும் நினைக்கமாட்டேன். என்று மிக்க மனவுறுதியோடு மொழிகின்றார் மணிவாசகர் :

கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலேயிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே
—திருச்சதகம் : 2.

இவ்வாறு தான் வணங்கும் ஒரே தெய்வமாகச் சிவபெருமானையே தேர்ந்து, அவரடிகளையே சிந்திக்கப் பெற்றால், சிவானந்த வெள்ளம் சிந்திக்கப்பெறும் என்றும், அழுதுஅடி அடைதலே உயிர்கள் உய்யும் நெறி என்றும் உணர்த்துகின்றார் மாணிக்கவாசகர்.

நாட்டு மக்கள் உள்ளங்கவர்ந்த நாடோடிப் பாடல்கள் (Folk songs) வழி மாணிக்கவாசகர் தடங்கருணைப் பெருங்கடலாம் இறைவனின் அருட்பெருக்கினை வெளிப் படுத்தியுள்ளார். திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல், திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி முதலியன மாணிக்கவாசகர் காலத்து விளங்கிய சமுதாயப் பாடல்களாகும்.

இறைவனை அடைவதற்கு எளிய வழியாக மணிவாசகப் பெருந்தகையார் கொண்டது அழுது அழுது நிற்றலாகும்.

"அடியார்களுள், யான் ஒருவனே பொய் நிறைந் தவன். என் மனமும் வஞ்சமுடையது. என் அன்பும் களங்கமற்றதன்று. ஆனால் தீவினையுடையேன் செய்த பிழையெண்ணி நைந்து உருகி அழுவேனாயின் உன்னை வந்தடையலாம். அதற்கு அருள் புரிவாயாக" என்று அகங்குழைந்து உருகுகின்றார் 'திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளை'யாம் மணிவாசகர்.

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.

—ஆனந்த பரவசம் : 90

இவ்வாறு சிவபுராணத்தில் 'நமச்சிவாய' என முழுமுதற் பொருளாம் இறைவனை வணங்கித் தொடங்கிய வழுவிலாத மாணிக்கவாசகர் 'அம்மை எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே' எனப் பேரின்பப் பேறு பெற்றதனைப் பொருந்தக் கூறியுள்ளார். மும்மலத்தினை யொழித்து முத்திக் கொடையினை முற்பட்டுச் சென்று பெறுங்கள் என்று உலக உயிர்களை விரைவுபடுத்துகின்றார் :

அழிவின்றி நின்றதொர் ஆனந்த வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று முந்துமினே.

—திருப்பாண்டிப் பதிகம் : 8

இவ்வாறு மாணிக்கவாசகர் "சிவபெருமானே உண்மைத் தெய்வம்; அவர் ஒருவரே தெய்வம்; அவரிடமே பற்றுச் செலுத்தவேண்டும். பற்றற்ற நிலை வாய்க்கப் பற்றற்ற அப் பரம்பொருளின் பாதமலர்களைப் பற்ற வேண்டும். அதனாலே மாயப் பிறப்பறும்; மன்னிய சிவானந்த வெள்ள நிலை வந்தெய்தும்" என்று குறிப்பிட்டு, தன் அடியவர்க்கு "மூல பண்டாரம் வழங்குகின்றான்; வந்து முந்துமினே" எனத் தன் பேரன்பின் பெருக்குக் காரணமாக, தான் பெற்ற சிவானந்தத்தை உலக உயிர்கள் எல்லாம் பெறவேண்டும் என்னும் உயரிய கோட்பாட்டில் எல்லோரையும் கனிந்த உள்ளத்தோடு கசிந்துருகி அழைக்கின்றார்.

# 8. "திருவாசகத்தில் ஒரு வாசகம்"

"திருவாசகம் ஒரு குறிக்கோள் இலக்கியம். வாழ்க்கைக்கு வழிகாட்டி உயர்த்துகின்ற ஒரு நூல். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப வேண்டும் என்று வந்த மேலை நாட்டுப் பாதிரி ஜி.யூ. போப் தமிழ்மொழியைக் கற்றுத் திருவாசகத்தைப் படித்துத் தன்னுடைய ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தார். இத்தனைக்கும் திருவாசகம் "நமச்சிவாய வாழ்க; நாதன் தாள் வாழ்க" என்று சிவனுடைய பெருமையைப் பற்றியே பேசத் தொடங்கி முடிகின்றது. அவ்வாறு இருந்தும் போப் ஏன் இதைத் தனது மொழியில் மொழிபெயர்த்தார் என்று பார்த்தால், இறைவனுடைய ஒப்பற்ற கருணைத் திறனைத் திருவாசகத்தைப் போன்று வேறு எந்த நூலும் வெளிப்படுத்தவில்லை என்பதே காரணமாகும். "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது இந்த நாட்டுப் பழமொழி. "கருங்கல் மனமும் கரைந்து தொடு மணற்கேணியாகும்" என்பது சிவப்பிரகாசர் கண்ட முடிவு.

தமக்குத் திருமணமான முதல் இரவிலும் இராமலிங்க வள்ளலார் திருவாசகத்தைத் தம் மனைவிக்குப் படித்துக் காட்டி மனமகிழ்ந்தார் என்பது நாம் அறிகிற வரலாறு. எலும்புருக்கும் பாட்டு என்று போப் திருவாசகத்தைப் பாராட்டுவதோடு, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்ற தொடருக்கு இணையான கருத்துடைய ஒரு தொடர் உலக இலக்கியத்திலேயே

காணமுடியாது என்று கருதுகிறார். இதற்குக் காரணம் பக்தியினுடைய பிழிவாக, அருளின் ஆணிவேராகத் திருவாசகம் விளங்குகிறது.

திருவாசகத்தில் ஒரு வாசகத்தை மட்டும் எடுத்துப் பார்ப்போம். பழந் தமிழர் இயற்கையோடு இணைந்த செந்நெறி வாழ்ந்தவர்கள். மலையை மேகம் தங்கும் இடமாக மேல்நாட்டினர் கூறினர். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதி தன்னுடைய இனமாக, கூட்டமாகவே மலையைக் கருதினார். ஈராயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த சங்ககாலத் தலைவி புன்னை மரத்தைத் தம் தமக்கையாகக் கருதி வாழ்த்துகிறாள். இடைக்காலத்தில் ஞானசம்பந்தரும் கிளியை அழைத்துச் 'சிவ சிவ' என்று கூறவேண்டுமெனப் பேசுகின்றார். நாகணவாய்ப்புள்ளைத் திருமாலுக்குத் துதிசெய்ய வேண்டும் என்று நம்மாழ்வார் பணிக்கின்றார். இத்தகைய ஓர் உயர்நெறி தமிழர் கண்ட செந்நெறியாகும். அந்த வகையில் நாட்டுப் பாடல்களைக் கவியரங்கேற்றிய மணிவாசகப் பெருமான், வண்டை விளித்து, விழுமியகருத் தொன்றை எடுத்து மொழிகின்றார். “ஏ, வண்டே! ஒரே ஒரு பூவில் போய்த் தேன் உண்ணாதே! அந்தப் பூவில் சிறிது தேன்தான் உண்ணக் கிடைக்கும். எப்போதும், தேனைச் சொரிந்து கொண்டேயிருக்கின்ற சிவபெருமானிடத்துச் சென்றால் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கலாம். அந்தக் குனிப்புடையான் கழலில் திளைக்கலாம். எனவே உன்னுடைய லட்சியம் குறிக்கோள் உயர்ந்ததாக இருக்கட்டும், இறைவனுடைய பாதமலரே உன்னுடைய இறுதிக் குறிக்கோளாக உறுதியாக அமையட்டும்” என்று எடுத்து மொழிகின்றார்.

'தினைத்த னையுள்ளதோர் பூவினிற்றேன் உண்ணாதே;
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்,
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்னும் பாடலில் மாணிக்கவாசகரின் கருத்தும் அனுபவமும் விளக்கமுறுகின்றது.

மனித மனம் வண்டு போன்றது. மலருக்கு மலர் தாவுவதுபோல் சிந்தனையிலிருந்து சிந்தனை தாவி நிற்பது. இந்த மனத்தை அடக்கக் கற்கவில்லையென்றால், அது மனிதனைச் சும்மாவிடாது. "மனம் அடங்கக் கற்கவேண்டும்" என்பது பெரியவர்கள் கருத்து, ஐம்புல வேடர்களால் அலைக்கழிக்கப்படக் கூடாது என்பது திருமுறைவாணர்கள் கண்ட நெறி. "பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் நீடு வாழ்வர்" என்பது குறள். ஐந்தவிப்பவன் ஆண்டவன் ஒருவனே. உலகிலே பொருட் பற்றும், மண் பற்றும், பெண் பற்றும் மனிதனுக்கு ஏற்படுகிறது. எல்லாம் சாண் வயிற்றுக்கே. இதையே தாயுமானவர் "எல்லாம் யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் உறங்குவதும் ஆக முடியும்" என்கிறார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் முருக அடியார்களுக்கு உயர்ந்த லட்சியம் இருந்தது என்பதைப் பரிபாடல் உணர்த்தும். "யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால் அருளும், அன்பும் அறனும் மூன்றும். உருவினர்க் கடம்பின் ஒளி தாராயோ" என்று கூறப் பட்டுள்ள கருத்தினை அறியமுடிகிறது.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் 7 பாடல்களில் இறைவனின் தாள்களைப்பற்றிப் பேசுகிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'மற்றுப்பற்றெனக்கின்றி

நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்'' என்கிறார். எனவே இப்படிப்பட்ட இறைவனிடம் பற்றினை நாம் மேற் கொண்டால்தான், மற்ற உலகியல்பான பற்றுக்களை நீக்க முடியும். அவ்வாறு நீக்கினால் அந்தமில் ஆனந்த தேன் சொரியும் குனிப்புடையான் இறைவனின் மலர் பாதங் களைக் கண்டு பேறு எய்தி உய்ய முடியும். இதுவே திருவாசகத்தில் ஒருவாசகம்.

# 9. மேன்மைகொள் சைவ நீதி

இன்று உயிர்த்திருக்கும் சமயங்களில் சைவ சமயம் மிகப் பழமையானதாகும். சிந்துவெளியிற் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் பழமையேயாகும். அது மாக்கல் இல்லா அதனினும் முற்பட்ட காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது, இன்றளவும் வழக்கில் உள்ள மிகப் பழைய சமயமாக இது விளங்குகிறது என்று 'சிந்துவெளி' என்கிற சிந்துவெளி நாகரிகத்தை ஆராய்ந்த ஆராய்ச்சி அறிஞர் சர் ஜான் மார்சல் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[1]

"முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாய்'' என்று மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் சிவபெருமானைக் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம். எனவே சைவத்தின் பெரும் கடவுளான சிவபெருமான் பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் பொலிந்து இலங்குகின்றார் என்பது புலப்படும்.

'சிவம்' என்ற சொல்லுக்கு நன்மை, முத்தி, செம்மை எனப் பல்வேறு பொருள்கள் கூறுவர். 'சிவன்' எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான்' என்று சிவனைப்பற்றிய அடியும் ஈண்டு எண்ணத்தக்கது. எனவே, செம்மை என்பது எதுவோ அதுவே சிவம், நன்மை தருவது எதுவோ அதுவே சிவம். எல்லாரும்

---

1. Sir John Marshall Mohenjo-daro and the Indu Civilization Vol. I, Preface ; p. vii.

இன்புற்றிருக்க நினைப்பது எதுவோ அதுவே சிவம் என்பதாகும். அகநானூற்றுப் புலவர் ஒருவர் ஒரு மாலைக் காட்சியை வருணிக்கின்றார். "கதிரவன் ஒளியால் செவ்வொளி பெற்ற வானம்,கதிரவன் மறைகின்ற பொழுது அந்தி நேரத்தில் செக்கர் வானமாகக் காட்சி அளிக்கின்றது.

அவ் வந்தி நேரத்தை அடுத்து வானம் காரிருள் அடைகிறது. இந்தக் காட்சி மதுரை கண்ணத்தனார் எனும் புலவர் பெருமானுக்குச் சிவனும், மாலும் இணைந்து கிடப்பது போன்ற ஒரு காட்சியினை அவர் கண்முன் காட்டுகின்றது. அதன் விளைவாக ஒரு கவிதை பிறக்கிறது. அக் கவிதைப் பகுதி வருமாறு :

வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடலணி கொளாஅ
வத்த மாலை' (அகம் 360)

'மேலும், 'கொன்றை அலங்கல் அம் தெரியலான்'' 'பிறங்குநீர் சடைக் கரந்தான்', 'ஏற்று ஊர்தியான்', 'புதுத்திங்கள் கண்ணியான்' என்றெல்லாம் குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. சிவபெருமானுக்கு உகந்த நாள் திருவாதிரையாகும். மார்கழித் திங்களில் வரும் ஆதிரை நன்னாளில் சிவபெருமானுக்குத் திருவிழா கொண்டாடப்படுகிறது.

சிந்து கங்கை சமவெளி நாகரிகம், ஹரப்பா, மொஹஞ்சதாரோ என்று இன்று பாகிஸ்தானிலே புது நகரங்களாக விளங்கும் இடங்களில் இன்றைக்குச் சற்றேறக்குறைய ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் விளங்கியது. அங்கு வாழ்ந்த மக்கள் இலிங்க வழிபாட்

டினை—சிவ வழிபாட்டினை மேற்கொண்டு இருந்தனர் என்றும் அவர்கள் தங்கள் வீட்டிற்குள்ளேயே கரந்துறை சாக்கடைகளை (Underground drainages) — அமைத்து வீடுகட்டி வாழ்ந்தனர் என்றும் தெரியவருகிறது. இதனால் பல்லாயிரம் ஆண்டு காலத்திற்கு முற்பட்டதாகச் சைவ சமயத்தின் பழமையினை நாம் கருதலாம்.

சங்க கால இலக்கியங்களில் சிவனாரைப்பற்றிய குறிப்பு தெளிவாக இடம்பெற்றிருப்பதைக் காணலாம். மலைக் காட்சியினை வருணிக்கின்ற புலனழுக்கற்ற அந்தணரான கபிலர் ஓர் உவமை வாயிலாக சிவனார் இமயமலையில் உமாதேவியோடு வீற்றிருக்கும் காட்சியினை நம்முன் காட்டுகின்றார். இமய மலையினை வில்லாக வளைத்த இறைவன் அவ் இமயமலையில் தம் மனதிற்கு இயைந்த மனைவியாம் உமாதேவியோடு வீற்றிருந்தபொழுது, அவ்வழியே வந்த ஐயிரு தலைகளும் இருபது தோள்களும் உடைய இராவணன் அம்மலையை எடுக்க முனைந்தபொழுது உமையம்மை நடுங்கி, சிவனைச் சேர்த்துக் கட்டிக்கொள்ள, சிவனார் தம் கால் கட்டை விரலால் அம் மலையினை அழுத்தி இராவணன் மலையின் கீழ்ப் புகுத்திய கைகளை எடுக்கமுடியாமல் வருந்திக் கதறியதாகக் கபிலர் பெருமான் குறிப்பிடுவர். இந்த உவமையினைக் காடு சூழ்ந்த மலைக்காட்சியை வருணிக்கும்பொழுது எடுத்துக் கூறுவர். ஒரு மலைப்பாங்கில் உறங்கிக்கொண்டிருந்த யானை தன்னுடைய கனவில் ஒரு புலியைக் கண்டது. தன்மேல் பாய வருகின்ற புலியினை அடிக்க வேண்டுமென்று கருதி அந்தப் புலியின் மேல் பாய்ந்தது. அவ்யானை பாய்ந்தது கனவில் அன்றோ! ஆதலின், புலி போல் பூக்கள் மலர்ந்து, தோற்றம் கொண்டிருந்த வேங்கை மரத்தைப் புலி எனக் கருதி யானை தன் கொம்புகளைப் புகுத்தியது. அப் பச்சை

மரத்தில் அதனுடைய கொம்புகள் புகுந்து மீண்டும் வெளியே எடுக்கமுடியாமல் அவ்யானை வருந்தி உழந்தது. இந்த மலைக் காட்சியை விளக்கவேண்டி கபிலர்பெருமான் எடுத்துக்காட்டிய உவமைதான் மேலே நாம் கண்ட சிவன் இராவணன் உள்ளிட்ட கதைக் காட்சியாகும். அப்பாடல் பகுதி வருமாறு :

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல......மதயானை
கோடுபுய்க் கல்லாது உழைக்கும்'' (குறிஞ்சிக்கலி. 2)

ஆலமர் கடவுள், ஆலமர் செல்வன் என்றெல்லாம் சிவன், சங்க நூல்களில் பேசப்பெற்றுள்ளார். மேலும், கங்கையைத் தன் வார்சடையில் கரந்த வரலாற்றினைப் பெரும்பாணாற்றுப்படை பின்வருமாறு பேசும் :

"இமையவர் உறையும் இமையச் செவ்வரை
வெண்திரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்பொழிந்து இழிதரும் போர்க்கருங் கங்கைப்பெருநீர்''
(பெரும்பாண். 430-33)

ஐம்பெரும் பூதங்களைப் படைத்து, மொழி முதற் பொருளாய் விளங்கி அலகிலா விளையாட்டு உடையவனாகச் சிவன் துளங்கும் செம்மையினை மாங்குடி மருதனார்,

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்துஉடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க காலத்தை அடுத்து தமிழில் எழுந்த முதற் காப்பியமாம் சிலப்பதிகாரம், முட்டாச் சிறப்பின் பட்டினமாம் காவிரிப்பூம்பட்டினத்தில் அக்காலத்தில் அமைந்திருந்த கோவில்களை வரிசைப்படுத்திச் சுட்டிக் காட்டுகின்றபொழுது முதலாவதாகச் சிவன் கோயிலையும் இரண்டாவதாக முருகன் கோயிலையும், மூன்றாவதாகப் பலதேவன் கோயிலையும் நான்காவதாகத் திருமால் கோயிலையும் குறிப்பிட்டு இருப்பதனை இன்று நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

**"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
**வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**
**நீலமேனி நெடியோன் கோயிலும்"**

சிலப்பதிகாரத்தை அடுத்துத் தோன்றிய மணிமேகலையிலும் சிவனுக்கு உரியகோயிலையே முதலில் வைத்துக் கூறியுள்ளார் சாத்தனார். இக்காப்பியத்தில்

**"நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாப்**
**பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக"**

எனவரும் பகுதி எண்ணத்தக்கது.

கி. பி. 3-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரை தமிழக வரலாற்றில் அமைந்துள்ள பல்லவர் காலத்தினை நாம் பக்தி காலம் எனலாம்.

இப்பக்தி காலத்தில் நாயன்மார்கள் தோன்றி,

**"திசையனைத்தின் பெருமையெலாம்**
**தென்றிசையே வென்றேற**
**மிசையுலகும் பிறவுலகும்**
**மேதினியே தனிவெல்ல**

அசைவில்செழுந் தமிழ் வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறியும்
இடங்கொள்ளும் நிலைபெருக''

என்று பாடிச் சைவ சமயத்தை வளர்த்தார்கள். இக் காலத்தில் தான் தமிழ் உணர்ச்சியும், சைவ உணர்ச்சியும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாதபடி மக்கள் வாழ்க்கை அமைந்தது. பல்வேறு கொள்கைகளிலும், சூழ்நிலை களிலும் சிதறுண்டு கிடக்கும் ஒரு நாட்டின் மக்களை அவரவர்கள் பேசும் தாய்மொழியின் வாயிலாகவே ஒன்று படுத்தி கிளர்ந்தெழச் செய்ய முடியும் எனும் மனவியல் உண்மையினை[1] உணர்ந்த சைவ சமயக் குரவர்கள், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி சைவப் பயிரை நன்கு வளர்த்தனர்.

பல்லவர்கள் காலத்தை அடுத்து அமைந்த பிற்காலச் சோழர் காலத்தில் சைவம் மிக உயர்ந்த நிலையை எய் தியது. நீர் வளமும், நில வளமும் வான் பொய்ப்பினும்

---

1. In any social group, whatever its nature and however large it may be, language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group and is at the same time the symbol and safeguard of their common life. What instrument can have greater efficacy than language in affirming the individuality of the group? It is their sign of recognition and their badge of brotherhood.

J. Vendryes.

தான் பொய்யாக் காவிரியினால் சோறு மணக்கும் மடங்களை உடையதாகச் சோழ நாடு விளங்கியது. சோழ நாட்டில் மட்டும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சிவனுடைய திருக்கோயில்கள் நிலவின என்பது நினைக்கத்தக்க செய்தியாகும். சோழ மன்னர்களோடன்றி அவர்தம் மனைவியார், உறவினர், குறுநில மன்னர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், அரசாங்க அலுவலர்கள், ஊர் அவையினர், வணிகக் குழுவினர், அரண்மனையில் அந்தப்புரத்தில் பணிபுரிவோர், திருமஞ்சனவேளத்தார், அடுக்களைப் பெண்டிர் என அனைத்துத் தரப்பினரும் திருக்கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டனர், கொடை வழங்கினர் என்பதை அறிகின்றபொழுது, அக்கால மக்களிடையே ஓங்கி நின்ற சைவ சமயப் பற்றினை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், "சோழ மன்னர்கள் சமயப் பொறை மிக்கவர்களாகத் திகழ்ந்தனர் என்றும், பிற சமயத்திற்கு எனத் திருப்பணிகள் செய்துள்ளனர்" என்றும் வின்செண்ட் ஸ்மித் எனும் வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்[1].

செம்பியன் மாதேவியர் கண்டராதித்த சோழனின் மனைவி ஆவார். கண்டராதித்த சோழன் சிறந்த சிவ பக்தன். இளம் வயதிலேயே சேரநாடு சென்று இயற்கை எய்தியவர். எனவே, இவரை மேற்கு எழுந்தருளிய கண்டராதித்தன் என்றும் வரலாற்றில் குறிப்பிடுவர், செம்பியன் மாதேவியார் தம் மகன் உத்தம சோழனைச் சிறந்த சிவ பக்தனாக்கும் திருப்பணியில் முனைந்தார்

1. The chola kings apparently without exception were votaries of the God siva, but as a rule, were tolerant of the other sects in the normal Indian manner." (Vincent Smith's History of India.)

பற்பல சிவாலயங்களில் அவருடைய கொடை சிறந்து மிளிர்ந்தது. பல கோயில்களை இவர் கற்றளிகளாக ஆக்கினார். நாகப்பட்டினத்திற்கு அருகில் செம்பியன் மாதேவி என்ற பெயரில் ஓர் ஊர் உண்டாக்கி ஒரு கோயிலினையும் கட்டியுள்ளார். இன்று கோனேரிராஜபுரம் என்று விளங்கும் திருநல்லத்தில் 'கண்டராதித்தன்' எனும் சிவன் கோயிலினை எடுப்பித்து அத் திருக்கோயிலில் தன் கணவர் கண்டராதித்த சோழன் சிவலிங்கத்தை வழிபடுவதுபோன்ற ஒரு படிமத்தை அமைத்துள்ளார். அப் படிமத்தின்கீழே ''கண்டராதித்தன் தேவர் தேவியார் மாதேவடிகளான செம்பியன் மாதேவியார் தம்முடைய திருமகனார் உத்தம சோழர் திருராச்சியம் செய்தருளா நிற்க, தம்முடையார் கண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்லமுடையார்க்குத் திருக்கற்றளி எழுந்தருளுவித்து இத் திருக்கற்றளியிலேயே திருநல்லமுடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளுவித்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர்" என்ற கல் எழுத்து காணப்பெறுகிறது. மேலும், உத்தம சோழன் மனைவியார், செம்பியன் மாதேவி கோயிலில் நாள் வழிபாட்டிற்கும் திங்கள் வழிபாட்டிற்காகவும் நிவந்தங்கள் ஏற்படுத்தினார் என்ற குறிப்பினைக் காணுகின்றபொழுது, மாமியார் மாட்டு மருமகள்செலுத்திய பேரன்பு புலப்படுத்துகின்றது. முதலாம் இராஜராஜ சோழன் திருமுக்கடலில் செம்பியன் மாதேவி பெருமண்டபம் எழுப்பினார் என்ற வரலாற்றுச் செய்தியில் இருந்து நாம் இராஜராஜ சோழன் தன் பாட்டியார் மாட்டு செலுத்திய பேரன்பினையும் பெருமதிப்பினையும் அறிய முடிகிறது. மேலும் முதலாம் இராஜராஜன் எடுத்துள்ள தஞ்சை பெருவுடையார் திருக்ோயில் இன்றும் தஞ்சை பெரியகோயில் என்றே அழைக்கப்படுகின்றது.

முதலாம் இராஜராஜன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் வெற்றியைக் கொண்டாடுவதற்காக ஏற்படுத்திய கோயில் கங்கை கொண்ட சோழனின் கோயில் எனத் துளங்குகின்றது. இவனுடைய மகளார் அம்மங்கைதேவியின் மகன் முதல் குலோத்துங்கன் ஆவான். அவன் திருநீற்றுச் சோழன் என்றே வழங்கப்பட்டான். முதற் குலோத்துங்க சோழனின் மகன் விக்கிரம சோழன் தில்லை சிற்றம்பலம் வாய்ந்த திருச்சுற்றுவாயில், கோபுர வாயில் இவற்றிற்குப் பொன் வேய்ந்தான். நூற்றுக்கால் மண்டபம் கட்டினான். திருவிக்கிரமன் திருவீதியும் அமைத்தான். இவனுடைய மகன் இரண்டாம் குலோத்துங்கன் தில்லைத் திருப்பணி களை மேலும் விரிவு படுத்தினான். எழுநிலைக் கோபு ரங்களை எடுத்து பேரம்பலத்திற்குப் பொன்வேய்ந்து சிவகாமி அம்மைக்கு என்று அமைத்த கோயிலைப் பெரி தாக்கினான். திருவாரூர்க் கல்வெட்டு ஒன்று இதனைத் "தில்லைக் கூத்தபிரான் திருவடித்தாமரையிலுள்ள அரு ளாகிய தேனை உண்ணும் வண்டு போன்றவன்" என்று கூறுகின்றது. காலங்கடந்து நிற்கும் கற்கோயில்களைக் கட்டிய பெருமை தமிழர்களுக்கு உரியது; எனினும் சிறப்பாகத் தஞ்சையை ஆண்ட சோழர்கள் குறிப் பிடத்தக்கவர்கள்.[1]

இரண்டாம் இராஜராஜன் திருமுறைகள் ஓதுவதற்கும் உதவினான். கருவூர்த்தேவர் பாடிய பாடல்கள் திருமுறைகளில் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் பெரியபுராணம் முகிழ்த்தது.

---

1. "The Tamil races are the greatest temple builders in the world and great pagoda at Tanjore is by far the greatest temple in India"

மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய மெய் கண்டனார் தோன்றினார். மேலும், சோழ மன்னர்கள் தேவாரம் திருக் கோயில்களில் பாடப்படுவதற்கு வழிவகை கண்டனர். சுருங்கச் சொன்னால் சைவத்தின் பொற் காலம் என்று சோழர்கள் காலத்தைச் சொல்லலாம்.

புகழ்பெற்ற இப் பிற்காலச் சோழர்களுக்குப் பின்னர் பிற்காலப் பாண்டியர் ஆட்சியும், நாயக்கர் ஆட்சியும் அதனை அடுத்து ஆங்கிலேயர் ஆட்சியும் தமிழகத்தில் அமைந்தன. சோழர் காலத்தை அடுத்து சைவ சித்தாந்த சாத்திரங்கள் 14 தமிழில் தோன்றின. திருவியலூர் உய்ய வந்ததேவர் இயற்றிய திருவுந்தியாரும் திருக்கடவூர் உய்ய வந்ததேவர் வழங்கிய திருக்களிற்றுப்படியாறும், கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மெய்கண்ட சாத் திரங்கள் ஆகும். சந்தான குரவருள் முதல்வராகிய மெய் கண்டார் அருளிய சிவஞானபோதமும், அவர் மாணவர் அருணந்திசிவம் அருளிய சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்னும் பனுவல்களும், திருவதிகை மனவாசகங் கடந்தார் வழங்கிய உண்மை விளக்கமும் குறிப்பிடத்தக்க சித்தாந்த நூல்கள் ஆகும். திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்ற எட்டு நூல்கள் உமாபதி சிவாசாரியார் இயற்றிய வையாகும்.

> "தொன்மையவாம் எனும்எவையும் நன்றாக இன்று
> தோன்றியநூல் எனும் எவையும் தீதாகா"

எனச் சிவப்பிரகாசத்தில் வரும் அடிகள் புதுமைக்கும் இடம் தந்துள்ளதைக் காணலாம். 15-ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் வாழ்ந்த அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் முருக அடியார்களிடத்தில் தனி பக்திச் சிறப்

பினைப் பெற்றுள்ளது எனலாம். கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, திருவகுப்பு, மயில் விருத்தம் முதலியனவும் அருணகிரிநாதரால் பாடப்பட்டவையாகும்.

*17*-ஆம் நூற்றாண்டின் இணையிலாப் புலவர் குமர குருபரர் ஆவார். இவர் இயற்றிய நூல்கள் அனைத்தும் சைவ உலகின் தலைசிறந்த நூல்கள் எனலாம். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவப்பிரகாசர், 'கற்பனைக் களஞ் சியம்' எனப் போற்றப் பாடுபவர். பிரபுலிங்கலீலை இவர் இயற்றியதாகும். மேலும், சோணசைவமாலை நால்வர் நான்மணிமாலை முதலியனவும் இவரால் பாடப்பட்டன. தாயுமான தயாபரரான தாயுமானவர் பாடல் 18-ஆம் நூற்றாண்டில் எழுந்த சிறந்த நூலாகும். 19-ஆம் நூற் றாண்டுக் கம்பர் எனச் சொல்லப்பட்டு விளங்கும் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், வடலூர் வள்ளல் பெருமானும் சென்ற நூற்றாண்டில் திகழ்ந்தார்கள். 20-ஆம் நூற்றாண்டில் சைவம் பல்வேறு நிலைகளில் வளர்ந்து உயர்வு பெற்று வருகின்றது சைவ சமய வளர்ச்சிக்குத் தமிழகத்தில் விளங்கும் சைவமடங்கள், ஆதினங்கள் ஆற்றிவரும் பணிகள் அளவற்றவை; சைவசித்தாந்தப் பெருமன்றம் சித்தாந்த நெறியைப் பரப்பும் பாங்கில் மாநாடுகள், வகுப்புகள் நடத்தி வருவதுடன், சித்தாந்தம் என்ற இதழினைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டு வருதல் பாராட்டத் தக்கது. தமிழ் மக்கள் மொழி யுணர்ச்சியுடன் சமய உணர்ச்சியும் பெற்றுச் சமய உண்மைகளை உணர்ந்து அவற்றின்வழி நடப்பதன் வாயிலாக நாட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் தொண் டாற்ற முடியும். வளர்க தமிழ் வாழ்க சைவநெறி!

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்''

# 10. மக்களை நோக்கிய கொள்கையே சைவ சித்தாந்தம்

**த**லைவனை நோக்கித் தொண்டன் செல்லுவது போல இறைவனை நோக்கி அனைத்துயிர்களும் செல்ல வேண்டும் என்பதே சமய நீதி. ஆனால் தொண்டனை நோக்கித் தலைவன் செல்வதுபோல உயிர்களை நோக்கி இறைவன் செல்லுவது போல—செல்லுவதாக அமைந்த தத்துவக்கொள்கையே சைவ சித்தாந்தம்.

தன்னிடம் அடிமை பேணிநின்ற சுந்தரரை தன்னுடன் சேர்த்துக்கொண்டு, தானும் சுந்தரருமாகச் சேர்ந்துகொண்டு வந்து, அடியவர்களுக்கு அடியவராகத் தன்னை அமைத்துக்கொண்ட நெறியே சைவசித்தாந்தம்.

''பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் நம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
இருமையும் கடந்து நின்றார்
இவரை நீ அடைவாய்''

என்று அடியவர் பெருமையை இறைவனே பாராட்டிக் கூறி, இவர்களையே அடைக்கலமாக அடையவேண்டும் என்று, சுந்தரரை அடியவர்களுக்கு அடிமையாக ஆக்கிய தோடன்றி, நாமும் அவர்களுக்கு அடிமை என நின்ற திறத்தைப்பாடும் கருத்தை முடிந்த முடிபாகக் கொண்ட

கொள்கையே சைவ சித்தாந்தக்கொள்கை. அதை இலக்கணமாகக் கொண்டு இலக்கியமாக அமைந்த வரலாற்று விளக்கமே பெரிய புராணம்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடத்தை" முன்னாக வணங்கிப் பின்னர் அதனோடு ஒத்த வகையில் ஆலயத்தை வணங்க வேண்டும் என்று இலக்கணம் வகுத்த பெருமையுடையதே சைவ சித்தாந்தம். அதனை விளக்கும் சிவஞான போதத்துப் பன்னிரண்டாம் நூற்பா வானது,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரண் எனத் தொழுமே''

என மலர்ந்து நின்றது.

சைவ சித்தாந்தம் என்பது மக்களின் வாழ்வியற் கலையை இலக்கண முறைப்படி எடுத்துக்கூறும் கொள்கையேயாகும்.

'கோயிலைப் படமாக்கி, மக்களை நடமாடும் கோயில்' என்று காட்டிய கொள்கையே சைவ சித்தாந்தம்.

படம் என்பது திரை. மனிதனை உண்மைக் கோயிலாகக் கண்டு, உண்மைக் கோயிலை விளக்கும் படம் என்று நின்றதே திருக்கோயில் என்று விளக்கினார் திருமூலர். மக்களையே உண்மைத் திருக்கோயில் என்று காட்டி, அவர்களை படமாக நிறுத்திக் காட்டியதே நாம் இன்று வணங்கும் கோயில் என அமைத்துக் காட்டினார் திருமூலர். அத்துடன் நிற்கவில்லை.

நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று செய்தால் அது படமாடும் கோயில் பகவற்கு ஆகும் என்று கூறினார்.

அதைவிடச் சற்று மேலும் சென்று, படமாடும் கோயில் பகவற்கு ஒன்று ஈயில் நடமாடும் கோயில் நம்பர்க்கு அது ஆகா என எதிர்மறை வடிவிலும் அமைத்துக் காட்டினார். எனவே, மக்களைக் கோயிலாக்கி, மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு எனவும் எடுத்துக்காட்டிய கொள்கையைத் தன்னுட் கொண்டு விளங்குவதே சைவ சித்தாந்தப் பெருநெறி.

சாத்திரம் பேசுவதாலும், இறைவனைப் போய்ப் பல்கால் வேண்டுவதாலும் பயனில்லை என்று இடித்துக் கூறி, இரப்பவர்க்கு ஈபவர் மேலேயே இறைவன் வந்து அருள் செய்வான் என்று தத்துவம் கூறி மக்களை நோக்கிப் பணியாற்ற வைத்த கொள்கையே சைவ சித்தாந்தம்.

"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்"

என்று கூறி, இரப்பவர்களையே பாத்திரமாகக் கொண்டு அவர்களுக்கு இடும் சோறுதான் உங்களை வாழ்விக்கும் என்று கூறி, சமுதாயத் தொண்டினை வலியுறுத்திப் பேசிய அப்பரடிகள் வாழ்வியலை உள்ளீடாகக் கொண்டதே சைவ சித்தாந்தம்.

"இரப்பவர்க்கு ஈயவைத்தார்
ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கு எல்லாம்
கடுநரகங்கள் வைத்தார்"

என்று இக்கருத்தை வெளிப்படுத்தினார் அப்பரடிகள்.

இறைவனுடைய குணம் ஞானமே என்று பேசியது தத்துவ உலகம். ஆனால் இறைவன் குணமானது தயவின் மூலமாகிய அருளே என்று பேசி, அருள் தன்மை கொண்டு பிற உயிர்களையும் தம்முயிர் போல் வாழ வைக்கும் அருளே இறைவனை அடையும் வழி என்று வாழ்வியலை— மக்களின் வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துப் பேசியது சைவ சித்தாந்தம்.

''தயாமூல தன்மமெனும் தத்துவத்தின்
வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம்''

ஒன்று கொடுப்பவனையே அருளாளனாகக் கொண்டு அருளறத்தின் மூலமாக மட்டுமே இறைவனை அடைய முடியும் என்று பேசியது சைவ சித்தாந்தம்.

# 11. அபிராமி அந்தாதி

சோழ நாட்டில் வற்றாது வளஞ்சுரந்து பாயும் காவிரியின் தென்கரையில் அமைந்திருப்பது திருக்கடவூர். இது தேவாரப்பாடல் பெற்ற தலமாகும். இவ்வூரில் இன்றைக்குச் சற்றேறக்குறைய இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அமிர்தலிங்கம் ஐயரின் மகனாகத் தோன்றியவர் சுப்பிரமணியன் என்பவராவர். வழிவழியாகத் தேவி உபாசனையும் இசை ஞானமும் வாய்ந்த குடும்பத்தில் வந்தவராதலால் இவர் இளமை தொட்டே திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கும் அபிராமி அம்மையை மிகுந்த நேயத்துடன் வழிபட்டு வருவாராயினார். தமிழ், வடமொழி இரண்டிலும் முற்றிய புலமை நிறைந்த இவர் அபிராமியம்மை மீது ராகமாலிகையில் ஒரு கீர்த்தனம் பாடியுள்ளார். நாளுக்கு நாள் அபிராமியம்மை மீது இவர் முருகிய பேரன்பு செலுத்தத் தொடங்கினார். அபிராமியம்மை மீது இவர் காட்டிய பேரன்பு செலுத்திய பக்தித் திறமும் எளிய உலகோர் புரிந்துகொள்ளும் திறத்ததாக இல்லை. எனவே, மக்கள் இவரை ஓர் அம்பிகைப் பைத்தியம் என்றே கூறி ஒதுக்கிவந்தனர்.

அதுபோது தஞ்சையை ஆண்ட மன்னர் மகாராஷ்டிர வம்சத்தைச் சேர்ந்த சரபோஜி மன்னராவர். அவர் தை அமாவாசையன்று காவிரிப்பூம் பட்டினம் சென்று புகார் முகத்தில் நீராடி மீள்வதுவழக்கம். ஒரு முறை அவ்வாறு சென்றபோது புகாரில் நீராடி இடையில் திருக்கடவூரில் அம்பாள் தரிசனத்திற்காக வந்தார்,

அபிராமி அம்மையின் சந்நிதியில் பித்துற்றாரீபோல் நின்ற அபிராமி பட்டரைக் கண்டார். அங்குள்ளவர்களிடம் 'இவர் யாரீ?' என உசாவினாார். அதற்கு அருகிலிருந்தவர்கள் 'இவர் பித்தர்' என்றனரீ. மன்னருக்கோ அவர்கள் பேச்சில் நியாயம் இருப்பதாகப் படவில்லை. எனவே ஏதேனும் ஒரு சாக்கில் அபிராமி பட்டரோடு பேச எண்ணங்கொண்டு "இன்று அமாவாசை உண்டா? எவ்வளவு நாழிகை இருக்கிறது" என வினவினாார். சந்திரமண்டலத்துச் சந்திரன் போல் அமுதமயமாய் வெள்ளைக் கலை விரித்து விளங்கும் முழுமதி வடிவில் அம்பிகையைத் தம் நெஞ்சில் நிறுத்திடப் பார்த்து அவ்வின்பத்தில் திளைத்துக்கொண்டிருந்த அபிராமி பட்டர், திடீரென்று மன்னரீ கேட்ட கேள்வியால் விழிப்புற்று, 'இன்று பௌர்ணமி' என்று சொன்னார். அருகிலிருந்தவரீ மகிழ்ந்தனர். தாம் அரசரிடம் கூறிய செய்தி உண்மையேயென்று அவரே நேரிற் கண்டு முடிவிற்கு வந்துவிட்டதாகக் கருதினர். மன்னனும் பட்டரை மதியாமல் அவ்விடத்தைவிட்டு அகன்று விட்டான்.

மன்னன் சென்ற பின்னரே அபிராமிபட்டர் இந்த நிலவுலக எண்ணத்திற்கு மீண்டாார். நடந்ததை அறிந்தார்; வருந்தினாார். அம்பிகையை எண்ணியே பாடத் தொடங்கினார். சரபோஜி மன்னர் அன்று இரவு துயிலத் தொடங்கியவுடன் அவர் கனவில் வானத்தில் முழுநிலவு உதயமானாற் போலவும், அபிராமியம்மை தன் திருத்தோட்டைக் கழற்றி வீசி எறிய அதன் ஒளியில் அவ் அமாவாசையிருட்டிலும் தண்ணிலவு ஒளிபொழிவது போலவும், அபிராமி பட்டரீ தம் அருகில் நின்று "அதோ பாருங்கள்; முழுமதி ஒளி வீசுகின்றது" என்ற வானத்தைக்

காட்டி கூறுவது போலவும் உணர்ந்து சரபோஜி மன்னர் கனவு கலைந்து உறக்கத்திலிருந்து எழுந்தார்.

எனவே அபிராமி பட்டர் சிறந்த ஞானி என்பதைத் தேர்ந்து தெளிந்தார் மன்னர் சரபோஜி, பட்டரின் வீடு நோக்கி அவர் கால்கள் தாமே சென்றன. அபிராமி பட்டரை வழிபட்டு அவர்தம் பெருமை யறியாமல் அசட்டை செய்து விட்ட தம் பிழையைப் பொறுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அப்பொழுது தான் அபிராமிபட்டருக்கு அம்பிகையின் திருவருளே அது என்ற எண்ணம் எழுந்தது, "எல்லாம் அவள் திருவிளை யாடல்; திருவருள்" என்று அமைதியாக அடக்கமாக இருந்தார். அபிராமி பட்டரின் அளப்பரிய அம்பிகை அருளை நினைத்த தஞ்சைச் சரபோஜி மன்னர் அவருக்கு விளைநிலங்களை முற்றூட்டாக அளிக்க முன்வந்தார். அபிராமிபட்டர் அவற்றை ஏற்க இசைந்தாரில்லை. அவர் தம் சந்ததியாரின் நன்மையைப் பொருட்படுத்தியாவது அவற்றை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மன்னர் வற்புறுத்தவே, பட்டர் மனமின்றி ஒருவாறு ஏற்றுக் கொண்டார். அபிராமிபட்டர் பரம்பரையினர் இன்றும் அச்சலுகை பெற்றுவருகின்றனர்.

இனி, அபிராமி அந்தாதியின் உட்சென்று காணலாம்.

அபிராமிபட்டர் அபிராமியம்மையை எப்போதும் வந்தித்து வணங்குகின்றார். அவ்வம்மையோ வேதத்திற் பொருந்தும் அரிய பொருளாய், சிவ பெருமானது திருவருள் வடிவாய் உள்ளாள். எனவே நின்றபடியும் இருந்தபடியும் படுத்தபடியும் நடந்தபடியும் அம்மையையே தியானம் செய்வதாய்க் கூறுகிறார். என்றைக்கும் அம்பிகையின் திருவடித் தாமரையினையே வந்தித்து வணங்குவதாகச் செம்மாந்து கூறுகிறார். சிறந்த

அம்பிகை அடியவரான அபிராமிபட்டர். பாட்டைப் படித்துப் பார்ப்போம்:

நின்றும் இருந்தும் கிடந்தும்
நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்
தாள் எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளேஅருளே
உமையேஇமயத்
தன்றும் பிறந்தவளே அழி
யாமுத்தி ஆனந்தமே.

—அபிராமி அந்தாதி: பாட்டு: 10

உலகம் பதினான்கையும் தன் திருவருளால் ஈன்ற தயாபரி அபிராமி என்றும், அவ்வாறு அவனியை அருளால் ஈன்றது போலவே அவ்வருள் உணர்வோடு அவ்வுலகத்தைப் பாதுகாப்பவளும் அவளே ஆவாள் என்றும், பின்னர் இறுதியில் ஊழிக் காலத்தில் உலகை அழிக்கும் திறம் வாய்ந்தவள் என்றும், விடமுண்ட நீலகண்டனுக்கு முன் பிறந்தவள் என்றும், என்றும் வயது மூப்படையாத திருமாலின் தங்கை என்றும், பெரிய தவ நாயகி என்றும், அவளை வழிபடுவது அன்றி வேறு எத் தெய்வத்தை வழிபடல் ஒல்லும் என உரைக்கிறார் அபிராமிபட்டர்,

பூத்தவ ளேபுவ னம்பதி
னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளேபின் கரந்தவ
ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா
முகுந்தற் கிளையவளே

மாத்தவ ளேஉன்னை அன்றிமற்
றோர்தெய்வம் வந்திப்பதே.

—அபிராமி அந்தாதி: பாட்டு: 13

அபிராமி அம்மை. தன் திருவடிகளை வந்து சரணடையும் அடியவர்களுக்குச் சொர்க்கலோக பதவியை அன்போடு தருவாள் என்கிறார் பட்டர்.

வந்தே சரணம் புகும்அடி
யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு..........

—அபிராமி அந்தாதி: பாட்டு: 34

தான் வெறுப்பன செய்தாலும் பொறுமையால் அடியவர்களை ஆட்கொள்ளுங் அருட்டிறம் உடையவள் அம்மை என்கிறார் அபிராமிபட்டர்.

வெறுக்கும் தகைமைகள் செய்யினும்
தம்அடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை.........

—அபிராமி அந்தாதி: பாட்டு: 46

மேகத்தைப் போன்ற, பூவையணிந்த குழற் பாரத்தையுடைய அபிராமியின் கடைக்கண்கள், அத் தேவியின் அடியவர்களுக்கு எல்லாவகைச் செல்வங்களையும் தரும்; கல்வியைத் தரும்; ஒரு நாளைக்கேனும் தளர்ச்சியை அறியாத உறுதியான மனத்தை அளிக்கும்; தெய்வீக அழகை வழங்கும்; மனத்தில் வஞ்சங்கொள்ளாத உறவினரையும் நண்பரையும் நல்கும்; இன்னும் உலகில் எவை எவை நல்ல பொருள்களோ அவை எல்லாவற்றையும் இனித் தரும். இவ்வாறு புகழ்கிறார் அபிராமிபட்டர்.

தனம்தரும் கல்வி தரும்ஒரு
நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும்
தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபி
ராமிகடைக் கண்களே.

—அபிராமி அந்தாதி: பாட்டு: 69

# 12. அம்பிகையின் அருள்

புதுவையிலிருக்கும் தேசமுத்து மாரியம்மனைப் புதுமைக்கவி பாரதியார்,

தேடியுனைச் சரணடைந்தேன், தேசமுத்து மாரி
கேடதனை நீக்கிடுவாய், கேட்டவரந் தருவாய்

என்றும்,

துன்பமே யியற்கை யெனும் சொல்லை மறந்திடுவோம்;
இன்பமே வேண்டி நிற்போம்; யாவுமவள் தருவாள்

என்றும்,

நம்பினார் கெடுவதில்லை; நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம்பெறலாம்

என்றும் பாடியுள்ளார். அம்பிகையை நம்பித் துதித்து, அகங்குளிரப் பாடிக் காதலாகிக் கசிந்து நிற்போமாகில் அவள் அருளைப் பெற்று அவனியில் உய்யலாம் என்பது முன்னோர் கண்ட நன்னெறி என்பது தாமே போதரும்.

திருவேற்காட்டில் அருள்மிகு தேவி கருமாரியம்மன் கொலுவீற்றிருந்து அடியார்களுக்கு அருள் வழங்குகின்றாள். திருஞானசம்பந்தப் பெருமான் தம்தேவாரத்தில் இத்திருத்தலத்தைப் பல படச் சிறப்பித்துள்ளார்.

''வெள்ளி யான் உறை வேற்காடு''
''வில் லதேம், வேடம் கொண்டவன் வேற்காடு'.

"வேத வித்தகன் வேற்காடு!'
''வீழ்சடையினன் வேற்காடு''
''காலனை, வீட்டி னான் உறை வேற்காடு''
''சுடர், வேலி வான் உறை வேற்காடு''
''வில்லி னான் உறை வேற்காடு''
''வீரன் மேவிய வேற்காடு''
''பலி, விரக்கி னான் உறை வேற் காட்டூர்"
''வேற வானுறை வேற்காடு''
''விண்ட மாம்பொழில் சூழ்திரு வேற்காடு''

என்றும், அருணகிரிநாதரால்,

''வேதாந்த வறாராம நாதந்தா வருள்
பாவு வேலங்கா டுறை சீல பெருமானார்''

என்றும் அருள்மிகு சுவாமிகள் கருமாரி தாசரால்,

"வேற்காட்டுத் திருத்தலத்தைக் கேட்டாலும் பெருவினைகள்
விரைந்தோடும் விதியும் மாறும்
வேற்காட்டுத் திருத்தலத்தைக் கண்ணுற்றால் எழுபிறவித்
துன்பமெல்லாம் விரைந்து வீயும்
வேற்காட்டுத் திருத்தலத்தில் நீரருந்தப் பெரும்பிணிகள்
உடனீங்கிப் புனித மோங்கும்
வேற்காட்டுத் திருத்தலத்தில் திருநீற்றை மெய்யணிந்தால்
பேரின்ப மெய்தலாமே"

என்றும் பாடப்பெற்ற திருத்தலமாகும் திருவேற்காடு.

இத் திருவேற்காட்டில் திருக்கோயில் கொண்டுறையும் கருமாரியம்மையைக் குறவஞ்சியாலும், சதகத்தாலும் உளங்குளிர உவந்து உவந்து பாடுகின்றார் அருட்கவியாய் நம்மிடையே நடமாடி வந்து பாமழை பொழியும்,

பரம்பொருளின் அடியார் அருள்மிகு கருமாரிதாசர். அண்மையில் அருட்கனிச் சிறப்பை அவர் வடித்திருக்கும் அழகினை அவர் வாக்கால் அறிவதே உவப்பும் உறுதியும் ஒருங்கே தருவதாகும்.

"கருதரிய மாயையைக் கணத்தினில் போக்கியருள்
கனநிலை யுணர்வளிக்கும்
காமாதி பிணிகளைக் கண்கலங்கச் செய்யும்
கருத்துணர் வளிக்கு மன்றே
கரும்பிணி யெலாம் நீக்கும் வஞ்சமுறும் பகைவரைக்
கதியற்ற திகைப்பி லாழ்த்தும்
கலைநாதத் தத்துவ முறையெலாம் உணர்த்தியருட்
கடலினில் மூழ்கச் செய்யும்
அருட்சோதி நிலையீந்து அஞ்செழுத்தின் மூலம்
அறிவுற உணர்த்து மன்றே
அருளரசிக் கருமாரி அருட்கனிச் சிறப்பியல்பை
அரனாலும் சொல்ல வெளிதோ
திருமகளும் கலைமகளும் வெண்கவரி வீசவும்
சிங்கவா சனத் தமர்ந்து
திருநீற்று வேற்காட்டில் அரசோச்சும் செல்வியே
தேவிகரு மாரி யுமையே''

—ஸ்ரீதேவி கருமாரியம்மன் சதகம் : 47

அருள்மிகு கருமாரிதாசர் "சேரவாரும் ஜகத்தீரே" எனும் தாயுமான தயாபரர் குரலில் தைப்பூசத் திருநாளில் சங்கரியாம்—வேண்டியனவெல்லாம் விரும்பிக் கொடுக்கும் அருட்சக்தியாம் அருள்மிகு கருமாரியம்மனின் பெருமையினை நாமணக்கப் பாமணக்கப் பாடியின்புறுகிறார். நம்மையெல்லாம் இடித்துரைத்து அம்பிகையின் அருள் பெற்றுய்யும் செந்நெறியினைச் சிறக்கச் செப்புகின்றார்.

நம் அவல வாழ்வு நீங்கி அருள்வாழ்வு தொடங்கப்பெற நன்னெறி காட்டுகின்றார்.

"மைபூசுங் கண்ணாரின் வலைப்பட்டு மதியற்று
மனம் போல போக்கி பெற்று
மாஞான நிலையற்று அஞ்ஞான நெறியுற்று
மயலுறும் வாழ்வு பெற்று
கைப்போத கத்துற்று காசினியெலாம் புகழும்
கவின் வாழ்வை நிலையென் றெண்ணி
காலத்தை வீணாக்கி காலன்வரும் நாளினில்
கவலைபெரி தாகி நொந்து
செப்பரிய வசனமெல் லாம் சொல்லி வருத்தமுறும்
செயலினால் பயனு முண்டோ
சிந்தையை யடக்கியே திருநீற்று நெறிநின்று
தேவிகருமாரியாளைத்
தைப்பூசத் திருநாளில் கண்ணாரக் காண்போர்கள்
தவமுற்ற முனிவ ரன்றோ!
சந்ததம் அகத்தியர்க் கருள் புரியும் வேற்காட்டுத்
தேவிகரு மாரியுமையே!

—ஸ்ரீதேவி கருமாரியம்மன் சதகம் : 57

"திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்' பெரு வாழ்வு வந்ததென்று மகிழ்ந்தார் திருநாவுக்கரசர் பெருமான். அவுணர்தம் அமண்சமயத் தொடர்பினை யறுத்துப் பழம் பெருஞ் சமயமாம் சைவ சமயத்திற்கு வரத்துணையாயிருந்தது திலகவதியார் தந்த திருநீற்றுச் செல்வமேயாகும். அதுபோன்றே இந்நாளில் அருள்மிகு கருமாரியம்மை; தன்னை நாடி வரும் அடியவர்க்கு திருநீற்றுப் பேரொளியினை வழங்கி ஆட்கொள்கின்றாள் என்று நெக்குருகிப் பாடுகின்றார் அருட்கவி கருமாரிதாசர்.

"கருவுற்ற நாள்முதல் புரிகின்ற பாவமும்
கருதரிய முற்ப வத்தில்
பெருமலை யெனத் திரளும் பெரும்பாவப் பிணிகளும்
பேசரிய பழிபா வமும்
எருவுற்ற நாயேனை அதலங்கழித் தின்னலில்
உருட்டிநிலை குலையச் செய்து
உணர்வற்று உள்ளத்தின் வலியற்று மனிதநிலை
வீரமு மிலாத நிலையில்
மருளுற்ற விலங்கென்ன வாட்டியெனை யாட்டுதே
மகமாயி கருமாரியே!
மாசூலி பயங்கரி மனோன்மணி வேற்கண்ணி
வாலையே தேவ மாரி
திருநீ றளித்தென்னை ஆட்டுகொண்ட அருளரசி!
சித்தாந்த வேத மாரி
சிற்சபை செல்வியே வேற்காட்டு அன்னையே
தேவிக்கரு மாரியுமையே"

—ஸ்ரீதேவி கருமாரி அம்மன் சதகம் : 95

ஸ்ரீதேவி கருமாரி அம்மனின் அருளை நயந்து நிற்போம்.

"எங்கெங்கும் புகழுற்று இன்புற்று
இகபர நலமும் பெற்று......
"திருநீற்று முறைமையால் சீரின்பம்
பெற்று வாழ்வோம்"

என்று கூறுகின்றார் தண்டமிழ்க் கலை கைவந்த சதுரர் அருள்மிகு கருமாரிதாசர் அவர்கள்.

இத்தகு பெருமைமிகு தேவி கருமாரி இன்று திருவிளஞ்சியம்பாக்கத்தில் இரண்டாம் படைவீடு கொண்டு வீறுபெற விளங்குகின்றாள். இத்தலத்தில்

தேவி கருமாரி கஸ்யப முனிவருக்கு இளம் சிங்கத்தின் மீதமர்ந்து திரிசூலம், உடுக்கை, ஞானவாள், பொற் கிண்ணம் ஏந்திக் காட்சியளித்தாள். கஸ்யப மகரிஷி மகிழ்ந்தார். இன்று பல்லாயிரக் கணக்கான மக்கள் தேவியின் அருள் பெற்று துன்பம் நீங்கி, இன்பம் ஓங்க வாழ்வது கண்கூடு.

''அவனருளாலே அவன்தாள் வணங்கி''

என்பது திருவாசகம். இறையருளை இறையருளாலே பெற்றுத் துய்த்து உய்வோமாக!

# 13. உமறுப்புலவரும் ஒண்டமிழும்

## முன்னுரை

> ''செந்தமி ழாலே சீறா சிறப்புடன் பனுவல் செய்தே
> உந்திய புகழ்பெற் றோங்கும் உமறு''

எனப் பாராட்டப் பெற்றுள்ள உமறுப் புலவர் செய்துள்ள சீறாப்புராணத்தை இஸ்லாமியக் காவியம் என்பதினும் இன் தமிழ்க் காவியம் என்றே கூறலாம்.

கவிதையை வரையறுக்கும் மேலை நாட்டு அறிஞர்கள் தேர்ந்த சொற்களைத் தேர்ந்த இடத்தில் தேர்ந்த முறையில் இட்டு யாப்பது கவிதை என்று கூறுவர். இன் தமிழ்ச் சொற்களுடன் அரபி, பார்சி சொற்களைப் பெய்து உமறுப்புலவர் யாத்துள்ள சீறாப்புராணத்தில் அவர்தம் சொல்லாட்சித் திறனைக் காண்போம்.

## சொல்லாட்சியின் இன்றியமையாமை

உரைநடையில் சொற்கள் நடமாடுகின்றன என்றும், கவிதையில் சொற்கள் நடனமாடுகின்றன என்றும் கூறுவர். காட்டில் மயிலாடும் அழகுக் கட்சியைச் சிற்பி, ஓவியர், பாடகர், கவிஞர் ஆகிய நால்வரும் கண்டால் அவர்கள் தம்முடைய ரசனையைத் தனித்தனியே எவ்வாறு வெளிப் படுத்துவார்கள் என்று கூறியுள்ள டாக்டர் மு.வ. அவர்கள் கவிதை பற்றிக் குறிப்பிட்டிருப்பது கவிதையில் சொல்லாட்சியின் இன்றியமையாமையை உணர்த்துவதாக உள்ளது.

"சிற்பத்திறன் உடையவராக இருந்தால் மண்ணோ மரமோ கல்லோ இரும்போ கொண்டு மயிலின் உருவத்தையே அமைத்து அதன் அழகையும் ஆடலையும் படைத்துக்காட்டுவார். நாட்டியத் திறன் வல்லவராக இருந்தால் அந்த மயில் போலவே அசைந்து அசைந்து ஆடிக் காட்டுவார். ஒலிகளின் ஒழுங்கையும் இனிமையையும் உணர்த்தும் திறன் பெற்ற இசைக்கலைஞராக இருந்தால் மயில் ஆடும்போது அசைந்த அசைவுகளின் அழகுக்கு ஏற்பச் சிலவகை ஒலிகளை எழுப்பி அவற்றில் அந்த அசைவுகளை அமைத்து இசை எழுப்பிக் காட்டுவார். உணர்ச்சிகளுக்குச் சொல் வடிவம் தரும் கவிஞராக இருந்தால் மயிலின் ஆடலும் அழகும் புனைாகும் வகையில் சொற்களையும் அவற்றினூடே ஒலிநயத்தையும் படைத்துக்காட்டுவார்". (இலக்கியத் திறன்; பக்கங்கள் 255—256).

இதனால் கவிதைக்கலையில் சொல்லாட்சித் திறனே தலைமை இடம் பெறுகிறது என்பது தெளிவாகிறது.

### உமறுப்புலவரின் சொல்லாட்சித்திறன்

உணர்ச்சியின் உந்துதலால் உருவாவதே சிறந்த கவிதையாகும். உள்ளத்தை ஆட்கொள்ளும் உணர்ச்சிகள் பலவகைப்படுகின்றன. வன்மையான உணர்ச்சி வெளிப்பட வேண்டிய இடத்தில் வன்மையான சொற்களும், மென்மையான உணர்ச்சிக்கு உரிய இடத்தில் மென்மையான சொற்களும், உணர்ச்சி மிக்க இடங்களில் உணர்ச்சி மிக்க சொற்களும், இனிமையும் அழகும் மிக்க இடங்களில் நயமான சொற்களும் அமைத்துக் கவிதை படைப்பது கவிஞனின் திறமையாகும்.

ஏழு உலகங்களுக்கும் கண்மணியாகத் திகழுவது அரபு நன்னாடு; கண்மணிக்குள் உறைகின்ற உயிராகத் திகழ்வது மக்க மாநகர்; அம் மக்க மாநகரின் கடைத் தெருவில் குவிந்துள்ள பொருட்குவைகள் கண்டோரை வியப்புறச் செய்வன. வியப்பின் சுவை தோன்றுமாறு, உமறுப்புலவர் அப் பாடல்களில் சிறந்த சொற்களைக் கையாண்டிருப்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

''மான்மதக் குவையுஞ் சந்தனத் தொகையும்
மணிக்கருங் காழகிற் றணியும்
பான்மதிக் குழவிக் குருத்தெனக் கதிர்கள்
பரப்பி மதகரி மருப்பும்
தேனமர்ந் தொழுகுங் குங்குமத் தொகையும்
செறிதலால் உயர்ச்சியால் வளத்தால்
ஈனமில் இமயப் பொருப்பெனப் பனைத்தங்
கிருந்தது கடைத்தெருத் தலையே''
—(விலாதத்துக் காண்டம்; நகரப்படலம் :8)

பொருள்களை அடுக்கிச் சொல்லியுள்ள முறைமையும் அவற்றின் சிறப்பைச் சிறந்த அழகிய அடைச்சொற்களால் விரித்துள்ள பான்மையும் பாடலைப் பயிலுங்கால் மலையெனக் குவிந்திருக்கும் பொருள்களைக் கண்டதுபோன்ற மலைப்பையும் இப்பாடல் நம்மிடத்தில் ஏற்படுத்துகின்றது.

சிறந்த புலவர்கள் சிறுசிறு தொடர்களாலும் பெருஞ் சுவையைப் பாட்டில் வடித்துத் தந்து விடுகின்றனர். அத்தகு உவகைச் சுவை கொண்ட பாடல் ஒன்று வருமாறு :

''கண்ணின் மணியே எந்தம் கருத்துறும் அறிவே காமர்
விண்ணினிற் குறைபடாமல் விளங்கிய மதியமேயிம்

மண்ணினுக் கரசே நந்தம் மனைக்குறு செல்வமேயெம்
புண்ணியப் பலனே யென்னப் பூங்கொடி யெடுத்த
ணைத்தார்''
(விலாதத்துக் காண்டம்; இலாஞ்சனை தரித்தபடலம்: 40)

முகம்மது நபியை அவர்தம் வளர்ப்புத் தாயார் அனைத்துப் புகழும் இப்பாட்டில் சிறிய தொடர்களால் முகம்மதுவின் பெருமைகளைச் சிறப்புற எடுத்துரைக்கும் உமறுப்புலவரின் சொல்லாட்சித்திறனைக் காணமுடிகிறது.

காதற் சுவையைக் கவினுறக் காட்டும் கவிதைகளை யாப்பதிலும் உமறுப்புலவருக்கு இணை அவரே என்று போற்றலாம். முகம்மது நபியார் கண்ட கதிஜா பிராட்டியாரின் எழிலை வருணிக்கப் போந்த கவிஞர்,

''தேன்கடல் அமிர்தும் திக்கிற் திகழ்வரை யமிர்துஞ் சூழ்ந்து
மீன் கடல் நடுவிற் றோன்றும் வெண்மதி யமிர்தும் துய்ய
கூன் கட வளையார் வெண்பாற் குரைகட லமிர்தும் சோதி
வான்கட லமிர்தும் ஒன்றாய் வடிவெடுத் தனையபாவை''
—விலாதத்துக்காண்டம்; பாதை போந்த படலம் :11)

என்ற பாடலில் அமிர்து எனும் சொல்லே பலமுறை பயின்று வரும்படி பாடி, அமிழ்தெல்லாம் திரண்ட ஓர் அழகிய பாவையாகக் கதிஜாவைக் காட்டியிருக்கிறார்.

கதிஜா பிராட்டியாரின் குலத்தை மரமாகவும், சுற்றத்தை மரக்கிளைகளாகவும், செல்வத்தை அம்மரத்தில் தழைத்துள்ள இலைகளாகவும், கூறியுள்ள ஆசிரியர், கதிஜாபிராட்டியாரின் செவ்வாயைப் பூவாகவும் கூறி, அப்பூவிற் கனிந்த கனியைக் காட்டிலும் சிறந்த கனியாகக் கதிஜாவை உருவகித்துப் பாடியுள்ள மற்றொரு

பாடலும் ஆசிரியரின் சிறந்த சொல்லாட்சித் திறனை விளக்கி நிற்கிறது.

"குலமெனும் விருக்கம் தோன்றிக்குழூஉச்சியினைப் பணர்விட் டோங்கி
நலனுறு செல்வ மென்னும் நறுந்தழை யீன்று வண்ணச்
சிலைநுதற் பவளச் செவ்வா யனையெனுஞ் செம்பொற் பூவிற்
கலனனி நறவஞ் சிந்தும் கனியினும் கனிந்த பாவை"
விலாதத்துக் காண்டம்; பாதைபோந்த படலம் : 13

விரிந்த கருத்துகளைச் செறிவுற அமைப்பதற்கு ஆசிரியரின் சொல்லாட்சித் திறனே பெரிதும் உதவியுள்ளது.

வன்மை உணர்ச்சிக்கேற்ப வன்மை சொற்களை ஆசிரியர் கையாண்டிருப்பதை,

"காற்றெனப் பறக்கும் ஊழிக் கனலெனச் சீறுங்கொல்லும்
கற்றென வெதிருஞ் செவ்விற் குலவரை யனைத்தும் சுற்றும்
தோற்றிடா விசும்பிற் றாவும் சுழலுமட் டிகிரியென்னச்
சீற்றமுற் றடுத்துப் பின்னும் முன்னுமே திரியு மன்றே"

(நுபுவ்வத்துக் காண்டம்;
உமறுகத்தாபு ஈமான் கொண்டபடலம் : 46

என்ற பாடலில் காணலாம். வல்லின றகரம் மீண்டும் மீண்டும் வந்து. வன்மை உணர்ச்சியைத் தருமாறு ஆசிரியர் படைத்துள்ளார். யாத்திரைப் படலத்ினும காபிர்கள் முகம்மதுவை அடித்துத் துன்புறுத்தியதைப் பாடும்போது வல்லின மெய்களே வரும்படிப் பாடி வன்மை உணர்ச்சியைப் படைத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

''பற்று வார்சிலர் அடருவர் சிலர்கரம் பதிய
வெற்று வார்சிலர் இணைவிரல் மடக்கிமெய் சேப்பக்
குற்று வார்சிலர் அடிக்கடி கொதித்தவர் அலது
சற்று மாறினர் அவர்கொடுங் காபிர்கள் தாமே''

"அடிமின் என்பவர் சிலர்சிலர் ஆதகா திவரை
விடுமின் என்பவர் சிலர்சிலர் அவர்களை வெகுண்டு
பிடிமின் என்பவர் சிலர்சிலர் இவனுயிர் பிசைந்து
குடிமின் என்பவர் சிலர்சிலர் காபிர்கள் குழுமி''

*ஹிஜ்றத்துக் காண்டம்; யாத்திரைப் படலம் : 21, 22*

எதுகையும் மோனையும் அமையுமாறு சீர்களை அமைப்பது சொல்லாட்சித் திறமைகொண்ட கவிஞருக்குக் கைவந்த கலையாகும். ஆயிரக்கணக்கான பாடல்களைக் கொண்டுள்ள இச் சீறாப்புராணத்தில் தொடையழகு மிகுதியும் இடம்பெற்றிருப்பது போற்றுதற்குரியது.

''இவ்வண்ணஞ் சோலை யெல்லாம் எய்திய வருத்தம் கண்டு
மைவண்ணக் குடையார் அந்த மருமலர்த் துடவை புக்கிக்
கைவண்ணங் காட்டிச் சொகைக் காத்தருள் செய்து பாரிற்
செவ்வண்ணப் படுத்த வெண்ணிச் சிறப்புடன் வருக
என்றார்''

*ஹிஜ்றத்துக் காண்டம்; ஒட்டகை பேசிய படலம் : 13*

''கண்ப டைத்தவர் இவரெழிற் காண்பவர் முகத்திற்
புண்ப டைத்தவர் இவர்தமைக் காண்கிலார் புதியோன்
பண்ப டைத்தசொன் மறைநபி பதம்பணி யாதார்
மண்ப டைத்ததிற் படைப்பல ரெனச்சிலர் வகுப்பார்''

*நுபுவ்வத்துக் காண்டம்; மதியை அழைப்பித்த படலம் : 90*

ஆகிய பாடல்களில் எதுகைத்தொடை சிறப்புற அமையுமாறு ஆசிரியர் சொற்களை அமைத்திருக்கின்றார்

"வடிவுறுஞ் செம்பொற் பூவில் வாசம்வந் துறைந்த போலும்
கொடிமலர் அதனிற் சேர்ந்த கொழுநறா நிறைந்த போலும்
கடிநெடுங் கழையிற் செவ்விக் கதிர்மணி தரித்தல்போலும்
மடிகடம் புதல்விக் கின்பப் பருவம்வந் தடைந்த தன்றே''
—ஹிஜ்றத்துக் காண்டம்; பாத்திமாத் திருமணப் படலம் : 10

என்ற பாடலின் மூன்று அடிகளிலும் இயைபுத் தொடை அமையுமாறு பாடியிருக்கிறார்.

உரைநடையில் மீண்டும் மீண்டும் ஒரே வகைச் சொற்களை அமைத்து எழுதுவது. பொருள் விளக்கத்திற்கு வேண்டுவதாகும். கவிதையில் வந்த சொற்களே மீண்டும் வருமாறு அமைப்பது, அணியாக அமைந்து, கவிதைக்கு அழகு கொடுப்பதாகும்.

''வீதியி னழகோ வந்த வேந்தர்கோ னழகோ சூழ்ந்த
மாதவ ரழகோ யாது பெரிதென மதித்துச் சொல்வார்
ஆதிதன் தூதர் ஈன்ற அரிவைதம் மனத்தின் கோலம்
பேதமொன் றின்றிக் காணப் பெற்றதே அழகென் பாரால்''
ஹிஜ்றத்துக் காண்டம்; பாத்திமாத் திருமணப் படலம் : 147

எனும் பாடலில் அழகு என்ற சொல் பலமுறை பயின்று கவிதையை அழகுபடுத்துகின்றது.

ஆசிரியர் இனிய தமிழ்ச் சொற்களை மட்டுமே பெய்து கவிதை யாத்தல், தமிழ்ச் சொற்களோடு அரபி' பார்சி சொற்களைக் கலந்து கவிதை யாத்தல் எனும் இரு முறைகளில் இக் காவியத்தைப் படைத்திருப்பதைக் கற்றவர் உணரலாம்,

''தந்தி மான்மரை யணில்கொடு வரிதக குடும்பு
மந்தி சிங்கராய் கவரிமா வழங்குதே வாங்கு
முந்து மான்மத மென்குசெந் நாய்பணி முண்மா
நந்தி மிஞ்சிய விலங்கினம் கொடுகி மெய்ந் நடுங்கும்"
''வேங்கை சந்தனஞ் சண்பகம் நெல்லிவேய் தான்றி
கோங்க சோகுதேக் காசினி பாடலங் குறிஞ்சி
நாங்கு காரனில் குங்கும மிலவு நாரத்தை
தாங்கும் வேரற வரையொடு வரையிடை சாய்க்கும்''
—விலாதத்துக் காண்டம்; நாட்டுப் படலம் : 5, 6

முதலான பாடல்கள் தூய தமிழ்ச் சொற்களால் யாக்கப்பட்ட பாடல்கள்.

''மெய்த்தவக் குரிசில் நபியிது ரீசு
விருப்புற வுதித்தநன் மதலை
யுத்தமர் மத்தூ சல்குதம் மிடத்துவ்
வொளியுறைந் துலகெலா மிறைஞ்சு
வைத்தபின் மத்தூ சல்குதம் மைந்தர்
மடந்தையர் மடவெடுத் தேந்தச்
சித்திரக் கவின்பெற் றிருந்தலா மக்கு
வயின்சிறந் திலங்குமன் வொளியே''
—விலாதத்துக் காண்டம்; தலைமுறைப்படலம் : 43

முதலான பல பாடல்கள் தமிழ்ச் சொற்களோடு அரபி பார்சி சொற்கள் கலந்து பாடப்பட்டவை. றசூல், ரக்அத் முதலான வேற்றுமொழிச் சொற்களைத் தமிழ் மரபுக் கேற்ப மாற்றியமைத்திருக்கும் பாங்கை பாராட்டலாம்.

ஆசிரியர் நயம்படச் சொற்களை ஆளும் திறமையும் வாய்க்கப்பெற்றவர் என்பதற்கும் பல சான்றுகளைக் காட்ட முடியும்.

"கருங்கடல் நீரையுள் ளெழுந்து கார்க்குலம்
பெருந்தரை எங்கணும் பெய்தல் இல்லையால்
இருந்தபைங் கூழெலாங் கருகி யெங்கணும்
பரந்தது சிறுவிலைப் பஞ்ச மினாதே"

என்ற பாடலில் "சிறுவிலை" என்ற சொல்லாட்சியைக் காண்க. பஞ்சகாலத்தில் பொருள்கள் யாவும் ஆனை விலை, குதிரை விலை விற்பதையே நாம் காண்கிறோம். அதனைக் குறிப்பிடவந்த ஆசிரியர் "பெருவிலைப் பஞ்சம்" எனக் குறிப்பிடுவதே பொருத்தமாகத் தோன்றும். ஆனாலும் பஞ்சகாலத்தில், பொருளை வாங்க வருவோரிடத்தில் பணமும் குறைவாகவே இருக்கும்; அதுபோலவே விற்போரிடத்திலும் பொருள்கள் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கும். பணமும், பொருளும் அருகிய பஞ்சம் என்பதையே ஆசிரியர் "சிறுவிலைப் பஞ்சம்" என்னும் தொடரில் சுட்டியிருக்கும் நயம் போற்றுதலுக்குரியது.

பஞ்சத்தின் காரணமாகத் தாயும் குழந்தைகளும் பிச்சையெடுக்க வேண்டிய நிலை. குழந்தைகள் உண்டு பல நாட்கள் ஆயினமையால், மிகவும் தளர்ச்சியுற்றிருக்கின்றன. பிச்சையேற்க பிறன்கடை நிற்கும் வேளையிலும் தளர்ச்சியின் காரணமாகத் தூக்கம் உண்டாக, நின்றபடித் தூங்குகின்றன. நெருப்பினுள் தூங்குதல் இயன்றாலும், நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிதல்லவா! ஆகவே நின்றபடி தூங்கிய அவ்வேளையிலும், பசி வயிற்றைக் கிள்ள மீண்டும் கைகளை நீட்டிப் பிச்சைக் கேட்க நேர்ந்த இழிநிலைக்காக இதயம் நோகிறது. பஞ்சத்தால் பரிதவிக்கும் குடும்பத்தின் அவலநிலையைப் படம்பிடிப்பதாய் அமைந்துள்ள அப்

பாடலில் ஆசிரியர் அமைத்துள்ள சொல்லாட்சிச் சிறப்பினைக் கண்டு மகிழலாம்.

"மதலைகள் பிறர்மனை வாயி றூங்கிநின்
றிதயநொந் திருகையேந் திரப்பக் கண்டுதாய்
விதிகொலென் றேங்கிட வேறு வேறதாய்ப்
பதிகுலைத் தெறிந்திடும் பஞ்ச காலமே

—விலாதத்துக் காண்டம்; அலிமா முலையூட்டுப் படலம் : 155

'பதிகுலைத்தெறிந்திடும்'' என்ற சொல் பெய்து பஞ்சத்தின் கொடுமையைக் காட்டியுள்ள ஆசிரியர் திறமை போற்றுதற்குரியது.

## முடிவுரை

''கவிஞர்கள் ஆளும் சொற்களின் எண்ணிக்கையால் (மதிப்பு) உயர்வதில்லை. அந்தச் சொற்களை ஆளும் முறையாலேயே உயர்ந்து விளங்குகின்றனர்" என்பார் ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் அவர்கள்.

சிறந்த சொற்களைக் கையாண்டு, சீறாப்புராணத்தைச் சிறந்த காவியமாகப் படைத்தருளிய உமறுப்புலவர் உயரிய புலவராகத் திகழ்கிறார்.

# 14. அருட்பா-சீறாப்புராணம் ஒப்புமை நோக்கு

பாரத நாடு பழம்பெரும் நாடு. இந்நாட்டில் வாழும் மக்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே கடவுள் நம்பிக்கையோடு வாழ்ந்து வருகின்றனர் பல்வேறு மதங்களை—சமயங்களைச் சேர்ந்தவர்கள் பல்வேறு கடவுளர்களை வழிபட்டாலும் அவரவர் தம் வாழ்க்கையினை அமைதியோடு நடத்தி வருகிறார்கள். ஞானத்திலும் பரமோனத்திலும் நம் பாரத நாடு, பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாரதியாரும் பாடினார்.

முதலாவதாக சீறாப்புராணக் கடவுள் வாழ்த்துப் பாடலை எடுத்துக்கொள்வோம்.

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்பந் துன்பமற்றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்துள வுறைந்து
பிறப்பிறப் பொன்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே

இந்தப் பாடல் சீறாப் புராணத்தில் கடவுள் வாழ்த்துப் பாடல் ஆகும். இஸ்லாமியர்களின் ஒப்பற்ற பெரியோரான மகம்மது நபி அவர்களின் வரலாற்றைக் கூறுவது

சீராப்புராணமாகும். 'சீறத்' என்ற அரபுச் சொல்லே 'சீரா' என்று ஆனது 'சீறத்' என்ற சொல்லுக்குப் 'புகழ்' என்பது பொருளாகும். தூய வாழ்க்கை வாழ்ந்து புகழ் எய்திய ஒருவரின் வரலாற்றை விளக்குவது சீராப்புராண மாகும். எனவே, சீராப்புராணம் என்றால் பெரியார் புகழ் விளக்கும் பழைய வரலாறு என்று ஆகும். நபிகள் நாயகத்தின் பிறப்பு, வளர்ப்பு, வெற்றி, செய்தி முதலிய வற்றைக் கூறும் இந்நூலினைத் தமிழில் இயற்றிய புலவர் உமறுப்புலவர் ஆவர். இவர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; எட்டையபுரத்து அரசவையில் இருந்த புலவருள் ஒருவர். இதே எட்டையபுரத்து அரசவையில் ஆதரவு பெற்றவர்தான் இந்த நூற்றாண்டின் முற்பகுதி யில் வாழ்ந்துமறைந்த பாரதியாரும். எனவே, புலவர்களை வழிவழியாக ஆதரித்துப் போற்றி வந்த எட்டையபுரத்து அரசவை ஆதரவு பெற்ற புலவராம் உமறுப் புலவர் இயற்றிய சிறந்த நூல் சீராப்புராணமாகும்.

இனிப் பாடலின் உள்ளே நோக்குவோம். முதலாவ தாக இந்தப் பாடலில் வணக்கத்திற்குரிய அல்லாவின் அருமைப் புகழ் பேசப்படுகின்றது.

உலகில் பொருள்கள் பல உள்ளன. பொருள் என்றால் பொதுவாகப் பணத்தைக் குறிக்கும். இந்தப் பணம் இந்த உலக வாழ்க்கைக்கு மிகவும் வேண்டப்படுவதாகும். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார். திருவள்ளுவர். ஆனால் இந்தப் பொருளாகிய செல்வம் உண்மையான செல்வமாகுமா? நிலையாக நிலைத்திருக்கும் பொருளாகுமா? அழியாத பொருளாகுமா? என்றால் இல்லை என்று கூறிவிடலாம். 'ஆறிடும் மடுவும் போல் ஆம் செல்வம்' என்பர் பெரியோர் யாரிடமும் செல்வம் நிலைத்து நிற்பதில்லை. செல்வம், 'செல்வோம்' என்றுகூறி

ஒருவரிடமிருந்து போய்விடுகிறது. எனவே அதனை மெய்யான பொருளாகச் சொல்ல முடியாது. இது போன்றே உலகில் நாம் காணும் ஒவ்வொரு பொருளும் அழியக்கூடிய தன்மை உடையதாகும். ஏன்? மனிதர் களையே எடுத்துக் கொள்வோமே;

**நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும்**
**பெருமை யுடைத்து இவ் வுலகு**

என்று திருவள்ளுவர் கூறுவது போன்று நேற்றைக்கு இருந்தனர் இன்றைக்கு இல்லை. இதே போன்று 'இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பார் என்று எண்ணவே சதமில்லை. நெஞ்சே!" என்று கூறுவர் அனுபவப்பட்ட பெரியவர்கள். எனவே இந்தவுலகில் மெய்ப்பொருளாகக் கருதத் தக்கது இறைவன் என்ற ஒரு பேரருள் பெருந்திறமேயாகும். மெய்ப் பொருளாக விளங்குபவர் ஒப்பற்ற உயரிய கடவுளாவர். எனவே உமறுப்புலவர் இறைவனை முதலில் **'சிறந்த மெய்ப்பொருள்'** என்றார்.

அடுத்து ஆண்டவனை 'அழிவிலா மணியே' என்றார். மணிகள் பல வகைப்படும். மாணிக்கம், வைரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம் முதலிடன வெல்லாம் மணிகள் என்று கூறப்படும். இவற்றைச் சேர்க்க வேண்டும் என்பதில் அன்றிலிருந்து இன்று வரை மனிதனின் முயற்சியும் ஆசையும் குறைந்ததாகத் தெரிய வில்லை. ஆனால், இப்படிப் பாடுபட்டுச் சேர்க்கும் இவ் விலையுயர்ந்த மணிகள் அழியாத தன்மை வாய்ந்தனவா என்றால் அதுதான் இல்லை. அழிவிற்கு ஆளாகும் இம் மணிகள் மனிதனை ஆட்டி அலைக்கழித்து மனித மனத்தின் அமைதியையே அழித்துவிடுகின்றன. எனவே,

கடவுள் ஒருவர்தான் அழிவிலாத மணியாக நின்று மனிதனின் மனத்தில் அமைதியெனும் நிலையினை அருளுகின்றார்.

மூன்றாவது தொடர் தெரிந்து முக்காலமும் உணர்ந்து துறந்தவர் இதயாசனத்து இருந்தவன் என்பதாகும்.

வாழ்க்கையில் ஒருவரைத் தெரிந்துகொள்வது வேறு; உணர்ந்துகொள்வது வேறு. தெரிந்துகொள்வது என்பது மேற்போக்கான அறிமுகமாகும். கண்ட மாத்திரத்தில் ஒருவரைத் தெரிந்துகொள்ள முடியும்; ஆனால் அவரோடு நெருங்கிப் பலமுறை பழகினால்தான் அவரை உணர்ந்து கொள்ள முடியும். அதுவும் உணர்ச்சியோடு அளவளாவி நெருங்கிப் பலமுறை பழகிய பின்னரே ஒருவரை உள்ளவாறு உணர்ந்துகொள்ள முடியும். எனவே உணர்தல் என்பது ஆழ்ந்த பொருளைத் தருகின்றது. இந்த உலகத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றார்கள். அதாவது நல்ல பெரியவர்கள்-சான்றோர்கள்-தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பெரியோர்கள் வாழுகின்ற காரத்தினால்தான் இந்தவுலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது_ நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்னு கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் சங்ககாலப் பாண்டிய மன்னன் ஒருவனும் பாடிவிட்டுப் போயுள்ளான்.

இத்தகைய பெரியவர்கள் இறந்த காலம், நிகழ் காலம் எதிர்காலம் என்று மூன்று காலங்களையும் முற்ற அறிவார்கள். நமக்கு இறந்த காலத்தில் நடந்தவை தெரியும்; நிகழ்காலத்தில் நடைபெறுவதை ஓரளவு அறிகிறோம்; ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்க

விருக்கின்றது என்பது ஓரளவும் தெரியாது. ஆனால் எப்பொருளையும் தெரிந்து, வாழ்க்கையின் பரந்துபட்ட அனுபவத்தால் முக்காலங்களையும் முறைப்பட உணர்ந்த பெரியோர்கள் இந்தவுலகின் நிலையற்ற தன்மையை யறிந்து இந்தவுலக இன்பங்களைத் துறந்து நிற்பர். திருமூலர் என்ற சான்றோர் இந்த உலக இன்பங்களின் தன்மையினை ஒரே பாட்டில் அழகாகக் குறிப்பிட்டு உள்ளார்.

அடப்பண்ணிவைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தனங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

—திருமந்திரம் : 148

தம் மனைவியிடம் அறுசுவையோடு கூடிய நல்ல உணவினை ஆக்கச் சொன்னார் ஒரு வீட்டின் தலைவர். ஆருயிர் மனைவி அருமையாகச் சமைத்த உணவினை இனிதாக உண்டு மகிழ்ந்தார். பின்னர் மனைவியோடு இன்பப் பேச்சுகள் பேசிக்கொண்டிருந்தார். அப்போது இடப்பக்கத்தே சிறிது நோவு எடுக்கின்றது என்றார். அவ்வளவுதான்! சிறிது நேரத்தில் அவர் வாழ்வு முடிந்து விட்டது. இவ்வாறு திருமூலர் இவ்வுலகில் உயிர்களின் நிலையாமையினை நம் நெஞ்சில் தைக்கும் வண்ணம் சொல்லுகின்றார்.

எனவே, உலக வாழ்க்கையின் இயல்பினைக் கண்டவர்கள் இவ்வுலக இன்பங்களைத் துறந்து வாழ்வார்கள்.

இவ்வாறு துறந்தவர் தம் மனமாகிய இருக்கையிலே இறைவன் நிச்சயமாகக் கோயில் கொண்டு வாழ்கின்றான். இதனை நன்கு உணர்ந்தே திருமூலர், 'உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்' என்றும், தாயுமான தயாபர சுவாமிகள்,

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்—அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே

என்றும் பாடினர். வடலூரர் வள்ளற்பெருமானார் நம் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்,

பொய்வந்த உள்ளத்திற் போகாண்டி—அந்தப்
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி

என்று இறைவன் பொய்யுள்ளத்திற் புகாத நிலையினைப் பொருந்தமுறப் புகன்றுள்ளார்.

அடுத்து, இறைவனைத் 'தொடர் இன்ப துன்பம் அற்றவன்' என்று உமறுப்புலவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உலகில் நன்மை தீமை என்ற இரண்டும் உண்டு. பாவ புண்ணியங்களே நம்மைத் தொடர்ந்து வருகின்றன என்பர். இருளும் ஒளியும், உண்மையும் இன்மையும், இன்பமும் துன்பமும் இவ்வுலகில் எந்நாளும் உண்டு. மனித மனம் இன்பத்தையே ஏங்கி நாடி அலைகின்றது. துன்பம் வருமானால் தாங்கிக்கொள்ளும் ஆற்றலின்றிக் கலங்குகின்றது. ஒவ்வொருவர் வாழ்விலும் இன்ப துன்பங்கள் தொடர்ந்து வருகின்றன ஆனால் இறைவனோ இன்பதுன்பங் களைக்கடந்தவன்; வேண்டுதல்

வேண்டாமை இல்லாதவன்; இன்புறு சோதியாக இணையற்று விளங்குபவன். எனவே, இன்ப துன்பங்கள் இறைவனை ஒருநாளும் ஆட்டி அலைக்கழிப்பதில்லை.

அடுத்து, 'பிறந்தபல் லுயிரின்மனத் துளவுறைந்து பிறப்பிறப் பொன்றிலாதவன்!' என்றார் உமறுப் புலவர்.

இவ்வுலகில் எண்ணற்ற உயிர்கள் பிறக்கின்றன; வளர்கின்றன; வாழ்கின்றன; இறுதியில் மடிந்து முடி கின்றன. தோற்றம் பெற்ற உயிர்களில் எல்லாம் இறைவன் உறைகின்றான். 'இறை' என்ற சொல்லிற்கே 'தங்குதல்' என்பது பொருள். இறைவன் தான் தோற்றுவித்த—படைப்பித்த எல்லாவுயிர்களிலும் தங்கி உறைகின்ற காரணத்தினால்தான், 'இறைவன்' என்று வழங்கப் படுகின்றான். 'மனத்தளவு உறைந்து' என்றால் 'மனமாகிய எல்லையில் தங்கி' என்பது பொருளாகும். தாயுமானவரும் பார்க்கின்ற மலரில் எல்லாம் பரமனே உறைவதாகவும், எனவே தாம் அப் பனிமலரைப் பறிக்கவும் உள்ளங் கூசுவதாகவும் பாடியுள்ளார்.

பிறப்பு இறப்பு என்ற இந்த இரண்டும் உலகில் எல்லா வுயிர்க்கும் வருவனவாகும். ஆனால் இறைவனோ எனில் பிறப்பும் இறப்பும் இல்லாதவனாவான். இதனையே திருவாசகம் தந்த மணிவாசகப் பெருந்தகையார், 'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி' என்றார். சிட்டுக்குருவிக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை யாகப் பாடவேண்டும் என்று ஒரு புலவரைக் கேட்க அவர் 'பிறப்பிறப்பில்' என்றார். இத்தொடர் சிட்டுக்குருவிக்கு எவ்வாறு பொருந்துகின்றது என்று பார்ப்போம். சிட்டுக் குருவிக்குப் பிறப்பு இறப்பில்—அதாவது வீட்டின் இறவாணத்தில் ஆகும். சிட்டுக்குருவி இறவாணத்தைத்

தானே பிறக்குமிடமாகக் கொள்கிறது! இத்தொடர் ஆண்டவனைக் குறிக்கும்பொழுது பிறப்பு—இறப்பு—இல்—இல்லாதவன் என்று ஆகும். வடலூர் வள்ளலார் இறைவனை 'பிறப்பும் வளர்ப்பும் இல்லாதவன்; அவன். அருட்பெருஞ் சோதியன்; சாதி சமயச் சண்டை வேண்டா, சன்மார்க்க நெறி நடப்போம்; வாரீர்' என்று உலகவரை நோக்கி அறைகூவல் விடுகின்றார். அப்பாடல் வருமாறு.

ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் சோதியென் னுளத்தே
நீதியிற் கலந்து நிறைந்தது நானும்
நித்தியன் ஆயினேன் உலகீர்
சாதியும் மதமும் சமயமுந் தவிர்த்தே
சத்திய சுத்தசன் மார்க்க
நீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
விளம்பினேன் வம்மினோ விழைந்தே.

இது மட்டும் அல்ல; ஒவ்வொரு சமயத்தவரும் ஒவ்வொரு பெயர் கூறி ஒவ்வொரு கடவுளை வணங்கி வழிபட்டாலும் தெய்வம் ஒன்று என்பதே பெரியோர்கள் கண்ட உண்மையாகும். திருநாவுக்கரசர், "கடவுள் ஒருவரேதான்; பல கடவுள்கள் இல்லை; ஒரே கடவுள்தான். தம் பேராற்றலால் கடவுள் உலகைப் படைத்துள்ளார். அந்த ஒரே கடவுளே பல வடிவங்களில் பல பெயரில் காட்சி தருகிறார்; பல செயல்களைச் செய்து வருகிறார். படைத்தல், காத்தல். அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் சிறப்பாகச் செய்துவருகிறார்" என்று குறிப்பிடுகின்றார். பண் சுமந்த அப் பாடல் வருமாறு :

நாதனாய் உலகம் எல்லாம் நம்பிரான் எனவும் நின்ற
பாதனாம் பரமயோகி பலப்பல திறத்தினாலும்
பேதனாய்த் தோன்றினானைப் பெருவேளூர் பேணினானை
ஓதநா வுடையன் ஆகி உரைக்குமாறு உரைக்கின்றேனே.

—திருநேரிசை : நான்காந் திருமுறை : திருப்பெருவேளூர்
திருநாவுக்கரசர் தேவாரம்: 579

இத் தன்மை வாய்ந்த இறைவனை 'மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து மண்ணினில் மதி மறந்தவரே' என்கிறார் உமறுப்புலவர்.

நம்மை வாழச் செய்யும் இறைவனை நினைத்து வணங்கி வாழ்தலே முறையாகும்.

பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந் தோங்கும்,
நமச்சிவாயத்தை நான் மறவேனே.

என்கிறார் இராமலிங்கசுவாமிகள். பெற்ற தாயைப் பிள்ளை மறந்தாலும், பிள்ளை தாயை மறந்தாலும், உடலை உயிர் மறந்தாலும், உயிரை அதனோடு பொருந்தியிருக்கின்ற உடல் மறந்தாலும், அரும்பாடுபட்டு கற்ற கல்வியை மனம் மறந்தாலும், எப்போதும் இமைக்கும் கண்கள் இமைக்க மறந்து போனாலும், உடலுக்குள்ளே உயிருக்கு உயிராய் உறையும் இறைவனை மறக்க

மாட்டேன் என்கிறார் வடலூர்ப் பெருமானாகிய வள்ளலார்.

இறைவனைத் தன் முனைப்பால்—தான் என்ற ஆணவத்தால் — செல்வச் செழிப்பால் — இன்பதுன்ப வாழ்வால் மறந்தவர் இறைவன் உறையும் மோட்சவுலகத்தையும் மறந்து, தாம் வாழும் மண்ணுலகத்தையும் புத்தி மயங்கிய புன்மையாலே மறந்தவர் ஆவார்கள் என்று உமறுப்புலவர் அழுத்தமாக அறிவுறுத்துகின்றார்.

நினைப்பவர் மனமே கோயிலாகக் கொண்ட இறைவன் ஒருவனே.

எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென்று அறியீர்''

என்ற இராமலிங்க சுவாமிகள் திருவாக்கினை நோக்குவோமாக.

மேலும் வணக்கத்திற்குரிய முகம்மது நபிகள் நாயகம் அவர்கள் இந் நிலவுலகத்திற்கு வழங்கிய செய்தியாகத் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டுள்ள பாடல் வருமாறு:

அரபிய நாட்டில் தோன்றிய
ஆண்டவன் ஒருவன் என்னும்
மரபினை வாழச் செய்த
மகம்மது நபியே! போற்றி!

தலையினிற் பொதுமை மல்கிச்
சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த
கருணையே! போற்றி! போற்றி!

இதுகாறும் கூறியவற்றால் சீறாப்புராணத்தில் உமறுப்புலவர் கூறும் கடவுள் வாழ்த்துப் பாடலின் கருத்தினை ஒருவாறு உணர்ந்து கொண்டோம். இறைவன் ஒருவன்; அவன் பிறப்பு இறப்பு அற்றவன்; அவனை வணங்கி வாழ்வதே இவ்வுலக உயிர்கள் உய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல் என்பதனை இப்பாடல் வழியே நாம் அறிகிறோம்.

இசை வடிவான இறைவனை இசையோடு பாடி வணங்கி வாழ்வோமாக!



## சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப்பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ.ஆனர்சு. அங்கு ! முதல் வகுப்பில் தேறிய முதல்வர், ‘குறுந்தொகை’ பற்றிய ஆய்வுரைக்கு 1963-ல் எம்.லிட்., பட்டமும், ‘சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்’ பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள், நல்ல நடை கொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னால் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருமாவார்.

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருத் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், ‘தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல். ‘சங்ககால மகளிர் நிலை’ பற்றிய ஆராய்ச்சி. ‘இலக்கிய அணிகள்’ என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்) சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு!

—மா.செ.